# Ilharul Haq

## *By:-* As-Sahaik Moulvi Shaik Abdul Quadir Sufi Hazrat Kahiri Radiallahu Anhu.

# இள்ஹாருல் ஹக்

*(சத்தியப் பிரகடனம்)*

*தொகுப்பாளர்:-* **மௌலானா மௌலவி அஷ்ஷெய்க் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹழ்ரத் காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.**

சர்வ புகழும் சர்வலோக இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே, இறுதித்தீர்ப்பு நாளின் நற்பேறு இறைபக்தர்களுக்கே, கருணையும் சாந்தியும் இறையருள் தூதர்களின் சிரேஷ்டர் எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களது கிளைஞர்கள், தோழர்கள், இல்வாழ்க்கைத் துணைவிகள், சந்ததிகள் இறுதிநாள் வரை அவர்கள் மார்க்கத்தையுடையவர்கள் அனைவர்கள் மீதும் நிலவுக!

*அப்பால் அறிந்து கொள்!*

சுருதி, யுக்திப் பிரமாணத்தாலும், இறைவனையறிந்த மெய்யடியார்களான ஆரிபீன்களின் தவ்கு எனும் அனுபவ அறிவினாலும் அறியப்பட்டிருக்கிறது. எதார்த்தத்தில் பரம்பொருளான அல்லாஹுதஆலாவும், அவனுடைய செயல்களுமேயல்லாது வேறொன்றுமில்லை. (ஆரிபீன்களின் தவ்கு என்றது ஹக்காகிய மெய்ப்பொருளை அவனுடைய மள்ஹரு (வெளியாகுந் தானம்) களான சிருஷ்டிகளில் தரிசிக்கும்படி அவர்களை அவனில் ஐக்கியம் செய்விக்கின்ற அதிநுட்பமான ஓர் அரிய சக்தியாம் ஹக்கல்லாததை விட்டும் அகம்பராக்கொழிந்தாலேயன்றி அந்தச் சக்தியை மனிதன் அடைந்து கொள்ள மாட்டான். உதாரணமாக, சுவையை அறியும் சக்தியானது ஓர் உணவின் ருசியை அறிவதற்கு

மற்றோர் உணவை ருசிப்பதை விட்டும் அது நீங்கி இருக்க வேண்டும். அதாவது மில்அபா எனும் கருவியிலிருந்து சுரக்கின்ற அமுதத் திரவம் மற்றொரு உணவை ருசிப்பதில் நின்றும் அது நீங்கி இருந்தால் தான் இந்த உணவின் சுவையை அது உள்ளபடி உணரும். நோயாளிகளுக்கு வாத, பித்த, சிலேப்பினங்களான தாதுக்களில் ஒன்றின் சேட்டையினால் அவர்களின் சுவையறியும் சக்தியே தப்பிப் போவதை நாம் பிரக்தியட்சமாகக் காணுகின்றோம். இதே போல் தான் ஸாலிகு எனும் யோக நடை நடப்பவனிடத்தில் அந்தச் சக்தியுமாம் அல்லாஹ்தஆலா உண்மையானவன் (உண்மை இன்மைக்கு எதிர்) வாஜிபுல் உஜூது ஆனவன். (எப்போதும் உளதாயிருப்பது அவசியமானவன்) அவனுக்கு எதிரானவன் மும்தனிஉல் வுஜூதாகும். (இன்மை அவசியமானவனாகும்.)

வாஜிபுல் வுஜூதான மெய்ப்பொருளாகிய அல்லாஹ்வுக்கு உருவமும் காலதேச எல்லைகளும் வேறெவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லை. அப்படி இருப்பதோடு பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படாத அரூபியான ஆன்மாவில் சொர்ப்பனத்தில் நாம ரூபாதிகளான சொர்ப்பன உலகம் தோன்றியும் அதன் அரூபத் தன்மை கெடாதிருப்பது போல் அந்த அரூபியான வாஜிபுல் வுஜூதில் அதன் அரூபத் தன்மை கெடாமல் மும்கினுல் வுஜூது (உண்மை இன்மை இவையிரண்டும் அவசியமில்லாதது, ஒரு காலத்தில் தோன்றி குறித்த கால அளவுக்கு இருந்து பின் மறையக் கூடியது) ஆகிய சிருஷ்டிகள் தோன்றுகின்றன.

அந்த வாஜிபுல் வுஜூதான ஹக்குதஆலா தனது இல்மில் (அறிவில்) இருந்ததை ஒன்றன்பின் ஒன்றாகவும் ஒன்றன் வழியாக ஒன்றாகவும் வெளிப்படுத்துகிறான்-படைக்கிறான். முந்திய சிருஷ்டி இரண்டாவது சிருஷ்டிக்கு ஸபபு (காரணம்) ஆகவும், இரண்டாவது முந்தியதற்கு முஸப்பபு(காரியம்) ஆகவும் இருந்த போதிலும், முந்தியது இரண்டாவதைப் படைக்கவில்லை. முந்தியதை எப்படி ஹக்கு தஆலா படைத்தானோ அதேபோல் இரண்டாவதையும் அவனேதான் படைத்தான். முந்தியது எப்படி அவனுடைய தத்துவம் எனும் கரத்தில் அகப்பட்டிருக்கிறதோ, அதேபோல் பிந்தியதும் அவனுடைய தத்துவக் கரத்திலேயே அகப்பட்டிருக்கிறது. அவனன்றி ஓர் அணுவும் ஆடவோ, அசையவோ முடியாது. இப்படி ஒன்றன் பின்னொன்று- அதன்பின்

மற்றொன்றாக இப்படியே சங்கிலித் தொடரைப் போல் வெளியாகிக் கொண்டிருக்கிற அகில லோகத்தின் சகல சிருஷ்டிகளும் அந்த மெய்ப்பொருளான ஹக்குதஆலாவைக் கொண்டே நிலைத்திருப்பதனால் அவையனைத்தும் அ.ஃ.ராளு ஆதேயம் எனவும், ளில்லு (நிழல்) எனவும், இன்னும் இதெ கருத்தைக் கொண்டு அவைகளை கியால் (கற்பனை) எனவும் ஸூபியாக்கள் ஞானிகள் சொல்வர். இவற்றிற்கு நிலைக்களம் ஹக்கு தஆலாவின் வுஜூதேயாகும்.

மேலும், இரண்டாவது கிருஷ்டி முந்திய சிருஷ்டிக்குப் பிற்பாடு வருவதினாலும், அதைச் சார்ந்திருப்பதினாலும் முந்தியதை இரண்டாவதற்கு ஹகீகத்து, தாத்து, தற்சொரூபம் ஜௌஹர் (ஆதாரம்) என்றும், இரண்டாவதை முந்தியதன் அறளு (ஆதேயம்) என்றும், சிபத்து (இலட்சணம்) பி.ஃ.லு (செயல்) என்றும் ஆகவே உலகம் அ.ஃ.றாளும் ஜவாஹிறுமாகும்- ஆதேயப் பொருட்களும் ஆதாரப் பொருட்களுமாகும் என்று சொல்வார்கள். மேலும், சிருஷ்டிகளாகிய அகிலமெல்லாம் ஹக்குதஆலாவைக் கொண்டு நிலைத்திருப்பதானால், சகல வஸ்துக்களின் தற்சொரூபங்களும் தரிபாடாக இருக்கின்றன. (ஹகாயிகுல் அஷ்யாயி.ஃ.தாபிததுன்) என்றும் சொல்வார்கள்.

ஸூபஸ்த்தாயிகளோ, ஆலம் (அகிலம்) என்பது கனவு அதற்கு நிலைக்களம் மனிதனின் கற்பனையேயாகும் என்று சொல்வார்கள். இது சுத்தத் தவறான கொள்கையாகும். பின்னர், அல்லாஹுத்தஆலா அமரர்களை படைத்து, அவர்களுக்கு சுயஅறிவையும், நாட்டத்தையும், சக்தியையும், புத்தியை (அக்லை)யும் கொடுத்தான். அவர்களில் ஒரு கூட்டத்தாருக்கு உலக காரியங்களில் அதிகார ஆட்சியையும் கொடுத்தான். இவர்களுக்கு அதிகார ஆட்சி நடத்தாட்டுபவர்கள் (முதப்பிறாத்து) என்று சொல்லப்படும். மிருகங்களைப் படைத்து அவைகளுக்கு சுய அறிவையும், நாட்டத்தையும், சக்தியையும், ஆசையையும், கோபத்தையும் கொடுத்தான். மனிதர்களையும், ஜின்னையும் படைத்து, அவர்களுக்குச் சுய அறிவையும் நாட்டத்தையும், ஆசையையும், கோபத்தையும், புத்தியையும் ஒரு காரியத்தை செய்வதா வேண்டாமா என்பதைத் தேர்ந்தெடுக்கக் கூடிய (இக்தியார்) ஆற்றலையும் கொடுத்தான்.

மனிதன் தன்னிஷ்டம் போல் எதையும் பார்க்கிறான், கேட்கிறான், பேசுகிறான், காரியாதிகள் செய்கிறான், அதிகார ஆட்சி செய்கிறான், ஒருவனைப் பணித்து வேலை வாங்குகிறான், ஒன்றை அடிக்கிறான், ஒன்றின் மீது சவாரி செய்கிறான், ஒன்றை அறுத்து புசிக்கிறான். மனிதனுடைய இந்த சுயேட்சையைக் கொண்டு தான் பாவ புண்ணியம், ஏவல் விலக்கல் சன்மான தண்டனைகளெல்லாம் தொக்கி நிற்கின்றன.

மனு, ஜின், மலக்கு (அமரர்) மிருகம் உடைய இந்த அறிவு, நாட்டம், சக்தி, ஆட்டம், அசைவுகளெல்லாம் அவர்களுக்கு, சுயமே உண்டானவையல்ல. எல்லாம் அவர்களுக்கு, அவற்றிற்கு அல்லாஹுு தஆலாவேலேயே கொடுக்கப்பட்டவையாகும். எவ்வண்ணம் அவர்களுடைய தாத்து (சுயம்) அல்லாஹுுத் தஆலாவால் படைக்கப்பட்டதோ அவ்வண்ணமே இவைகளும் அவனால் படைக்கப்பட்டனவாகும். பின்னர் அல்லாஹ்வின் வழக்கப்படி இரண்டாவது சிருஷ்டி முந்திய சிருஷ்டியின் வழியாகவே வெளியாகின்றபடியால் இரண்டாவதை முந்தியதோடு சேர்த்து அது செய்தது உண்டாக்கியது என்று சொல்லப்படும். இப்படி வழி(காரணம்) அளவில் சேர்த்துச் சொல்வதற்கு **<u>'நிஸ்பத்து மஜாஸி'</u>** (இரவல் சேர்மானம்) என்று கூறப்படும். இது ஒரு வகை.

இரண்டாவது வகை, எதார்த்தத்தில் யாரிடமிருந்து வருகிறதோ யாருடைய செயலோ அவன் பக்கம் சேர்த்து (அதாவது) தனக்குத்தானே ஆதாரமான, சுயமான தாத்தியத்தான சக்தியைக் கொண்டு செய்யக் கூடிய அல்லாஹுுத்தஆலா அளவில் சேர்த்து, அல்லது அல்லாஹுு தஆலாவால் கொடுக்கப்பட்ட நன்கொடையான (அதாஇய்யான) சக்தியைக் கொண்டு செய்யக் கூடிய மலக்கு, மனு, ஜின், மிருகங்கள் அளவில் சேர்த்து ஹக்குதஆலா செய்தான். அல்லது மலக்குகள், மனிதர்கள், ஜின்கள் செய்தார்கள். மிருகங்கள் செய்தன என்று சொல்வதற்கு நிஸ்பத்து ஹகீகிய்யி (எதார்த்த சேர்மானம்) என்று சொல்லப்படும். இப்படி இருவிதமாகவும் சேர்த்துப் பேசி குர்ஆனிலும், ஹதீதிலும் ஜனங்களுடைய பழக்கத்திலும் வந்துள்ளது.

## <u>தௌஹீது</u>

**'தௌஹீது'** என்றால் தாத்திலும், ஸிபாத்திலும் தன்னிலைக்குத்தானே

ஆதாரமானவன் ஒருவனே உண்டு என்று உறுதி கொள்வதாகும்.

## ஷிர்க்

ஷிர்க்கு என்றால் இணை வைத்தலாகும். அதாவது அல்லாஹ்வைப்போல் தாத்திலும், ஸிபாத்திலும் யாரளவிலும் தேவையற்று தன்னிலைக்கும் தானே ஆதாரமானது மற்றொன்றும் இருப்பதாக நம்புவதாகும். இணைவைக்கும் முஷ்ரிகீன்கள் தாங்கள் வணங்கக் கூடிய விக்கிரகங்களை வணக்கத்திற்கு உரியன என்று நம்புகிறார்கள். அதாவது, அவை வேறு யாரளவிலும் தேவையற்றவனாக உள்ளன என்று சொல்கிறார்கள். அவர்களிடம் 'வானம், பூமிகளை படைத்தவன் யார்?' என்று கேட்கும்போது 'அல்லாஹ் படைத்தான்' என்று சொல்கிறார்கள். வானம், பூமிகளை அல்லாஹ்வே படைத்திருக்கும்போது அவைகளெல்லாம் அல்லாஹ் அளவில் தேவையானதாக ஆகிவிட்டனவே அப்படியிருக்க ஏன் விக்கிரகங்களை வணங்குகிறீர்கள்? என்று கேட்டால், 'அந்த விக்கிரகங்கள் எங்களை அல்லாஹ் அளவில் முடுகுதலாக்கி வைப்பதற்காகத்தான் வணங்குகிறோம்' என்று சொல்கிறார்கள். இதுதான் அவர்களின் அறியாமை.

'வணக்கத்திற்குரியவன் - வணங்குகிறோம்' எனும்போதே எதை வணங்குகிறார்களோ அது தனது தாத்திலும் சகல இலட்சணத்திலும் யாரளவிலும் தேவையற்றது. தன்னிலைக்குத் தானே ஆதாரமானது மற்றெல்லாப் பொருட்களும் அதனளவில் தேவையானவைகளாகும். அது வணக்கத்திற்குரியதாகும் என்று ஒப்புக் கொண்டதாகவே ஆகிறது. 'இப்படி விக்கிரகங்களை வணக்கத்திற்கு உரியவை என்று நம்புவதுதான் முஷ்ரிகீன்களை ஷிர்க்கில் சேர்த்து வைத்தது'-(குலாஸத்துல் கலாம் ஸெய்யிது அஹ்மது ஜைனுத் தஹ்லானி மக்கா முப்பதி, ஷவாஹிதுல் ஹக்கு பக்கம் 120)

வஹ்ஹாபிகளின் அறியாமை, முஷ்ரிகுகளின் ஷிர்க்குக்கு காரணமாகிய இதை விளங்கிக் கொள்ளாது, அந்த முஷ்ரிகீன்களின் ஷிர்க்குக் ாகரணம் அவர்கள் விக்கிரகங்களைக் கூப்பிடுகிறதும், அதனிடம் உதவி

தேடுவதும்தான் என்று வைத்துக் கொண்டு, குர்ஆனில் முஷ்ரிகீன்களின் விஷயத்திலும் அவர்களின் விக்கிரகங்களின் விஷயத்திலும் வந்த ஆயத்து (வசனம்)களை எல்லாம் முஸ்லிம்கள், நபிமார்கள், அவுலியாக்கள், ஸாலிஹீன்கள் போரில் சுமத்தாட்டியுள்ளார்கள்.

குர்ஆனில், 'அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குகிறவனை போல வழி கெட்டவன் யார்?' (46:5)

'உமக்குப் பிரயோசனமோ, தங்கடமோ செய்வதற்கில்லாத அல்லாஹ் அல்லாதவற்றை வணங்காதீர்' (10:106)

'அல்லாஹ்வுடன் வேறு நாயனை வணங்காதீர். தண்டனைக்குள்ளாக்கப்பட்டவர்களில் நின்றுமாவீர்' (26:213)

முதலிய இவைபோன்ற அநேக ஆயத்துக்கள் வருகின்றன. அவற்றிலெல்லாம் 'லா தத்ஊ' என்ற பதத்திற்கு 'வணங்காதீர்கள்' என்றும் 'மன்யத்ஊ' என்ற பதத்திற்கு **<u>வணங்குகிறவர்</u>** என்ற உண்மைப் பொருளைக் குறிப்பிடாமல் அவற்றிற்கு முறையே **<u>'கூப்பிடாதீர்கள்'</u>** எனவும் **<u>'கூப்பிடக் கூடியவர்'</u>** எனவும் மாற்றமாக அர்த்தம் வைத்துள்ளார்கள். இந்த மாற்றமான முறையில் அவர்கள் மேலே குறிப்பிட்ட வசனங்களுக்கு முறையே 'அல்லாஹ் அல்லாதவர்களை கூப்பிடுகிறவனைப் போல் வழிகெட்டவன் யார்?' (46:5) எனவும்

'நிச்சயமாக வணக்கத் தலங்களெல்லாம் அல்லாஹ்வுக்கு உரியன. அவற்றில் அல்லாஹ்வுடன் மற்றெவரையும் அழைக்காதீர்கள். (72:18) எனவும்,

'உமக்கு பிரயோசனமோ, சங்கடமோ செய்வதற்கில்லாத அல்லாஹ் அல்லாதவற்றை அழையாதீர்' (10:106) எனவும் அல்லாஹ்வுடன் வேறு நாயனை கூப்பிடாதீர். தண்டனைக்குள்ளாக்கப்பட்டவர்களில் நின்றுமாவீர்'

(26:213) எனவும், இவ்வாறாக ஒவ்வாத பொருளை அர்த்தம் செய்து கொண்டு முஷ்ரிகீன்கள் முஷ்ரிகீன்களாக ஆனது அவர்கள் அல்லாஹ் அல்லாததை அழைத்ததால் தான்-அல்லாஹ் அல்லாததை கூப்பிட்டது தான் அவர்கள் ஷிர்கு என்றும், இன்னமும் குர்ஆனில் **' ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கூப்பிடுவதை, உங்களில் ஒருவரையொருவர் கூப்பிடுவதைப்போல் ஆக்காதீர்கள் (24:63) அதாவது மற்றவர்களை அழைப்பதைப் போல் சங்கையில்லாது பெயர் சொல்லிக் கூப்பிடாதீர்கள்'** யா ரஸூலல்லாஹ், யா நபியல்லாஹ், யா ஹபீபல்லாஹ் என்று சங்கையுடன் அழைத்திடுங்கள் என்ற கருத்துள்ள இந்த ஆயத்திற்கு இந்த வஹ்ஹாபிக் கூட்டத்தார்கள் 'அல்லாஹ்தஆலா ரஸூலையே கூப்பிடக் கூடாது என்று சொல்லிவிட்டானே மற்ற அவுலியாக்களை, ஸாலிஹீன்களை எப்படிக் கூப்பிட முடியும், கூடவே கூடாது' என்று அர்த்தம் செய்து கொண்டு,

'நபிமார்களை, அவுலியாக்களை கூப்பிட்டு அழைப்பது ஷிர்க்கு. யாராவது நபிமார்களை, அவுலியாக்களை, ஷெய்குமார்களை கூப்பிடுவானேயானால், அவர்களிடத்தில் உதவி தேடுவானேயானால் அவன் முஷ்ரிகாவான்' என்று கூறி உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களையும் இவர்கள் முஷ்ரிகுகள் என்று சொல்கிறார்கள், அவ்வாறே கருதுகிறார்கள்.

## தேவுபந்தியாக்கள்.

வஹ்ஹாபிகள் இரு கூட்டத்தினராவார். ஒரு கூட்டத்தினர் இஜ்மாஊ (எல்லோர்களாலும் ஏகோபித்து ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவு)க்கு மாற்றமாக இமாம்களைப் பின்பற்றுவதை மறுத்து, தங்களை கைரு முகல்லிது (இமாம்களை பின்பற்'றாதவர்) 'அஹ்லே ஹதீது' (ஹதீதின் பிரகாரம் தாங்களே முடிவு செய்து அமல் செய்யக் கூடியவர்) என்று சொல்லி பகிரங்கமாகவே, ஸுன்னத்து வல்ஜமாஅத்தாராகிய நம்மை விட்டும் பிரிந்து கொண்டார்கள். அவர்களைப் பற்றி நமக்கு எவ்வித பயமோ, இடையூறோ, கஷ்டமோ இல்லை.

மற்றக் கூட்டத்தார்கள் முகல்லிதுகளான வஹ்ஹாபிகள் அல்லது

தேவுபந்திகள், இவர்கள் வெளிரங்கத்தில், ‘நாங்கள் இமாம்களைப் பின்பற்றக் கூடியவர்கள்’ என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால், கொள்கை விஷயத்திலோ, கைரு முகல்லிது வஹ்ஹாபிகளைப் போல இவர்களும் இமாம்களைப் பின்பற்றுவது இல்லை. இவர்களின் தொல்லை சொல்லத் தரமன்று. இவர்கள் எவ்விதமாவது தங்களின் கெட்ட கொள்கைகளை ஸுன்னத்து வல் ஜமாஅத்து மக்களில் புகுத்தி, அவர்களை ஏமாற்றி தங்களுடைய கூட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காகவே எப்பொழுதும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இதற்காகவே இவர்கள் பல கோலங்களிலும் வந்து கொண்டிருக்கிறார்கள். கடைசியாக இப்போது இவர்கள் ‘தப்லீகு ஜமாஅத்து’ ‘ஜமாஅத்தே இஸ்லாமி’ என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக வஹ்ஹாபிகள் எல்லோர்களுமே தங்களைத் தவிர்த்து மற்றெல்லா முஸ்லிம்களையும் முஷ்ரிகுகள் என்றே கருதுகிறார்கள்.

மக்கா முப்தி அல்லாமா செய்யிது அஹ்மது ஜெய்னு தஹ்லானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தற்களது ‘அத்துரருஸ்ஸனிய்யா’ எனும் நூலின் 43வது பக்கத்தில் சொல்கிறார்கள், ‘இபுனு அப்துல் வஹ்ஹாபுன்னஜ்தியிடத்தில் நீர் கொண்டு வந்திருக்கும் இந்த மார்க்கம் முன்னோர்களிலிருந்து தொடர்ச்சியாக வந்ததா? அல்லது தொடர்பின்றி வந்ததா? என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் ‘என்னுடைய ஷெய்குமார்களும், அவர்களுடைய ஷெய்குமார்களும் இன்றையிலிருந்து 600 வருடங்கள் வரையில் முன்புண்டானவர்கள். அத்தனை பேர்களும் முஷ்ரிகுகளாக இருக்கும்’ என்றார்.

மேல்குறிப்பிட்ட அந்நூலின் 46,50 வது பக்கங்களில் தஹ்லானி இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ‘இப்னு அப்துல் வஹ்ஹாபுன்னஜ்தி ஹிஜ்ரி 1111 ல் பிறந்து 1206ல் இறந்தார். அவரும் அவரைப் பின்பற்றிய வஹ்ஹாபிகளும் ஹிஜ்ரி 600க்குப் பிறகு உண்டான முஸ்லிம்களை எல்லாம் காபிர்கள் என்று சொல்கிறார்கள்’ எனவும் எழுதி இருக்கிறார்கள்.

தப்லீகு ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸ் தேவுபந்தி அவருடைய வாயால் சொல்லியது என்று அவருடைய பிரதான சீடர் மன்ளுர் நு.ஃ.மானி என்பவரால் தொகுக்கப்பட்ட 'இல்யாஸின் மல்பூளாத்து' என்ற நூலின் 32வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது 'ஜனங்கள் என்னுடைய தப்லீகின் பறக்கத்துகளைப் பார்த்துவிட்டு வேலை (நன்றாக) நடக்கிறது என்று நினைக்கிறார்கள். வேலை என்பது ஒன்று, பறக்கத்து என்பது வேறொன்று. பாருங்கள், ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சிறப்பான ஜனனத்திலிருந்தே பறக்கத்துக்கள் வெளியாக ஆரம்பித்து விட்டன. ஆனால் வேலையோ ரொம்ப பின்னால்தான் ஆரம்பமானது. அதே விதமாகவே இங்கும் நினையுங்கள். மெய்யாகவே, நான் சொல்கிறேன். இது வரையிலும் அசல் வேலை ஆரம்பமாகவில்லை. என்றைக்கு அசல் வேலை ஆரம்பமாகுமோ, அன்றைக்குத்தான் முஸ்லிம்கள் (இன்றைக்கு) 700 வருடங்களுக்கு முன்புள்ள நிலைக்கு மீளுவார்கள்'.

சகோதரர்களே, சிந்தித்துப் பாருங்கள். வஹ்ஹாபிக் கொள்கையின் ஸ் தாபகர் இபுனு அப்துல் வஹ்ஹாபுன்னஜ்தி ஹிஜ்ரி 1111ல் பிறந்து 1206ல் இறந்தார். அவர் இறந்து 97 வருஷங்களுக்குப் பின்பு ஹிஜ்ரி 1303ல் இல்யாஸ் பிறந்தார். இபுனு அப்துல் வஹ்ஹாபு அவருடைய காலத்திலிருந்து மேலே 600 வருடங்கள் வரையிலுமுள்ள முஸ்லிம்களை எல்லாம் முஷ்ரிகுகள என்றார். அதாவது ஹிஜ்ரி முதல் வருடத்திலிருந்து 600 வருடங்கள் வரையிலுமுள்ளவர்கள் முஸ்லிம்களென்றும், ஹிஜ்ரி 600லிருந்து தனது காலமான 1200ம் வருடம் வரையிலும் இடையில் 600 வருட காலத்திலுமுள்ள முஸ்லிம்களெல்லாம் முஷ்ரிக்குகளென்றும் சொன்னார்.

இல்யாஸ் தனது காலமான 1300 வரையிலும் இன்னும் 100 வருடங்களைச் சேர்த்து 700 வருடங்களுக்கு முன்புள்ளவர்களைப் போல் அதாவது இபுனு அப்துல் வஹ்ஹாப் முஸ்லிம்கள் என்று கருதிய அந்த 600 வருடங்களிலுமுள்ள முஸ்லிம்களைப் போல ஆகி விடுவார்கள் என்று சொல்கிறார். இதனால் அந்த 600 வருடங்களுக்குப் பின் இவர் காலமான 1300 வருடம் வரையும் இடையில் 700 வருடங்களிலும்

உள்ளவர்களை முஷ்ரிகுகள் என்றே கருதுகிறார். இதற்காகத்தான் அவர் முஸ்லிம்களுக்கு கலிமா சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று தனது தப்லீக்கின் 'சேபாத்' ஆறு திட்டங்களில் முதல் திட்டமாக வைத்திருக்கிறார். இப்படி இவர்கள் முஸ்லிம்களை எல்லாம் முஷ்ரிகுகளென்றும், காபிர்களென்றும் கருதக் காரணம் என்னவென்றால், இந்தத் தேவுபந்திகளின் இமாமும், இந்தியாவில் வஹ்ஹாபிக் கொள்கையைப் பரப்பியவரும், இல்யாஸின் பிரதான ஞானாசிரியர் ரஷீது அஹ்மது கங்கோஹியால், 'முத்தகீ ஷஹீது, வொலி' என்று புகழப்பட்டவருமான **இஸ்மாயில் திஹ்லவி** என்பவர் தன்னுடைய மதிப்பிற்குரிய நூலில், அதைத்தான் 'அதிலுள்ளவையாவும் சரியே. அதிலுள்ள எல்லா விஷயங்களும் பின்பற்றி நடக்க வேண்டியவனாகும், அதை வைத்திருப்பதும், அதைப் பார்ப்பதும், அதன்படி அமல் செய்வதும் 'ஐனுல் இஸ்லாம்'-இஸ்லாம் அதுவேயாகும் என்று ரஷீது அஹ்மதுவால் புகழப்பட்ட 'தக்வியத்துல் ஈமான் (ஈமானைக் கெட்டியாக்கக் கூடியது இல்லை தப்வியதுல் ஈமான்- ஈமானைப் போக்கக் கூடியது) எனும் ஆபாச நூலில் எழுதியிருப்பதினாலேயாம்.

இங்கு மேற்சொன்ன அந்த அறுவறுப்பான ஆபாச நூலிலும் அதைத் தழுவிய மற்ற தேவுபந்திகளின் நூற்களிலும் எழுதப்பட்ட வஹ்ஹாபிக் கொள்கைகளில் சிலவற்றையும், அவற்றிற்கு எதிரில் ஸுன்னத்து வல் ஜமாஅத்துடைய கொள்கைகளையும் சுருக்கமாக விளக்கித் தரப்படுகிறது. பார்த்து உண்மையை உணருவீர்களாக!.

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| **<u>ஈமானைப் பற்றிய விளக்கம்</u>**<br><br>ஈமானுக்கு இரு பாகங்கள் உண்டு. 1. அல்லாஹ்வை | **<u>ஈமானைப் பற்றிய விளக்கம்</u>**<br><br>'ஈமான் என்பது ரஸூல் ஸ |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அல்லாஹ்வென்று அறிவது. 2. ரஸுலை ரஸுல் என்று அறிவது.<br><br>அல்லாஹ்வை அல்லாஹ்வென்று அறிவதானது, அவனுக்கு இணை யாரும் இல்லை என்று அறிவதாகும். ரஸுலை ரஸுல் என்று அறிவதானது, அவர்களல்லா-தவர்களுடைய வழியை (ஸுன் னத்தை) பின் பற்றாதிருப் பதாகும். (அவர்களுடைய வழியை மட்டும் பின்பற்றுவதாகும்) முந்தியதற்கு அல்லாஹ்வுக்கு இணை யாரு மில்லை என்று அறிவதற்கு தௌஹீது என்று சொல்வார்கள். இதற்கு (ரஸுலுடைய வழியை மட்டும் பின்பற்றுவதற்கு) மாற்றமான தற்கு 'பித்அத்' (நூதனம்) என்று சொல்வார்கள். எனவே, ஒவ்வொ ருவரும் அவசியம் தௌஹீதையும் ஸுன்னத்தைப் பின்பற்றுவதையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஷிர்க் பிதுஅத்தை விட்டும் ரொம்பவும் தூரப்பட்டிருக்க வேண்டும். இவையிரண்டும் அசல் ஈமானில் குழப்பத்தைப் போட்டு விடும்'-தக்வியத்துல் ஈமான் பக் 3.<br><br>***குறிப்பு:-*** ஈமான் என்றால் மனதில் நம்புவது என்றும், ஈமானுக்கு ஆறு பர்ளுகளுண்டு. | ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்த எல்லா விஷயங்களிலும் அவர்களை மனதால் உண்மை- யாக்கி வைப்பதாகும். அதாவது 'லா இலாஹ இல்லல்லாஹு வ இன்னீ ரஸுலுல்லாஹி' (வணக்கத்-திற்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை.(முஹம்மதாகிய) நான் அல்லாஹ்வின் தூதர்) என்று அவர்கள் சொன்னதிலும், இன்னும் இவர்கள் சொன்ன எல்லா விஷயங்களிலும் அவர்களை மனதால் உண்மையாக்கி வைப்பதாகும். இதற்கு மாற்றம் குப்ராகும். அதாவது ரஸுல் ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்ததில் எதை பற்றியாவது அவர்களைப் பொய்யாக்குவதாகும்.'<br><br>இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி பைஸலத்துத் தப்ரிகா பைனல் இஸ்லாமி வஸ் ஸன்தகா (இஸ்லாமுக்கும் வழிகேட்டிற்கும் மத்தியில் பிரித்தறிவிக்கும் தீர்ப்பு பக்கம் 80)<br><br>மனதால் பொய்யாக்கி வாயால் கலிமாவைச் சொல்வதானது முனாபிக்கு நயவஞ்சகத்தனமாகும். |

அதாவது 1. அல்லாஹ்வைக் கொண்டு நம்ப வேண்டும். 2. மலக்குகளைக் கொண்டு நம்ப வேண்டும். 3. வேதங்களைக் கொண்டு நம்ப வேண்டும். 4. ரஸூல்மார்களைக் கொண்டு நம்ப வேண்டும். 5. இறுதி நாளைக் கொண்டு நம்ப வேண்டும். 6. நன்மை, தீமை அல்லாஹ்வின் கற்பனையிலுள்ளது என்றும் நம்ப வேண்டும் என்பது முஸ்லிம் சிறுவர்களுக்கும் கூடத் தெரியும். ஆனால் வஹ்ஹாபியர்களின் குரு இஸ்மாயில் திஹ்லவி, 'ஈமான் என்பது அல்லாஹ்வுக்கு இணையில்லை என்றறிவதும், ரஸூலுடைய வழியை மட்டும் பின் தொடர்ந்து நடப்பதும் என்று சொல்வதானால் அல்லாஹ்வுக்கு இணை இல்லை என்று அறிந்தால் போதும், உறுதி கொள்ளத் தேவையில்லை என்றும், இன்னும் ரஸூல்மார்களைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும், மலாயிகத்துக்களைக் கொண்டும், வேதங்களைக் கொண்டும், இறுதித்தீர்ப்பு நாளைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும், களா கத்ரைக் கொண்டு நம்பிக்கை கொள்வதும் அவசியமில்லை என்றும் தெரியவருகிறது. இதுபற்றி இன்னும் தெளிவாகச் சொல்கிறார். 'அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் கொண்டு ஈமான் கொள்ளாதே' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 14)

ஈமான் என்பது மனதில் உண்மையாக்கி வைப்பதும் வாயால் மொழிவதுமாகுமென்று சொல்வது சில உலமாக்களின் அபிப்பிராயமாகும். ஆனால், முஹக்கிகீன்களான அநேகரிடத்தில் ஈமான் என்பது மனதில் உண்மை யாக்குவதுதான். வாயால் விண்ணப பம் செய்ய வேண்டும் என்பதெல் லாம், உலகத்தில் அவன் பேரில் இஸ்லாமிய சட்டத்தை அமுல் படுத்துவதற்கு நிபந்த னையாக இருக்கும். ஏனென்றால் மனதில் உண்மையாக்கி வைத்தி ருப்பது மறைவானதோர் விஷயம். அதைத் தெரிந்து கொள்வதற்கு வெளியில் அத்தாட்சி வேண்டும். ஆகவே, ஒருவன் மனதில் உண்மையாக நம்பிக்கைக் கொண்டு வாயால் விண்ணப்பம் செய்யவில்லையானா-லும் அவன் அல்லாஹ்விடத்தில் மு.ஃ.மினாக இருக்கும்' (ஷறஹு அகாயிதுந் நஸபி பக்கம் 77)

இத்திபா உஸ்ஸுன்னத்து-நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வழியைப் பின்பற்றுவது அமலைச் சார்ந்தது ஆகும். தௌஹீதைப் போல் (இதையும் ஈமானின் ஒரு பாகமாகச் சேர்ப்பதுவும் ஷிர்க்கையும் பித்அத்தையும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்களின் ஸுன்னத்தைப் பின்பற்றி அமல் செய்யாதிருப் பதையும்) ஒரு தரத்தில் சேர்த்து, ஷிர்க்கினால் ஈமான் போகும்

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| 'அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ளுங்கள். வேறு யாரையும் கொண்டு ஈமான் கொள்ளாதீர்கள்' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 11)<br><br>'எத்தனை நபிமார்கள் வந்தார்களோ அவர்களெல்லாம் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து, அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்ளுங்கள், அவனைத் தவிர மற்றவர்களைக் கொண்டு ஈமான் கொள்ளாதீர்கள் என்ற கட்டளையையே கொண்டு வந்தார்கள்' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 11) 'மற்றவர்களைக் கொண்டு ஈமான் கொள்வது வெறும் மதியீனமாகும்' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 5)<br><br>'எந்த வித்திலும் என்னிடத்தில் களாகத்ருடைய மஸஅலா ஈமானின் பாகத்தைச் சேர்ந்தது அல்ல, அதன் நிலைமை ஒரு தனி மஸ்அலாவின் நிலைமையேயாகும்' (அபுல் அ.லா மவுதூதியின் மஸஅலல் ஜப்று கதறு பக்கம் 9)<br><br>***குறிப்பு:-*** ஈமானுக்கு இரண்டாவது பாகம் ரஸூலுடைய வழியை மட்டும் பின்பற்றுவதும் அவர்களல்லாதவர்களுடைய வழியைப் பின்பற்றாமலிருப்பதும்' என்று சொல்வதானது, | என்பது போல் பித்அத்தினாலும் ஈமான் போய்விடும் என்பதானது ஸுன்னத்வல் ஜமாஅத் கொள்கைக்கு மாற்றமானதாகும். இது காரிஜிய்யா, முஃதஸிலாக்களுடைய கொள்கையாகும்.<br><br>பெரும்பாவம் முஃமினான அடியானை ஈமானை விட்டும் அப்புறப்படுத்தாது. ஏனெனில், ஈமானின் எதார்த்தமான மன நம்பிக்கை இருக்கத்தானே செய்கிறது. முஃதஸிலாக்களுக்கு மாற்றமாக, அவர்கள் பெரும் பாவம் செய்தவனைக் காபிருமல்ல, முஃமினுமில்லை இவன் இரண்டிற்கும் மத்தியிலுள்ளவன் என்கிறார்கள். அவர்களின் கொள்கை, அமல்கள் ஈமானின் ஒரு பாகம் என்பதாகும். ஆனாலும் பாவச் செயல் முஃமினான அடியானைக் குபுரில் சேர்த்து விடாது என்பதாகும். இன்னும் காரிஜிய்யாக்களுக்கும் மாற்றமாக, அவர்களோ பெரும் பாவம் செய்தவனையும் சிறு பாவம் செய்தவனையும் கூட காபிர் என்று நம்புகிறார்கள்' (ஷரறஹு அகாயிதுந் நஸபி பக்கம் 77)<br><br>'முற்றாக வணக்கங்களை விட்டிருப்பதும், பாவங்கள் அனைத்தையும் செய்வதும் முஃமினான அடியானை ஈமானை விட்டும் |

| | |
|---|---|
| ‘என்னுடைய வழியையும் எனக்குப் பின்பு நேர்மையான கலீபாக்களின் வழியையும் பின்பற்றுங்கள்’ என்ற ஹதீது நாயக வாக்கியத்தின் | போக்கிவிடாது. இதுதான் ஸுன்னத் வல் ஜமாஅத்துக் கொள்கை யாகும். காரிஜிய்யா, மு.ஃ.தஸிலாக் களுக்கு மாற்றமாக. (ஷறஹு பிக்ஹுல் அக்பர், பக்கம் 207) |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| கட்டளைக்கு மாற்றமேயாகும். மேலும் ரஸூலுடைய வழியைப் பின்பற்றுவது அமலை சேர்ந்ததாகும். தௌஹீதைப் போல் இதையும் ஈமானின் ஒரு பாகமாக சேர்ப்பதும் பித்அத்தை (ரஸூலு-டைய வழியை பின்பற்றாதி-ருப்பதையும் ஷிர்க்கையும் ஒரு தரத்தில் சேர்ப்பதும் காரிஜிய்யா, மு.ஃ.தஸிலாக்களுடைய கொள்கை யாகும். | ‘(ஈமானாகிறது) நீங்கள் அல்லாஹ்வைக் கொண்டும், அவனின் வேதங்களைக் கொண்டும் அவனது திருத்தூதர்களைக் கொண்டும், இறுதித் தீர்ப்பு நாளைக் கொண்டும், நன்மை,தீமை அல்லாஹ்வின் கட்டளையிலுள்ளது என்பது கொண்டும் நம்பிக்கை கொள்வதாகும்.’ (ஹதீது மிஷ்காது பக்கம் 11)<br><br>‘அடியான் நான்கு கருமங்களைக் கொண்டு ஈமான் கொள்ளாத வரையிலும் மு.ஃ.மினாக மாட்டான். 1. அல்லாஹ்வையன்றி வணக்கத்திற்குரிய நாயன் யாருமில்லை எனவும், நான் அல்லாஹ்வுடைய ரஸூல், என்னை சத்தியத்தைக் கொண்டு தூதராக அனுப்பியிருக்கிறான் எனவும் சாட்சி சொல்ல வேண்டம். 2. மறைவான சங்கதிகளைக் கொண்டு ஈமான் கொள் வேண்டும். 3. மரணத்திற்குப் பின்பு எழுப்பப்படும் என்பதை ஈமான் கொள்ள வேண்டும்.’ 4. களா கத்ரைக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும். - நாயகம் |

| | |
|---|---|
| | (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது ஹதீது திர்மிதி, இபுனுமாஜா. |
| **ஷிர்க்கு** | **தௌஹீது, ஷிர்க்கு** |
| ‘ஷிர்க்கு’ என்பதன் பொருளாவது, எந்த விஷயத்தை அல்லாஹ் | தௌஹீது என்பது (அவ்வல்) கலிமா தையிபாவில் கூறப்பட்டதும், |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| தன்னொருவனுக்கே உரியது எனத் தனக்குச் சொந்தப்படுத்தியும், அதை(செய்வதை) தனது அடியார்களுக்கு அடிமைத் தனத்தின் அடையாளமாகவும் ஆக்கி இருக்கிறானோ அதை வேறு யாருக்கும் செய்வதாகும். எப்படியெனில், 1. ஸஜ்தா (சாஷ்டாங்கம்) செய்வது 2. அவர் பேரில் மிருகத்தை (நேர்ச்சையாக விடுவது) 3. அவர் பேரில் நேர்ச்சை வைப்பது 4. கஷ்ட காலத்தில் அவரைக் கூப்பிடுவது 5. அவர் எல்லா இடங்களிலும் ஹாளிராக (பிரசன்னமாக) இருக்கிறார். நாளிரா (நோட்டமிடுபவராக) இருக்கிறார் என்று நம்புவது. 6. அல்லது அவருக்கு ஆட்சி அதிகாரம் செய்யும் தத்துவம் இருக்கிறது என்று நம்புவது. இவ்வாறான விஷயங்களில் ஷிர்க்கு உண்டாகிவிடும்’ - (தக்வியத்துல் ஈமான் பக்கம் 6) | ஷிர்க்கு என்பது அதில் மறுக்கப்பட்டதும் ஆகும். அதாவது வணக்கத்திற்குரிய -வன் அல்லாஹ்வைத் தவிர யாரு-மில்லை. அவனே வணக்கத்திற்குரி-யவன் என்று நம்புவதாகும். எவனுடைய தாத்தும் (தற்சொரூபமும்) அவனின் கமாலியத்தான ஸிபத்துக்-களும் (சம்பூரண லட்சணங்- களும்) தன்னிலைக்குத் தானே ஆதாரமாகவும் சகல வஸ்துக்களை விட்டும் தேவையற்றதாகவும் எல்லா வஸ்துக்-களும் அவனளவில் தேவையான-தாகவும் இருக்கிறானோ, அவனே வணக்கத்திற்குரியவன். அவனுடைய எல்லா சம்பூரண இலட்சணங்களும் சீவன், அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சு ஆகிய இவ்வேழு இலட்சணங்களுக்குள்-ளடங்கி இருப்பதனால் இவ்வேழும் உலூஹிய்யத்தான ஸிபத்து (தெய்வீக இலட்சணம்) என்று சொல்லப்படும். இந்த இலட்சணங்களுடைய தாத்துக்குத் தான் அல்லாஹ் வணக்கத்திற்கு |

| | |
|---|---|
| ***குறிப்பு:-*** இனி ஷிர்க்கு- 1. இல்மில் ஷிரிக்கு வைப்பது 2. ஆட்சி அதிகாரத்தில் ஷிர்க்கு வைப்பது 3. இபாதத்தில் ஷிர்க்கு வைப்பது 4. ஆதத்தில் (நடவடிக்கையில்) ஷிர்க்கு வைப்பது என நான்கு வகையினால் உண்டாகிறது என்றும் சொல்லி ஒவ்வொன்றாக விவரிக்கிறார். | ரியவன் என்று சொல்லப்படும். இதைக் கொண்டே தான் சர்வ சிருஷ்டிகளும் உண்டானது. சர்வ சிருஷ்டிகளும் தாத்திலும் ஸிபத்திலும் எந்நேரமும் அந்த மெய்ப்பொருளான அல்லாஹ் அளவில் தேவையானதாகவே இருக்கிறது. ஓர் இமைக் கொட்டும் நேரமாவது அந்த மெய்ப்பொருளான |

| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
|---|---|
| **1. இல்மில் ஷிர்க்கு வைப்பதாவது,** அல்லாஹ்வுடைய அறிவைப் போல் மற்றவர்களுக்கு அறிவு இருப்பதாக ஸ்தாபிக்கிறதாகும். இக் கொள்கையினால் மனிதன் முஷ்ரிக்காகி விடுவான். இந் நம்பிக்கையை நபிமார்கள், அவுலியாக்கள் விஷயத்தில் வைத்தாலும் சரியே, இமாம் இமாமுடைய பிள்ளையின் விஷயத்தில் வைத்தாலும் சரியே, அல்லது பேய், பிசாசு விஷயத்தில் வைத்தாலும் சரியே அல்லது இவ்விஷயம் அவர்களுக்கு தாத்தினால் சுயமாகவே உண்டானது என்று நம்பினாலும் சரியே, அல்லது அல்லாஹ் அறிவித்துக் கொடுத்து உண்டானது என்று நம்பினாலும் சரியே முடிவாக இந்தக் கொள்கையினால் எந்த விதத்திலும் ஷிர்க்கு உண்டாகி விடும். (தக்வியத்துல் ஈமான் பக் 7) | அல்லாஹ்வின் அனுக்கிரகம் இல்லையானால், அவைகளெல்லாம் இல்லாமலாகி விடும். இப்படி அவனளவில் தேவையாகிக் கொண்டிருப்பதற்கே உபூதிய்யத்து (அடிமைத்தனம் என்றும் தேவையாகிக் கொண்டிருக்கின்றவைகளுக்கு அடிமைகள் என்றும் சொல்லப்படும். இப்படியான நம்பிக்கைக்கும் அந்த நம்பிக்கையோடு செய்கின்ற வேலைக்கும்தான் இபாதத்து (வணக்கம்) என்று சொல்லப்படும். ஆகவே தவ்ஹீதானது தாத்திலும் சகல இலட்சணங்களிலும் யாரளவிலும் தேவையற்று தன்னிலைக்குத்தானே ஆதாரமாகவும், எல்லாம் அவனளவில் தேவையானவனுமாகிய வணக்கத்திற்குரிய நாயன் அல்லாஹ் ஒருவனே என்று நம்புவதாகும். <br><br> ‘ஷிர்க்காவது, உலூஹிய்யத்தில் (தெய்வீக இலட்சணத்தில்) |

**2. ஆட்சி அதிகாரத்தில் ஷிர்க்கு வைப்பதாவது,**

‘அல்லாஹ்வுடைய ஆட்சியைப் போல் மற்றவர்களுக்கும் ஆட்சியைத் தரிபடுத்துவதாகும். இந்த வேலையில் அவர்களுக்கு சுயமாகவே சக்தி உண்டானது என்று நம்பினாலும் சரி அல்லது அல்லாஹ் அவர்களுக்கு அம்மாதிரியான தத்துவம் கொடுத்திருக்கிறான் என்று நம்பினாலும் சரி எவ்வித்திலும்

கூட்டானவனிருப்பதாகத் தரிபடுத்துவதாகும். அதாவது நெருப்பு வணங்கிகள் வாஜிபுல் வுஜூது இன்னொருவன் இருக்கிறான் என்று சொல்வது போல அல்லது விக்கிரகத் தொழும்பர்கள் வணக்கத்திற்குரியவன் வேறொருவனும் இருக்கிறான் என்று சொல்வது போல’ (ஷரஹு அகாயிதுந் நஸபி பக்கம் 16)

எவன் வணக்கத்திற்குரியவனாக

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| ஷிர்க்கு உண்டாகி விடும்.’- (தக்வியத்துல் ஈமான். பக்கம் 8)<br><br>3. **இபாதத்தில் ஷிர்க்கு வைப்பதாவது,**<br><br>‘அல்லாஹுத் தஆலாவுக்கு செய்வது போல் (மற்றவர்களுக்கு) மரியாதை செய்வதாகும். பின்னர், அவர்களே இப்படி மரியாதை செய்வதற்குத் தகுதியானவர்கள் என்று நம்பினாலும் சரி, அல்லது அவர்களுக்கு இப்படி மரியாதை செய்வதன் பறக்கத்தால் அல்லாஹ் கஷ்டங்களை நீக்கி விடுவான் என்று நம்பினாலும் சரி எந்த விதத்திலும் ஷிர்க்கு உண்டாகி விடும். (தக்வியத்துல் ஈமான் பக்கம் 8)<br><br>**4. ஆதத்தில் (நடை முறையில்) ஷிர்க்கு வைப்பதாவது,** | இருக்கிறானோ அவன் வாஜிபுல் வுஜூதாகவுமிருக்கிறான். எவன் வாஜிபுல் வுஜூதாக இருக்கிறானோ, அவன் வணக்கத்திற்குரியவனாகவும் இருக்கிறான். முஷ்ரிகீன்களின் அறியாமை அவர்கள் தங்கள் விக்கிரகங்களையும், அவர்கள் வணங்கக் கூடிய வஸ்துக்களையும் (மும்கினுல் வுஜூது சிருஷ்டிகள்) என்று நம்புவதோடு அவைகளை வணக்கத்திற்குரியவை என்றும் கருதுகிறார்கள்.’ அவர்கள் அவற்றை வணக்கத்திற்குரியவை என்று நம்புவதுதான் அவர்களை ஷிர்க்கில் சேர்த்து விட்டது. (குலாஸத்துல் கலாம் அல்லாமா ஸெய்யித் அஹ்மது ஜெய்னுத் தஹ்லானி மக்கா முப்தீ அல்லாமா யூஸுபு நபஹானிஷவாஹதுல் ஹக்கு. பக்கம் 122) |

| | |
|---|---|
| தன்னுடைய பழக்க வழக்க நடவடிக்கைகளில் அல்லாஹ்வுக்கு மரியாதை செய்வதுபோல் அவனல் -லாதவருக்குச் செய்கிறது' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 10)<br><br>**அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கை**<br>1. அல்லாஹ் உடைய அறிவு பிறரால் கொடுக்கப்பட்டது.<br><br>இல்மில் ஷிர்க்கு வைப்பது அதாவது, அல்லாஹ்வுடைய அறிவைப் போல் மற்றவர்களுக்கும் அறிவு இருப்பதாக ஸ்தாபிப்பதாகும். (தக்வியத்துல் ஈமான் பக்கம் 7) | **அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கை.**<br>அல்லாஹுத்தஆலாவுக்கு சம்பூரண இலட்சணங்கள் (கமாலிய்யத்தான ஸிபத்துகள்) அனந்தமிருக்கின்றன. அவற்றில் முஸ்லிம்கள் அவசியமாக அறிய வேண்டியவை இருபது. அவற்றில் ஒன்று வுஸூது (உள்ளமை) எனும் ஸிபத்து நப்ஸிய்யா இது அதமு (இன்மை)க்கு எதிர். இதை ஸிபத்து என்று சொல்வதெல்லாம் ஹக்கு தஆலாவின் தாத்தை மவுஜூது (உண்மையானது) என்று வருணிக்க ப்படுவதற்காகவேயாம் வுஜூதைப் புத்தியில்தான் வேறாகப் பார்க்கலா- |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| 'பின்னர் அவர்கள் (அல்லாஹ் அல்லாதவர்கள்) சுயமாகவே அறிவார்கள் என்று நம்பினாலும் சரி, அல்லது அல்லாஹ் அறிவித்துக் கொடுத்து அறிவார்கள் என்று நம்பினாலும் சரி எந்த விதத்திலும் ஷிர்க்கு உண்டாகி விடும்'-(தக்வியத்துல் ஈமான் பக் 7)<br><br>***குறிப்பு:-*** இந்த வாசகத்தினால் அல்லாஹ் உடைய அறிவும் பிறரால் கொடுக்கப்பட்டது என்று விளங்க வருகிறது. ஏனென்றால், அப்படியானால்தானே அடியானுக்குப் பிறரால் (அல்லாஹ்வால்) கொடுக்கப்பட்ட அறிவு அல்லாஹ்வுடைய அறிவைப் | மேயல்லாது வெளியில் வுஜூது தாத்தை விட்டும் வேறானதல்ல. தாத்து தான் வுஜூது. வுஜூதுதான் தாத்து. இதற்காகவே தான் இதற்கு ஸிபத்து நப்ஸிய்யா என்று சொல்லப்படுகிறது.<br><br>இன்னும் ஐந்து ஸிபத்துகள்: ஸிபத்து ஸல்பிய்யா. அவை: கிதம் (பூர்வீகம்) அதாவது இன்மை முந்தாதிருப்பது 2. பகா (தரிபாடு) அதாவது, பின்னால் இன்மை வராதிருப்பது 3. முகாலபத்துன்லில் ஹவதாதிதி (புதிதானவற்றிற்கு ஒவ்வா வண்ணமாக இருப்பது) அதாவது தாத்திலும், ஸிபத்திலும், செயலிலும் ஒப்பில்லாதிருப்பது. 4. |

| | |
|---|---|
| போன்றதாக ஆகும். 2. அல்லாஹ்வுடைய சக்தி பிறரால் கொடுக்கப்பட்டது. 'ஆட்சி அதிகாரத்தில் ஷிர்க்கு வைப்பது, அதாவது அல்லாஹ் உடைய ஆட்சியைப் போல் மற்றவர்களுக்கும் ஆட்சியைத் தரிபடுத்துவதாகும். பின்னர் இந்நத வேலையில் அவர்களுக்கு சக்தி சுயமாகவே உண்டானது என்று நம்பினாலும் சரி அல்லது அல்லாஹ் அவர்களுக்கு அம்மாதிரியான தத்துவத்தைக் கொடுத்திருக்கிறான் என்று நம்பினாலும் சரி, எவ்விதத்திலும் ஷிர்கு உண்டாகி விடும்' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 8.) | கியாமுன் பிநப்ஸிஹி (தன்னைக் கொண்டு நிலைத்திருப்பது) அதாவது ஆதாரத்தளவிலும், ஆக்குகிறவனளவிலும் தேவையற்றிருப்பது. 5. வஹ்தானிய்யத்து (தனித்திருப்பது) அதாவது, தாத்தில் சேர்மானமில்லாது இருப்பதும் தாத்திலம், ஸிபத்திலும் கூட்டில்லாதிருப்பதும். இவ்வைந்து ஸிபத்துகளும் ஹக்குதஆலாவிற்கு இலாயக்கில்லாத இலட்சணங்களை மறுப்பதனால் இவைகளுக்கு ஸிபத்து ஸல்பிய்யா என்று சொல்லப்படுகிறது. ஆகவே, 'கிதம்' என்பது முன்னால் இன்மையையும் 'பகா' என்பது பின்னால் இன்மையையும் மறுக்கின்றன. |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| ***குறிப்பு:-*** இந்த வாசகத்தினால் அல்லாஹ் உடைய சக்தி பிறரால் கொடுக்கப்பட்டது என்று விளங்க வருகிறது. ஏனென்றால், அப்படியானால்தானே அடியானுக்குப் பிறரால் (அல்லாஹ்வால்) கொடுக்கப்பட்ட சக்தி அல்லாஹ்வுடைய சக்தியைப் போன்றதாக ஆகும். 3. அல்லாஹ் மடையன் 'மறைவான சங்கதிகளை விசாரித்துக் கொள்வது அல்லாஹ்வுடைய இஷ்டத்தைச் | முகாலபத்துன் லில் ஹவாதிதி என்பது, தாத்திலும் ஸிபாத்திலும் செயலிலும் ஒப்பில்லை என்றும், கியாமுன் பிநப்ஸிஹி என்பது, ஆதாரம் ஆக்கியோனில் தேவையற்றவன் என்றும், வஹ்தானிய்யத்து சேர்ந்தோ, பிரிந்தோ கூட்டானவன் இல்லை என்றும் அறிவிக்கின்றன. இன்னும், ஸிபத்து மஆனிய்யாவென்று எழு ஸிபத்துகள் உண்டு. அவை ஒருவராலும் உண்டாக்கப்படாமல் தனக்குத் |

| | |
|---|---|
| சேர்ந்ததாகும். எப்பொழுது விரும்புகிறானோ அப்பொழுது விசாரித்துக் கொள்வான். இது அல்லாஹ் ஸாஹிவுடைய கருமமாகும்’.-தக்வியத்துல் ஈமான் பக்கம் 16.<br><br>***குறிப்பு:-*** இந்த வாசகத்தினால் அல்லாஹ்வுக்கு மறைவான சங்கதிகள் தெரியாது மடையனாக இருக்கிறான் என்றும், விரும்பினால் விசாரித்துக் கொள்வான் என்றும் சொல்வதானால் அவனுக்கு அறிவித்துக் கொடுக்க வேறொருவன் இருக்கிறான் என்றும் விளங்க வரும்.<br><br>4. அல்லாஹ் பொய் சொல்ல முடியும். ‘அல்லாஹ் பொய் சொல்வது அசம்பாவிதம் என்று சொல்வதை நாம் ஒப்புக் கொள்ள மாட்டோம்’ (இஸ்மாயில் திஹ்ல | தானே உண்டாகி, ஹக்குத் தஆலாவின் தாத்தைக் கொண்டே நிற்கக் கூடியவைகள். அவையாவன 1. குத்ரத்து 2. இராதத்து (தத்துவம்) 3. இவையிரண்டும் மும்கினாத்துக்களைக் கொண்டு கொழுகும். 4. ஹயாத்து (சீவன்) இது ஒன்றையும் கொண்டு கொழுகாது. 5. ஸம்உ (கேள்வி) 6. பஸறு (பார்வை) இவ்விரண்டும் மவுஜூதாத்துக்கள் அவை பூர்வீகுமானதானாலும் சரி, தாத்தாக இருந்தாலும், ஸிபததாக இருந்தாலும் சப்தமாக இருந்தாலும் மற்றவையாக இருந்தாலும் சரி எல்லாவற்றையும் கொண்டு கொழுகும். 7. கலாம்(பேச்சு) இது சப்தம், அட்சரம் முன்பின் போன்ற வைகளை விட்டும் பரிசுத்தமானது. இது இல்மு எவைகளைக் கொண்டு கொழுகுமோ அவைகளைக் கொண்டெல்லாம் கொழுகும். |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| வியின் ஏக்றோஜி பக்கம் 145)<br>‘அல்லாஹ் பொய் சொல்வது சாத்தியமானதுதான் என்ற மஸ்அலாவை இப்போது யாரும் புதிதாக சொல்லவில்லை. முன்னோர்களிலேயே இதில் அபிப்பிராய பேதமுண்டு.’- கலீல் அஹ்மது அப்பேட்டியின் பராஹீனே காத்தஆ பக்கம் 3. | இன்னும் இந்த ஏழு ஸிபத்துக்களையும் பூண்டு நிற்கக் கூடிய ஏழு ஸிபத்துகள் உண்டு. அவை ஹக்குதஆலா இந்த ஸிபத்துக்களை கொண்டு இலட்சணம் பூண்டவனாக இருப்பது, அதற்கு ஸிபத்து மஃனவிய்யா என்று சொல்லப்படும். அவை<br><br>1. காதிருன் (தத்துவமுடைய வன்) 2. முரீதுன் (நாட்டமுடைய |

| | |
|---|---|
| ‘அதாகிறது, அல்லாஹ் பொய் சொல்வது சாத்தியம் என்றாக்குவதேயல்லாது வேறொன்றுமில்லை. இதுலோ (அல்லாஹ் பொய் சொல்வதுவோ) அசாத்தியமானதாகும். ஏனென்றால், அது குறைவாகும். குறைகளெல்லாம் அல்லாஹ்வுக்கு அசம்பாவிதமாகும் என்று அவர்கள் (மௌலானா பஸ்லுல் ஹக்கு) சொன்னது. நான் சொல்கிறேன்:- அசாத்தியம் என்றதைக் கொண்டு கருத்து தாத்திலே அசாத்தியமானது, அல்லாஹ்வின் குத்ரத்துக்கு உட்பட்டதில்லை என்பதனால் பொய் சொல்வது இந்தக் கருத்துப்படி (அல்லாஹ்வின் குத்ரத்துகளு உட்பட்டதில்லை என்ற கருத்துப் படி) அசம்பாவிதம் என்று சொல்வதை நாம ஒப்புக் கொள்ள மாட்டோம். ஏனென்றால், எதார்த்தத்திற்கு மாற்றமான ஒரு விஷயத்தை (பொய்யை) மலாயிக்கத்துகளுக்கும், நபிமார்களுக்கும் சொல்வது அல்லாஹ்வின் சக்திக்கு புறம்பானதல்லவே. அப்ப | வன்) 3. அலீமுன் (அறிவுடையவன்) 4. ஹையுன் (சீவியமுடையவன்) 5. ஸமீஉன் (கேள்வியுடையவன்) 6. பஸீறுன் (பார்வையுடையவன்) 7. முதகல்லிமுன் (பேச்சுடையவன்) ஆக இந்த இருபது ஸிபத்துக்களும் அல்லாஹுத் தஆலாவுக்கு வாஜிபு ஆனது. அவசியமானது. இவைகளெல்லாம் அவனில் இருக்கிறது என்றும் இவைகளுக்கு மாற்றமான இருபது இலட்சணங்களும் அவனுக்கு முஸ்த்தஹீலானவைதகாதவை. அவன் அவைகளை விட்டும் பரிசுத்தமானவன். அவை 1. அதம்(இன்மை) 2. உதூது (புதுமை)இன்மை முந்தியது 3. அழிவு பின்னால் இன்மை வருகிறது. 4. புதிதுகளுக்கு ஒப்பாகுதல் ஒளிவான இடத்தைப் பிடிக்கக் கூடிய கண்டிப்பான ஜவ்ஹர் (ஆதாரம்) ஆக அல்லது கண்டிப்பானதை அண்டி நிற்கக் கூடிய அறளு ஆதேயம் ஆக அல்லது கண்டிப்பானதன் திசையிலோ, எதிரிலோ ஆனதாக |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| யானால் மனிதனுடைய சக்தி ஆண்டவனுடைய சக்தியை விட மேம்பட்டதாய் ஆவது அவசியமாகும்.’ (இஸ்மாயில் திஹ்லவி ஏக்றோஜி பக்கம் 144,145) | அல்லது தனக்கு திசை உள்ளதாக இருப்பது போல் அல்லது காலத்தைக் கொண்டோ, இடத்தைக் கொண்டோ கட்டுப்பட்டதாக இருப்பது போல் அவனது பரிசுத்த தாத்து புதியதுகளைக் கொண்டு லட்சணம் பூண்டதாக இருப்பது அல்லது அவனுடைய செயலில் |

| | |
|---|---|
| ***குறிப்பு:-***இந்த வாசகத்தினால் மனிதன் செய்கிற வேலைகளை எல்லாம் அல்லாஹ் செய்ய வேண்டும். மனிதன் உண்கிறான், குடிக்கிறான், உறங்குகிறான், மலஜலம் கழிக்கிறான், கள் குடிக்கிறான், களவு எடுக்கிறான், புணர்கிறான், விபச்சாரம் செய்கிறான், பிள்ளை பெறுகிறான், தற்கொலை செய்கிறான் இவ் வேலைகளை எல்லாம் அல்லாஹ்-வும் செய்ய வேண்டும். இல்லை-யானால், மனிதனுடைய சக்தி அல்லாஹ்வின் சக்தியை விட மேம்பட்டதாக ஆகி விடும் என்று விளங்க வருகிறது. லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.<br><br>4. அல்லாஹ்வுக்கு ஸ்தலமுண்டு:- 'அல்லாஹு தஆலா இடம், காலத்தை விட்டும் பரிசுத்தமானவன் என்றும், கியாமத்து நாளில் அவனை திசைகளில்லாது பார்க்கப்படும் என்பதும் பித்அத்தாகும்'.<br>-(இஸ்மாயில் திஹ்லவியின் ஈளாஹுல் ஹக்கு. பக்கம் 35) | அல்லது கட்டளைகளில் அவனுக்கு ஏதும் தேவை இருப்பது போல் இவைகளெல்லாம் அவனுக்குத் தகாதவையாகும்-அசம்பாவிதமாகும். 5. இன்னும் அவன் தன்னைக் கொண்டு நிலைத்திராமலிருப்பது அதாவது ஆதாரத்தளவிலோ ஆக்குவோன் அளவிலோ தேவையானவனாக இருப்பது. 6. இன்னும் தாத்தில் சேர்க்கப்பட்டவனாக இருப்பது அல்லது அவனுக்கு தாத்திலோ ஸிபாத்திலோ செயலிலோ இணை இருப்பது அல்லது உலகில் நடக்கிற செயலில் எதிலும் குணபாடு செய்கிறவன் அவனோடு இன்னும் ஒருவன் இருப்பது இவைகளெல்லாம் அசம்பாவிதமாகும். இன்னும் மஆனியான லட்சணங்களுக்கு மாற்றமான லட்சணங்கள். அதாவது 1. மும்கினாத்துகளைச் செய்வதற்கு இயலாமை 2. உலகில் எதையும் விருப்பமில்லாமலோ, மறதியாகவோ, நிர்ப்பந்தத்தினாலோ செய்வது. 3. மடமை 4.மரணம் 5. செவிடு 6 குருடு 7.ஊமை ஆகியனவும் இன்னும் இந்த மாற்றமான லட்சணங்களைக் கொண்டு லட்சணம் பூண்டிருப்பதுமான ம∴ன |
| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
| **மலக்குகளைப் பற்றிய கொள்கை**<br><br>'இஸ்லாமியப் பரிபாஷையில் எவர்களை மலக்குகள் என்று சொல்கிறார்களோ அவர்கள் ஏறக்குறைய யூனான் ஹிந்துஸ்தான் | விய்யான ஸிபத்துக்களுக்கு மாற்றமான ஸிபத்துக்களும் ஹக்குத்தஆலாவுக்கு முஸ்த்தஹீலானவையாகும். அவன் அவைகளை விட்டும் பரிசுத்தமானவன் என்றும் முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார் |

| | |
|---|---|
| (இந்தியா) மற்ற தேசங்களிலுள்ள முஷ்ரிகீன்கள் தேவி தேவதா (காளி, கூளி) என்று சொல்கிறார் களே அவைகளேதான்.' (அபுல் அ.்.லா மவுதூதி-தஜ்தீதுவ இஹ்யா யேதீன். பக்கம் 14) | கள். 'பொய் சொல்வது குறைவாகும். குறைகளெல்லாம் அல்லாஹ்வுக்கு முஹால் (அசம்பாவிதம்) ஆகும். அது மும்கினாத்தைச் சேர்ந்ததல்ல. ஆகவே குத்ரத்து அதைச் சேர்த்துக் கொள்ளாது. (அகாயிதுல் அளுதிய்யா பக்கம் 22) 'மு.்.மின் அல்லாஹ் பொய் சொல்வான் என்று எண்ணுவது கூடாது. அப்படி எண்ணுவதால் ஈமானை விட்டும் புறப்பட்டு விடுவான்' (தப்ஸிர் கபீா பக்ரு ராஜி பாகம் 5 பக்கம் 256) 'அல்லாஹ்வுக்கு ஸ்தலமில்லை. மேல் கீழ் போன்ற திசைகளும் ரூபமாகாது. து தான் ஸுன்னத்து வல் ஜமாஅத்தின் கொள்கையாகும். (ஷாஹ் அப்துல் அஜீஸ் முஹத்திதுத் திஹ்லவி, துஹ்பா இதுனா அஷரிய்யா பக்கம் 255) **<u>மலக்குகளைப் பற்றிய கொள்கை</u>** மலக்குள் தேவி, வேதா, காளி, கூளிகல்ல. இவைகள் கெட்ட ஆன்மாக்கள். மலக்குகளோ பரிசுத் தமானவர்கள். |

| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
|---|---|

**வேதங்களைப் பற்றிய நம்பிக்கை**

–

வேதங்கள் நபிமார்களின் ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

‘அல்லாஹ்வுடைய சன்னிதானத்தில் அவர்களின் (நபிமார்களின்) நிலைமை எப்படி இருந்ததென்றால் எப்பொழுதாவது ஒரு கட்டளையைச் சொல்வானேயானால், அவர்களெல் லோர்களும் புலனற்றவர்களாக ஆகி விடுவார்கள். மேலும் பயத்தினால் மரியாதைக்காக மறுமுறை அந்த விஷயத்தை அவனிடம் விசாரித்து தெரிந்து கொள் இயலாமலாகி விடுவார்கள். எங்கிலும் ஒருவர் மறறொருவரிடம் கேட்பார்கள். எப்பொழுது தங்களுக்குள் இது விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார்களோ, ‘ஆமன்னா ஸ தக்கனா’ (நம்பினோம், உண்மை கொண்டோம்) என்று சொல்வதல்லாமல் வேறொன்றும் சொல்ல சக்தி பெற மாட்டார்கள்.’ (தக்வியத்துல் ஈமான் பக்கம் 34)

***குறிப்பு:-*** இந்த வாசகத்தினால், வேதங்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டது அல்ல. நபிமார்கள் தங்களுக்குள் ஆலோசித்து முடிவு செய்த முடிவேயாகும். அவர்களுடைய வாசகங்களேயாகும் என்று விளங்க வருகிறது.

‘என்கிலும் அவர்கள் (மலக்குகள்) சங்கையான அடியார்கள் பேச்சைக் கொண்டு அவனுக்கு (அல்லாஹ் வுக்கு) முந்த மாட்டார் கள். அவர்கள் அவனது கட்டளைப் பிரகாரமே செய்வார்கள்’ -குர் ஆன் ஸூரா அன்பியா வசனம் 27.

கெட்ட ஆண்மாக்களைப் பற்றி இறைவன் அருளியுள்ளான்.

‘(நிச்சயமாக முஷ்ரிகீன்களாகிய) நீங்களும், நீங்கள் வணங்கக் கூடியவைகளும் நரகத்தின் எரிகொள்ளிகளாகும்’. – குர்ஆன் ஸூரா அன்பியா, வசனம் 98.

**வேதங்களைப் பற்றிய நம்பிக்கை**

–

அல்லாஹ்வின் கலாம் பூர்வீக மானது. அட்சரம், தொனி, முன்பின் பிழை திருத்தம், உசும்புதல், ஒடுங் குதல் என்பன போன்றவைகளெல் லாம் அதில் அசாத்தியமானதாகும். இவைகளெல்லாம் சிருஷ்டிக்குச் சொந்தமானவையாகும். அல்லாஹ் வின் கலாமே உண்டாக்கு பவனைக் கொண்டல்லாது, தனக்குத் தானே உண்டாகி, அல்லாஹ்வின் தாத்தில் நிற்கக் கூடிய ஒரு ஸிபத்தாகும். இந்த கலாமுக்கு தவுறாத்து, ஸபூர், இன்ஜீல், புர்கான் போன்ற பல பெயர்களைச் சொன்னாலும் அவைகளெல்லாம் அல்லாஹ்வின் கலாம் தானாக இல்லை.

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| | அல்லாஹ்வின் கலாம் அட்சரம் சப்தங்களைக் கொண்டதல்ல. அது எந்த நூலிலும் இறங்குவதுமில்லை. அல்லாஹ்வின் கலாம் அவனது தாத்தை விட்டும் பிரியாது. அதிலேயே தரிபாடாக நிற்கக் கூடிய ஸிபத்தாகும். ஆனாலும், இவைகளெல்லாம் அல்லாஹ்வின் கலாமின் பேரில் அறிவிக்கக் கூடியயதாகும். குர்ஆனின் அட்சரங்களெல்லாம் அல்லாஹ்வின் கலாமின் பேரில் அறிவிக்கிறதினால் குர்ஆனையும் 'கலாமுல்லாஹ்'-அல் லாஹ்வின் திருவசனம் என்று சொல்லப்படும். இதனாலேயேதான் அல்லாஹ்வின் கலாம் வாயால் ஓதப்பட்டதும், மனதில் மனனம் செய்யப்பட்டதும் என்று ஸுன்னத் வல் ஜமாஅத்தினர்கள் ஏகோபித்தி ருக்கிறார்கள். ஆகவே, பேதங்க ளும், விதர்ப்பங்களும் அல்லாஹ் வின் கலாமின் பேரில் அறிவிக்கக் கூடியதிலேயே அல்லாது அல்லாஹ் வின் கலாமில் அல்ல. அது ஒன்றேயாகும். பலதல்ல. இந்த கலாமின் பேரில் அறிவிக்கக் கூடியதை ஜிபுரீல் (அலைஹிஸ் ஸ லாம்) அவர்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்து, அவர்கள் ரஸூல்மார்களிடம் கொண்டு வந்தார்கள். ஆகவே, வேதங்கள் இறைவனாலேயே அனுப்பப்பட்ட வையே ஆகும். நபிமார்கள் ஆலோசித்து முடிவு செய்த |

| | |
|---|---|
| | அவர்களுடைய வார்த்தைகள் அல்ல. |
| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
| | அது (குர்ஆன்) ஆகிறது றப்புல் ஆலமீனால் இறக்கப்பட்டதாகும். ரூஹுல் அமீன் (ஜிபுறீல்) அதைக் கொண்டு வந்தார்.' –அல்குர்ஆன் 26:194<br><br>'நாமே குர்ஆனை இறக்கி வைத்தோம். நாமே அதைப் பாது காக்கக் கூடியவருமாகும்.'-அல் குர்ஆன். |
| <u>**நபிமார்கள், ரஸூல்மார்களைப் பற்றிய கொள்கை**</u><br><br>'எல்லா நபிமார்களும், அவுலி யாக்களும் அவன் (அல்லாஹ்) உடைய முன்னிலையில் ஒரு அற்ப அணுவை விடவும் குறைந்தவர் களே'.<br>(தக்வியத்துல் ஈமான் பக்கம் 45)<br><br>'எல்லாச் சிருஷ்டிகளும் சிறியதோ, பெரியதோ அல்லாஹ் வின் முன்னால் செம்மானை விடவும் மிக அற்பமானவர்களே யாகும்'. (தக்வியத்துல் ஈமான் பக்கம் 11)<br><br>அவுலியா, அன்பியா, இமாம், ஷெய்கு, ஷுஹதா அதாவது | <u>**நபிமார்கள், ரஸூல்மார்களைப் பற்றிய கொள்கை**</u><br><br>நபிமார்கள் எல்லா சிருஷ்டிகளி லும் மேலானவர்கள். அவர்கள் எல்லோர்களிலும் நாயகம் முஹம் மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மிகவும் வரிசையானவர்கள்.<br><br>'நிச்சயமாக அல்லாஹு தஆலாஆதமையும், நூஹையும், இபுறாஹிமையும், அவர்களின் சந்ததிகளையும் இம்றானுடைய சந்ததிகளையும் முழு உலகத்தார்-களிலும் உயர்வானவர்களாகத் தெரிந்து கொண்டான்.' (குர்ஆன் 3:33)<br><br>அல்லாஹ் நபிமார்களிடத்தில் |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அல்லாஹ்விடத்தில் எத்தனை முடுகுதலான அடியார்கள் இருக்கிறார்களோ அவர்கள் எல்லோர்களும், மனிதர்களும்,, ஒன்றுக்கும் இயலாதவர்களும் நமது சகோதரர்களுமாவார்கள்.' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 49) | அறுதிமானம் எடுத்ததை நினைத்துப் பாரும். நான் உங்களுக்கு வேதத்தையும், ஹிக்மத்தையும் தருவேன். பின்னர் உங்களிடம் (மகத்துவமிக்க ஒரு தூதர் வருவார். உங்களிடம் உள்ளதை (வேதங்களை)உண்மை |
| எவருடைய பெயர் முஹம்மது அல்லது அலி என்று இருக்கிறதோ அவர் எந்த வஸ்துவின் பெயரிலும் அதிகாரமுடையவரல்ல. (தக்வியத்துல் ஈமான் பக்கம் 33)<br><br>'ரஸூல் விரும்பினதால் ஒன்றும் ஆகப் போறதில்லை'. (தக்வியத துல் ஈமான் பக்கம் 47)<br><br>'இந்த வேலைகளிலும் எல்லோர்களும் அடிமைகளே. பெரியவராகட்டும், சிறியவராகட்டும் எல்லோர்களும் ஒன்றுபோல் ஒன்றும் அறியாதவர்களும், மடையர்களுமா வார்கள்'. (தக்வியத்துல் ஈமான் பக்கம் 19)<br><br>'இந்த வேலைகளில் எல்லா அடியார்களும் பெரியவராகட்டும், சிறியவராகட்டும் எல்லோர்களும் சமமானவர்களேயாவார்கள். இயலா தவர்களும் சுயாதிகாரமற்றவர்களு மாவார்கள்'. (தக்வியத்துல் ஈமான் பக்கம் 19) | யாக்கி வைப்பார். நீங்கள் அவசியம் அவரைக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும். அவசியம் அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்ன? அப்படியே வாக்குறுதி கொடுக்கிறீர்களா? என்னுடைய இந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டீர்களா? எல்லோர்களும் நாங்கள் வாக்குறுதி கொடுத்தோம் என்று சொன்னார்கள். அவன் (அல்லாஹ்) சொன்னான், நீங்கள் ஒருவர் மற்றொருவருக்கு சாட்சியாக இருங்கள். நானும் உங்களோடு சாட்சிகளில் ஆகிறேன்.' –அல்குர்ஆன் 3:81.<br><br>'நிச்சயமாக அல்லாஹு தஅலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வானவர்களைக் காணவும், சகல நபிமார்களைக் காணவும் வரிசையாக்கி வைத்திருக்கிறான்' (முல்லா அலி காரீ ஷறஹு பிக்ஹுல் அக்பர் பக்கம் 136)<br><br>நபிமார்கள் நுபுவ்வத்திற்கு முன்னும் பின்னும் குப்ரு, ஷிர்கு, |

| | |
|---|---|
| ‘அவனுடைய சமூகத்தில் அவர்கள் (நபிமார்கள்) உடைய நிலைமை எப்படி இருந்ததென்றால், எப்பொழுதாவது, ஒரு கட்டளையைச் சொல்வானேயானால் அவர்களெல்லோர்களும் பயத்தினால் போதமற்றவர்களாகிவிடுவார்கள்.’ (தக்வியத்துல் ஈமான்.பக் 23)<br><br>‘நபிமார்கள் தங்கள் உம்மத்துக்களை விட விசேஷமாக | கெட்ட கொள்கை முதலியவைகளை விட்டும் பெரும் பாவம், சிறு பாவங்களை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள். அல்லாஹ் சொல்கிறான், ‘(ஏ இபுலீஸே) என்னுடைய சொந்த அடியார்கள் பேரில் உனக்கு அதிகாரமில்லை’. (குர்ஆன்)<br><br>‘இபுலீஸ் தானும் சொல்கிறான், |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| இருப்பதெல்லாம் இல்மிலேயேயாகும். அமலிலோ அநேக வேளைகளில் வெளிரங்கத்தில் உம்மத்துக்கள் அவர்களுக்குச் சமமாகவும், மேலும் அவர்களைவிட மிகைத்திடவும் செய்கிறார்கள்.’ (முஹம்மது காஸிம் நானூத்தவி-தஹ்தீருன்னாஸ் பக்கம் 5)<br><br>‘இதுவாகிறது கப்ருஸ்தானுக்கு ஸஜ்தா செய்வது ஹறாம் என்ற பேச்சாகிறது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கப்ரு விஷயமான பெச்சாக இருக்கும். அதில் அவர்கள் ரொம்ப சக்தியான, பர்ஜகிய்யான, ஹயாத்துடனேயே இருக்கிறார்கள். (அஷ்றபு அலி தானவி-ஹிப்ளுல் ஈமான் பக்கம் 3)<br><br>‘இஸ்மாயில் திஹ்லவி | ‘அவர்கள் எல்லோர்களையும் வழிகெடுத்துப் போடுவேன், அவர்களில் கலப்பற்ற உன்னுடைய அடியார்களைத் தவிர’. அல்குர்-ஆன்.<br><br>‘எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வஹி வருவதற்கு முன்னும் பின்னும் ஒருக்கணமும் கூட பெரும் பாவம் சிறு பாவம் செய்யவில்லை என்பதில் ஒருவருக்கும் கிலாபு (ஆட்சேபணை) இல்லை என்று இமாம் அபூஹனீபா (ரஹிமஹுல்லாஹு) அவர்கள் தங்களின் பிக்ஹுல் அக்பர் எனும் நூலில் சொன்னார்கள்.’-தப்ஸீர் அஹ்மதிய்யா.<br><br>மேற்சொன்ன ஆயத்தின் கீழ்:- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏசியவன், |

| | |
|---|---|
| நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் அவர்கள் சொன்னதாக பொய்யைக் கட்டி எழுதுகிறார்.<br><br>‘நானும் ஒரு நாளைக்கு மண்ணோடு மண்ணாகிப் போகிறவ னாக இருக்கும்.’ (தக்வியத்துல் மான் பக்கம் 49)<br><br>‘தொழுகையில் ஷெய்கு அவர்கள் போன்ற வேறு பெரியார்கள் பக்கம் மனதைச் செலுத்துவதாகிறது, ரஸூல் ஸல்- | அவர்கள் பேரில் குறை சொன்னவன் அல்லது அவர்கள் அளவிலோ, அவர்கள் வம்சத்திலோ அல்லது அவர்களின் குணங்களிலேயாயினும் குறைபாட்டைச் சேர்த்தவன் அல்லது அவர்களை ஏசுவதற்காக, ஏளனம் செய்வதற்காக சாடை செய்தவன் அவர்களின் கண்ணியத்தைக் குறைத்து பேசினவன் அத்தனை பேர்களும் அவர்களை ஏசியவர்களே ஆவார்கள். இவர்களுக்கு மார்க்கத் தீர்ப்பாகிறது வெட்ட வேண்டும் என்பதே’ (கிதாபுஷ் ஷிபா, பாகம் |

| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
|---|---|

லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களானாலும் சரியே. தன்னுடைய மாடு, கழுதை உருவத்தில் மூழ்குவதை விட எத்தனையோ மடங்கு கெட்டதாகும்'. (இஸ்மாயில் திஹ் லவி-ஸிராத்தே முஸ்தகீம் பக்கம் 97)

குறிப்பு:- கப்றுகளில் சாதாரண மக்களும் பர்ஜகிய்யான ஜீவியத்தோடுதானிருக்கிறார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் பரிசுத்த திரு மேனியில் மாசு மறு கூடப்படாது உலகில் ஜீவித்த ஜீவியத்தோடவே இருக்கிறார்கள்'.

'நபிமார்களின் திரேகங்களைத் தீண்டக் கூடாதென அல்லாஹ் பூமியை விலக்கி இருக்கிறான்'. -ஹதீது.

**அல்லாஹ் அல்லாதவர்களுக்கு ஸஜூது செய்வது ஷிர்காகும்.**

'மூன்றாவது கரும் சில வேலைகள் அல்லாஹ் தனக்கு மரியாதை செய்வதற்கென சொந்தப் படுத்திக் கொண்டான். அதற்கு இபாதத்து என்று சொல்வார்கள். எப்படி போலென்றால் ஸஜ்தாச் செய்வது ருகூவு செய்வது, கைகட்டி நிற்பது அவன்பேரில் பொருள் செலவு செய்வது அவன் 2, பக்கம் 233)

'உலமாக்கள் எல்லோர்களும் ஏகோபித்திருக்கிறார்கள், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஏசியவன், குறைவாகக் கண்டவன் காபிராகும். அவன் பேரில் அல்லாஹ்வின் அதாபு இறங்கும். அவன் விஷயத்தில் மார்க்கத் தீர்ப்பாகிறது, அவனை வெட்ட வேண்டும் என்பதே. எவனாவது அவன் காபிர் என்பதிலோ அவனுக்கு அதாபு உண்டு என்பதிலோ சந்தேகம் வைப்பானேயானால் அவனும் காபிராகி விடுகிறான். (கிதாபுஷ் ஷிபா, பாகம் 2, பக்கம் 234)

**அல்லாஹ் அல்லாதவர்களுக்கு வணக்கமாகச் செய்கிற ஸஜுதுதான் ஷிர்காகும்.**

ஸஜ்தா செய்வது இரண்டு விதமாக இருக்கிறது. ஒன்று வணக்கத்திற்கு என்று செய்வது, இது அல்லாஹ் அல்லாதவர்களுக்கு செய்வது எக்காலத்திலும் எந்த ஷரீஅத்திலும் விலக்கப்பட்டதாகும்.

மற்றது காணிக்கையாக மரியாதைக்காகச் செய்வது இது. நம்முடைய ஷரீஅத்தில் அல்லாஹ் அல்லாதவர்களுக்கு செய்வது ஆகாது. ஹறாம் ஆகும். ஆனால் ஷிர்க் அல்ல. இது முந்திய ஷரீ-

| | |
|---|---|
| பேரில் நோன்பு வைப்பது (இப்படி- | |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| யாக இன்னும் சிலவற்றை எழுதிவிட்டு தொடர்ந்து சொல்கிறார்) பின்னர் எவனாகிலும் எந்த நபிக்கோ, வலிக்கோ இம்மாதிரியான வேலைகளைச் செய்வானேயானால், அவன் பேரில் ஷிர்க் உண்டாகிவிடும். இதற்கு இபாதத்தில் ஷிர்க்கு வைப்பது என்று சொல்வார்கள். அதாவது, அல்லாஹ்வுக்கு செய்வதுபோல் | அத்தில் ஆகுமானதாக இருந்தது. ஷிர்க்காக இருந்தால் எல்லா ஷரீஅத்திலும் விலக்கப்பட்டே இருக்கும்.<br><br>நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு மலாயிகத்துகளை ஸுஜூது செய்யும்படி அல்லாஹ் ஏவினான். அவர்கள் ஸுஜூது செய்தார்கள். |

| | |
|---|---|
| மரியாதை செய்வதாகும்.’ (தக்வி-யத்துல் ஈமான் பக்கம் 8)<br><br>‘ஷிர்கை விட்டு விலக்கலும், தௌஹீதைப் பற்றி ஏவலும் ஷரீஅத்திலும் இருக்கிறது. ஆகவே, இதுவே ஈடேற்றத்தின் வழியாகும். இதல்லாத எல்லா வழிகளும் பிழையாகும்.’ (தக்வியத்துல் ஈமான் பக்கம் 11)<br><br>‘ஸூறா ஹாமீம் ஸஜ்தாவில் அல்லாஹ் சொல்கிறான், ‘நீங்கள் சூரியனுக்கும், சந்திரனுக்கும் ஸஜ்தா செய்யாதீர்கள். நீங்கள் அவைகளைப் படைத்த அல்லாஹ்வுக்கு ஸஜ்தா செய்யுங்கள். நீங்கள் அவனுக்கு அடிமையாக ஆகுவதற்கு விரும்புவீர்களேயானால் அவனுக்கே ஸஜ்தா செய்ய வேண்டும். சந்திரன், சூரியன் எதற்கும் ஸஜ்தா செய்யாதிருக்கவும். இந்த ஆயத்தினால் விளங்க வருகிறது. நம்முடைய மார்க்கத்திலும் ஸஜ்தாச் செய்வது அல்லாஹ் உடைய ஹக்கு என்றே சொல்லி | நபி யூசுபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவர்களின் தகப்பனார் நபி யஃகூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சகோதரர்களும் ஸுஜூது செய்தவர்களாக விழுந்தார்கள். – குர்ஆன்.<br><br>‘மலாயிக்கத்துக்கள் செய்த அந்த ஸுஜூது காணிக்கையாக செய்த ஸுஜூதாகும். நபி யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவர்களது சகோதரர்கள் செய்த ஸுஜூதைப் போல’ (தப்ஸீர் காஸின் முதல் பாகம் பக்கம் 87)<br><br>‘ஸுஜூது செய்ததாக விழுந்தாகள் என்ற திருவசனத்தில் கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்,<br><br>‘அந்நாளில் ஜனங்கள் மரியாதை செய்வது ஒருவக்கொருவர் ஸுஜூது செய்வதாக இருந்தது.’ |

| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
|---|---|
| இருக்கிறான். ஆகவே, எந்தச் சிருஷ்டிக்கும் செய்யக் கூடாது. ஏனென்றால், சிருஷ்டி என்றதில் சந்திரன், சூரியன், நபி, ஒலியும் சமமேயாகும். முந்திய மார்க்கங்களில் யார் யாரோ சிருஷ்டிக்கும் ஸ | ஸுஹைல் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டு ரிவாயத்து செய்யப்படுகிறது:- ‘மஆது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எமனிலிருந்து வந்ததும் நாயகம் ஸ |

| | |
|---|---|
| ஜ்தா செய்திருக்கிறார்கள். எப்படியென்றால், மலாயிக்கத்துக்-கள் ஹளரத் ஆதம் (அலைஹிஸ் ஸலாம்) அவர்களுக்குச் செய்திருக்கிறார்கள். ஹளரத் யஃகூபு (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் யூசுபு ஹளரத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு செய்திருக்கிறார்கள். ஆகையினால் நாமும் யாராவது பெரிய மனிதருக்கு செய்தால் குற்றமில்லை என்று எவராவது சொன்னால் அது தவறாகும். ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) காலத்தில் ஜனங்கள் சகோதரிகளை திருமணம் செய்து கொண்டிருந்தார்கள்) அப்படியானால், இப்படியான காரணங்கள் சொல்லக் கூடியவர்களும் தங்கள் சகோதரிகளை விவாகம் செய்து கொள்ள வேண்டுமே, அசல் பேச்சு இதுதான்.<br><br>அதாவது, அடியார்கள் அல்லாஹ்வின் கட்டளையை ஒப்புக் கொள்ள வேண்டும். எப்பொழுது, அவன் ஒரு கட்டளை செய்வானோ அதை மனமுவந்து ஒப்புக் கொள்ள வேண்டும். முந்திய ஜனங்கள் பேரில் அப்படித்தானே இருந்தது. நமக்கு ஏன் இப்படியானது என்று குதர்க்கங்கள் பேசக் கூடாது. | ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஸஜ்தா செய்தார்கள். இதென்ன மஆது? என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். யூதர்கள் அவர்களின் பெரியோர்களுக்கும் அறிஞர்களுக்கும் ஸுஜூது செய்கிறார்கள். நஸறாக்கள் பாதிரிமார்களுக்கு ஸஜ்தா செய்வதைப் பார்த்து இது என்னவென்று கேட்டேன். இது நபிமார்கள் செய்கின்ற காணிக்கை என்று சொன்னார்கள் என்று மஆது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.<br><br>அவர்கள் நபிமார்கள் பேரில் பொய்யைச் சொல்கிறார்கள் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். (தப்ஸீர் கபீர் முதல் பாகம் பக்கம் 427)<br><br>‘எஹுதிகள், நஸறாக்கள் அவர்கள் நபிமார்கள் பெயரில் பொய்யைச் சொல்கிறார்கள்.’ அதாவது இப்படி மரியதைக்காக ஸுஜூது செய்வது நபிமார்களுடைய வழக்கம் என்று சொன்னதை பொய் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார் |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|

அதற்கு உவமானமாவது, ஒரு அரசன் தன் தேசத்தில் ஒரு காலம் வரையிலும் ஒருசட்டத்தைப் பிறப்பித்திருந்தான். அதற்குப் பின்னால், வேறொரு கட்டளையைப் பிறப்பித்தான். எவனாவது, நான் முந்திய சட்டத்தின்படி தான் நடப்பேன். பிந்திய சட்டத்தை ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று சொல்வானேயானால், அவன் குற்ற வாளியாகி விடுவான்'. (தக்வியத்துல் ஈமான் பக்கம் 30)

## அல்லாஹ் அல்லாதவர்கள் பெயரால் மிருகம் விடுவது ஷிர்க்.

ஸூரா அன்ஆமில் எதை அல்லாஹ் அல்லாதவருக்கு என சொல்லப்பட் டதோ அந்த ஆகாத மிருகமும் அதாவது எப்படி பன்றி இரத்தம், செத்த மிருகம் ஹராமானதாக, அசுத்தமானதாக ஆகிவிட்டதோ அதேபோல் அந்த மிருகமும் அசுத்தமாகவும், ஹராமா கவும் ஆகும். அல்லாஹ் அல்லாத வர் பெயர் சொல்லப்பட்டதனால்,

களேயல்லாது 'இந்த வேலை ஷிர்க்கு என்றோ, நீர் இந்த வேலையைச் செய்து விட்டீர், திரும்பக் கலிமா சொல்லி இஸ்லாமாக வேண்டும்' என்றோ சொல்லவில்லை. ஷிர்க்காக இருந்தால் கண்டிப்பாக விக்கியே இருப்பார்கள். மேலும், அல்லாஹ்வும் மலக்குகளை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அலவர்களுக்கு ஸுஜூது செய்யும்படி ஏவி இருக்கவும் மாட்டான். இஸ்மாயில் திஹ்லவி சொல்வது போல் பொதுவாக எந்தவிதமான ஸுஜூதும் ஷிர்க்கு என்றிருந்தால் மலாயிகத் துகளும் நபிமார்களும், அல்லாஹு தஆலாவும் கூட இந்த ஷிர்க்கை விட்டும் தப்பமாட்டார்கள்.

இஸ்மாயில் திஹ்லவியின் குரு இபுலீஸ் மல்வூன் மாத்திரம்தான் தப்புவான். கேவலம் என்னே இந்த இபுலீஸின் தவ்ஹீது.

## அல்லாஹ் அல்லாதவர்கள் பெயரால் மிருகம் விடுவது ஷிர்க் அல்ல.

முஸ்லிம்கள் எங்குமே மிருகம் அறுக்கும் போது 'பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்' என்று சொல்லி அறுப்பார்களேயல்லாது அறுக்கும் போது அல்லாஹ் அல்லாத வேறு யாருடைய பெயரையும் சொல்லி அறுப்பது வழக்கமில்லை. அப்படி அறுப்பதாகச் சொல்வது அவர்கள் பேரில் படுதூறு சொல்வதாகும்.

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அதுதானே பாவமாகி விட்டது இந்த ஆயத்தினால் தெரியவருகிறது. எந்த மிருகத்தையாவது யாருடைய பெயரையாவது சொல்லி விடப்பட்டால் அந்த மிருகம் அசுத்தமாகவும், ஹராமாகவும் ஆகிவிட்டது. இந்த ஆயத்தில் அறுக்கிற சமயத்தில் யாருடைய பெயரையாவது சொல்லப்பட்டது என்ற விபரமில்லை. எந்த சிருஷ்டியின் பெயரையாவது சொல்லி பிரஸ்தாபமாகிவிட்டதோ எப்படியென்றால், இந்த மாடு செய்யது அஹ்மது கபீர் அவர்களுக்குடையது. இந்த ஆடு ஷெய்குஸ்ஊத்து அவர்களுக்கு உடையது என்பது போல. அது ஹராமாக இருக்கும் என்று மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. பின்னர், எந்த மிருகமுமாகட்டும், கோழி, ஒட்டகம் எதுவானாலும் சரியே. எந்த மலக்குகளுடைய பேரானாலும் கரி, ஒலி, நபி, தகப்பன், பாட்டன் அல்லது பேய், பிசாசு உடைய பெயருக்காகவும் விடப்படுமானால் அது ஹராமாகும். அசுத்தமாகம். அதைச் செய்கிறவன் பேரில் ஷிர்க்கு தரிபடும்.' (தக்வியத்துல் ஈமான் பக்கம் 32)<br><br>***கேள்வி:-*** யார் யெரிலாவது ஆடு, கோழி அறுப்பது எப்படி? ஜைது என்பவர் சொல்கிறார், அல்லாஹ் அல்லாத யாருடைய பெயரும் சொல்லப்பட்டதாக | அறுக்கும் நேரத்துக்கு முன்னால் அந்த மிருகத்தை யார் பக்கமாகச் சேர்த்து, இது இன்னாருடைய மிருகம் அல்லது அகீகா அல்லது உள்ஹிய்யாவுக்குள்ள மிருகம் அல்லது இன்ன பெரியாருக்கு கத்தம் பாத்திஹா ஓதி அல்லது ஸதக்கா கொடுத்து அதன் தவாபைச் சேர்ப்பதற்காக நேர்ந்து விடப்பட்டது என்று சொல்வதுபோல் இப்படியானால் அறுக்கும் போது 'பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்' என்று சொல்லி அறுத்தால் அது ஹலாலாகும். இதை ஷிர்க்கு ன்று சொல்வது ஷரஹுக்கு மாற்றமாகும். குர்ஆனில் 'மாஉஹில் ல லிகைரில்லாஹி'-அல்லாஹ் அல்லாதவர் பெயர் சொல்லப்பட்டது' என்று 2:173, 5:3, 6:126, 16:115 வது ஆயத்துக்களில் வருகிறது. அவைகளுக்கெல்லாம் ஸஹாபாக்கள் எல்லோர்களுமே அறுக்கும் போது அல்லாஹ் அல்லாதவர்கள் பெயர் சொல்லப்பட்டது' என்றே வியாக்கியானம் செய்திருக்கிறதாக தப்ஸீர் துர்ருல் மன்தூரு, தப்ஸீர் ஜலாலைன், தப்ஸீர் லூபாபுத் த.்.வீல், தப்ஸீர் கபீர் இன்னும் மற்ற தப்ஸீர்களிலெல்லாம் எழுதுகிறார்கள். இஜ்மாஉம் (ஸஹாபாக்களின் ஏகோபித்த அபிப்பிராயமும்) ஒரு தலீல் (சான்று) ஆகும்.<br><br>கன்ஸுடைய ஷறஹு |

| | |
|---|---|
| இருந்தால் ஹராமாகும். அம்ரு என்பவர் சொல்கிறார், | ஸெய்லயீ என்னும் கிதாபில் வருகிறது. இந்த ஆயத்தில் (அல்லாஹ் |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அறுக்கிற நேரத்தில் அல்லாஹ் அல்லாதவர் பெயர் சொல்லப்பட்டால் ஹராமாகும். மற்ற நேரங்களில் யாருடைய பெயர் சொல்லப்பட்டிருந்தாலும், அதுவும் ஹராம் என்று சொன்னால் எல்லா ஆடு, மாடுகளுமே ஹராம் ஆக அறுக்கப்பட்டதாகவே ஆகிவிடும். ஏனென்றால், ஆடு மேய்க்கிறவர்கள் எல்லோருகளுமே இது இன்னாரு | அல்லாதவர்களின் பெயர் சொல்லப் பட்டது என்று பொதுப்படையாக இருக்கிறது. இதில் அறக்கிற சமயத்தில் அல்லது சமைக்கிற வேளையில் அல்லது புசிக்கிற வேளையில் அல்லாஹ் அல்லாதவர் பெயர் சொல்லப்பட்டது என்பதாக அறிவிக்கப்படவில்லையே என்று சொன்னால், நாம் சொல்வோம், முன்னோர்கள் எல்லோர்களுமே |

| | |
|---|---|
| டைய ஆடு, அது இன்னாருடைய ஆடு என்று சொல்கிறார்கள். அப்போது அதன் பேரிலும் அல்லாஹ் அல்லாதவருடைய பெயர் சொல்லப்பட்டதாகவே ஆகிவிடுகிறது. இதற்கு சரியான விடை என்ன?<br><br>**பதில்:-** எந்த மிருகத்தின் பேரில் அல்லாஹ் அல்லாதவருடைய பெயர் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதை அதே நிய்யத்தோடு 'பிஸ்மில்லாஹி' சொல்லி அறுத்தாலும் சரி ஹறாமாகும். அந்த மிருகமே ஹராமாகிவிட்டது. அம்மாதிரியான மிருகத்தை அறுக்காது போயினும் சரியே, மேலும் அவன் இன்னாருடைய ஆடு என்று அதன் சொந்தக்காரராய் இருப்பதையொட்டிச் சொல்வது ஆகும். ஆனால், யாருக்கும் மரியாதைக்காகவும் அவரளவில் முடுகுதல் ஆகுவதற்காகவும் அப்படி இன்னாருடயது என்று சொல்வது ஹராமாகும். அனால், அல்லாஹ்வுக் காக யாருக்காவது சேர்த்து வைக்கிறது என்றிருந்தால் அதில் எவ்வித தோசமுமில்லை. | இதன் கருத்து அறுக்கும் சமயத்தில் அல்லாஹ் அல்லாதவர்களுடைய பெயர் சொல்லப்பட்டது என்று ஏகோபித்திருக்கிறார்கள். ஆகையால் இந்த ஆயத்து பொதுப் படையானது இல்லை. விவரிக்கப் பட்டதாகவேயாகும். ஆதாரம் பூரண மாகிவிட்டது.<br><br>பதாவா ஆலம்கீரியில் வருகிறது: 'நெருப்பு வணங்கிகள் அவர்களின் நெருப்பாலயத்திற்கோ அல்லது காபிர்கள் அவர்களது விக்கிரகங்களுக்கோ நேர்ந்து விட்ட ஆட்டை ஒரு முஸ்லிம் அறுத்தானேயானால், அதைத் திண்ணலாம். ஹலாலாகும். அவர்கள் நேர்ந்து விட்டது கூடாது. அதைக் கொண்டு அந்த மிருகம் உடையக்காரனுடைய உடைமையை விட்டும் நீங்காது. அவனுடைய உத்தரவைக் கொண்டு முஸ்லிம் அறுத்தால் ஹலாலாகும். அதைத் திண்ணலாம்.' 'நீங்கள் மூமின்களாக இருப்பீர்களேயானால், அல்லாஹ்வின் பெயர் சொல்லப்பட்- |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அல்லாஹ் அல்லாதவருக்கு மரியாதை செய்வதற்காக அறுப்பதானால் ஹராமாகிறது. எந்த மனிதனும் அதற்கு சொந்தக்காரன் என்பதற்காகவல்ல. இவை இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.' | தைத் திண்ணுங்கள்' —குர்ஆன் 6:14<br><br>'உங்களுக்கு என்ன? நீங்கள் ஏன் அல்லாஹ்வின் பெயர் சொல்லப்பட்டதைத் திண்கிறீர்க |

| | |
|---|---|
| (பதாவா ரஷீதிய்யா பக்கம் 400)<br><br>**<u>அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பபதும், அவர்களிடம் உதவி தேடுவதும் ஷிர்க் ஆகும்.</u>**<br><br>மிகுந்த ஜனங்கள் ஷெய்குமார்களையும், நபிமார்களையும், இமாம்களையும், ஷுஹதாக்களையும் கஷ்ட காலத்தில் கூப்பிடுகிறார்கள், அவர்களிடத்தில் நாட்டங்களைக் கேட்கிறார்கள். அவர்களுக்கு நேர்ச்சை வைக்கிறார்கள். தங்கடங்கள் தட்டுண்டு போவதற்காக தங்கள் பிள்ளைகளை அவர்கள் பக்கம் சேர்த்து ஒருவர் அப்துன்னபி (நபியின் அடிமை என்று பெயர் வைக்கிறார். ஒருவர் அலிபக்ஷ் (அலியின் பிச்சை) என்றும், ஒருவர் குலாம் முயீனுத்தீன் (முயீனுத்தீன் உடைய தொண்டன்) என்றும் வைக்கிறார்._<br><br>ஒருவர் அவர் பெயருக்கு மிருகம் விடுகிறார். ஒருவர் கஷ்டக் காலத்தில் அவர்களைக் கொண்டு பாதுகாவல் தேடுகிறார். முடிவாக ஹிந்துக்கள் தங்கள் விக்கிரகங்கள் விஷயத்தில் செய்யக் கூடியதை எல்லாம் (இந்த) பொய்யான முஸ்லிம்கள், நபிமார்கள், அவுலி- | ளில்லை. –அல்குர்ஆன் 6:120<br><br>**<u>அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பபதும், அவர்களிடம் உதவி தேடுவதும் ஷிர்க்கல்ல.</u>**<br><br>முஸ்லிம்கள் அல்லாஹ் அல்லாதவர்களுக்கு அவர்களின் தாத்தை வாஜிபுல் வுஜூது (உளதாக இருப்பது அவசியமானது) என்றோ அவர்களின் லட்சணங்களை தாத்திய்யானது (அல்லாஹ்வால் கொடுக்கப்படாமல் தனக்குத்தானே உண்டானது) என்றோ நம்பவில்லை. எல்லாவர்களையும் அவர்களின் லட்சணங்களையும், செயல்களையும் அல்லாஹ்தான் படைத்தான்.<br><br>‘உங்களையும் உங்கள் செயல்களையும் அல்லாஹ் படைத்தான்’-குர்ஆன் 37:97<br><br>எல்லோர்களும் தாத்திலும், ஸிபாத்திலும், செயலிலும் ஒவ்வொரு கணமும் அல்லாஹ் அளவில் தேவையானவர்கள் என்றே நம்பி இருக்கிறார்கள். இப்படி அல்லாஹ் அளவில் தேவையான சிருஷ்டிகளை வணக்கத்திற்கு உரியவைகள், தேவையற்றவைகள் |

| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
|---|---|
| யாக்கள் விஷயத்தில் செய்து முடிக்கிறார்கள். தங்களை முஸ்லிம்கள் என்று வாதாடவும் | என்று எப்படி நம்புவார்கள்? ஒரு போதும் நம்பமாட்டர்கள்.அவைகளை |

செய்கிறார்கள். பின்னர் நீங்கள் ஈமான் கொண்டவர்கள் என்று தாவாவும் செய்து கொண்டு, இப்படி ஷிர்க்கான கருமம் ஏன் செய்கிறீர்கள் என்று யாராவது கேட்டால், நாங்கள் நபிமார்கள், அவுலியாக்கள் பேரிலுள்ள பக்தியை வெளிப்படுத்துகிறோம். நாங்கள் ஷிர்க்க செய்யவில்லை. ஷிர்க்கு என்றாவது அவர்களை அல்லாஹ்வைப் போன்றவர்கள் என்று நம்பினால்தானே, நாங்கள் அவர்களை அல்லாஹ்வின் அடிமைகள், அவனுடைய சிருஷ்டிகள் என்றேதான் கருதுகிறோம். அவர்களுக்கு அல்லாஹ் சக்தியைக் கொடுத்திருக்கிறான். அவர்கள் செய்கிறார்கள். நாங்கள் அவர்களைக் கூப்பிடுவது அல்லாஹ்வைக் கூப்பிடுவதேயாகும். அவர்கள் அல்லாஹ்வின் அன்பர்கள் அவர்கள் அல்லாஹ்விடம் எங்களுக்கு சிபாரிசு செய்வார்கள் என்று சொல்கிறார்கள்'- தக்வியத்துல் ஈமான் பக்கம் 4.

'அல்லாஹ்வின் தூதருடைய காலத்திலும் காபிரீனக்ள் தங்கள் விக்கிரகங்களை அல்லாஹ்வுக்குச் சமமானது என்று கருதவில்லை. என்கிலும் அவனுடைய அடிமை என்றேதான் கருதி இருந்தார்கள். இன்னும் அவனுடைய சக்தியைப் போன்ற சக்தி அவர்களுக்கு இருப்ப

வணங்க வேண்டும் என்ற எண்ணமும் கூட அவர்கள் மனதில் வருகிறதுமில்லை. ஆனால், நபிமார்களும், வலிமார்களும் அல்லாஹ்வின் பக்தர்களும் அன்பர்களுமாக இருப்பதனால், அவர்களைக் கொண்டு வஸீலா தேடுவார்கள்.

'அல்லாஹ்வே இன்னாரின் பொருட்டினால் என் நாட்டத்தை நிறைவேற்று' என்று அல்லாஹ்விடம் கேட்பார்கள். 'இன்னாரே, அல்லாஹ்விடத்தில் என் நாட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று நேரடியாக அவர்களிடம் நாட்டத்தைக் கேட்பார்கள். அல்லது கஷ்ட நேரத்தில் 'நாட்டத்தை நிறைவேற்றுங்கள்' என்ற வார்த்தைக் கூட சொல்லாமல் 'இன்னாரே' என்று பெயரை மட்டும் சொல்லி கூப்பிடுவார்கள். அவர்கள் சிபாரிசு தேடுகிறேன், மன்றாடுகிறேன், இரட்சிப்புத் தேடுகிறேன் என்றோ இன்னாரின் பொருட்டைக் கொண்டு அல்லது பதவியைக் கொண்டு கேட்கிறேன் என்றோ இந்த பதங்களில் எதைச் சொன்னாலும் சரி. இவைகளுக்கிடையில் எவ்வித பாகுபாடுமில்லை. எந்தப் பதத்தைக் கொண்டு சொன்னாலும் அவர்களின் வார்த்தைக்குக் கருத்து, உதவி எதார்த்தத்தில் அல்லாஹ்விடமிருந்து தான் வருகிறது. அவனே தான் உதவியை உண்டாக்குகிறான்.இவர்கள் உதவி வருவதற்கு

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| தாகவும் தரிபடுத்தவில்லை. ஆனால், இப்படி(அவைகளை) கூப்பிடுகிறதும், அவைகளுக்கு நேர்ச்சை வைப்பதும், அவைகளைத் தங்களுக்கு வக்கீலாகவும், சிபாரிசு செய்பவைகளாகவும் கருதியது தான் அவர்களின் ஷிர்கும் குப்ருமாகும். ஆகையினால் எவனாவது எந்தச் சிருஷ்டியுடனும் இப்படியான விவகாரங்கள் செய்வானேயானால், அவைகளை அல்லாஹ்வின் அடிமைகள் என்று நம்பினாலும் சரி, அவனும் அபூஜஹ்லும் ஷிர்க்கில் சமமானவர்கள்'. (தக்வியத்துல் ஈமான் பக்கம் 6).<br><br>'ஒருவருக்கு முன்னால் நிற்பதும், அவரைக் கூப்பிடுவதும், அவர் பெயரைச் சொல்லிக் கொண்டே இருப்பதும் இவைகளை எல்லாம் அல்லாஹ் ஸாஹிபு தனக்கு மரியாதை செய்வதற்கென சொந்தப்படுத்திக் கொண்டான். வேறே யாருடனும் இம்மாதிரி செய்வது ஷிர்க்காகும்' – தக்வியத்துல் ஈமான் பக்கம் 31.<br><br>'அவர்களில் (காபிரீன்களில்) மிகுந்தவர்கள் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வதில்லை. (அவன் உண்டு என நம்புகிறதில்லை) அவர்கள் (அவனோடு வணக்கத்திற்குரிய வேறு வஸ்துவும் | காரணம் (ஸபபு) ஆக, உதவி வெளியாவதற்கு மள்ஹர் (உதயஸ்தானம்) ஆக இருக்கிறார்கள் என்பதுதான் முஸ்லிம்களின் கருத்தேயல்லாது 'நபியிலிருந்து உதவி உண்டாகிறது (அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த சக்தியைக் கொண்டல்லாமல் அவர்களே சுயமாக உதவி செய்கிறார்கள் என்பதல்ல. இப்படி ஒரு முஸ்லிமும் கருத மாட்டான். ஏனென்றால் உலகில் நடக்கக் கூடிய நன்மை, தீமைகள் அத்தனையும் அல்லாஹ்வின் கற்பனையைக் கொண்டேதான் நடக்கிறது என்று முஸ்லிம்கள் நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களின் இத்தகைய வார்த்தைகளுக்குத் தவறான கருத்து வைத்துக் கொண்டு அவர்களை வஸீலா தேடுவதை விட்டும் விலக்குவதாகிறது, மார்க்கத்தில் மாற்றத்தையுண்டாக்குவதும் பாமர மக்களை குழப்பத்திலாக்குவதுமேயாகும்' (இமாம் தகிய்யுத்தீனு ஸுபுகி ஷிபாவுஸ்ஸகாம் பக்கம் 175)<br><br>முஸ்லிம்களின் வார்த்தைக்கு இப்படி தவறான கருத்து வைப்பதானது அவர்கள் பேரில் கெட்ட எண்ணம் வைப்பதாகும்-ஹராமாகும். செயலைச் சிருஷ்டி யில் சேர்த்து இன்னாரே உதவி செய்யுங்கள் அல்லது இன்னார் உதவி செய்தார்கள் என்று சொல்வதா |

| | |
|---|---|
| இருப்பதாக) அவனுக்கு இணைவைத்தவர்களாகவேயல்லாது’ | கிறது செயலைச் செயலுடையவன் |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அல்குர்ஆன் 12:106<br><br>தப்ஸீர் ஸாவீரூஹுல் பயான் வகையறா.<br><br>‘இந்த ஆயத்திற்கு ஷப்பீர் அஹ்மது பின்வருமாறு விரிவுரை எழுதியிருக்கிறார். அதை இஹ்தி ஷாமுல்ஹக்கு தானவி முஹம்மது ஷபீவு இவர்கள் சரிகண்டு கைச்சாத்திட்டிருக்கிறார்கள். ஷப்பீர் அஹ்மது எழுதுகிறார்:<br><br>‘மிகுந்த ஜனங்கள் ஈமான் கொண்டிருப்பதாக தாவாச் செய்கிறார்கள். ஷிர்க்கிலும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எப்படியென்றால், ஷெய்குமார்களை, நபிமார்களை, இமாம்கள், மலக்குகள், தேவதை இவைகளையும் கஷ்ட காலத்தில் கூப்பிடுகிறார்கள். அவர்களிடம் நாட்டங்களைக் கேட்கிறார்கள். நேர்ச்சை வைக்கிறார்கள்’ நூறு அப்ஜா குர்ஆன் மஜீது இரு தர்ஜுமா உள்ளது பக்கம் 35.<br><br>‘யாரையும் தூரத்திலிருந்து கூப்பிடுவதும் (அப்படிக் கூப்பிடுவது) அவருக்கு விளங்குமென்று | அளவில் சேர்க்காது செயலை அது வெளியாகும் வழியளவில் சேர்த்ததாகும். இப்படிச் சேர்ப்பதற்கு நிஸ்பத்து மஜாஸி (இரவலான சேர்மானம்) என்றும் செயலைச் செயலுடையவன் அளவில் சேர்ப்பதற்கு நிஸ்பத்து ஹகீகி (எதார்த்தமான சேர்மானம்) என்றும் சொல்வார்கள்.<br><br>உலமாக்கள் சொல்கிறார்கள் மஜாஸிய்யாகத்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு முவஹ்ஹிது (யாவும் அல்லாஹ்வில் நின்றும் உள்ளது என்று ஏகத்துவத்தை நம்பியுள்ள முஸ்லிம்) இடத்திலிருந்து வந்ததே போதிய ஆதாரமாகும். ஏனென்றால், சரியான கொள்கையாகிறது அடியார்களையும், செயல்களையும் படைத்தவன் அல்லாஹ் ஒருவனே என்று நிர்ணயம் கொள்வதேயாகும். இதற்கு மாற்றமாக நம்பியவன் ஷிர்கில் வீழ்வான். உயிரோடிருப்பவர்களுக்கும், மரணித்தவர்களுககுமிடையில் பாகுபாடு செய்து ஹயாத்தானவர்கள் தங்கள் செயல்களைத் தாங்களே படைக்கிறார்கள் என்ற நம்பிக்கை மு.:.தஸிலாக்களின் கொள்கையாகும்.(மக்கா முப்தி செய்யிது அஹ்மது ஜெய்னி குலாஸததுல் கலாம் யூஸுபு |

| | |
|---|---|
| நினைப்பதும் (ஷிர்கு, குபிரில் நின்றுமுள்ளதாகும்) அஷ்ரபுஅலி தானவியின் பெஹிஸ்திஜேவர் பக்கம் 34. தமிழ் மொழிபெயர்ப்பு சுவர்க்க நகைகள் பக்கம் 75. | நபஹூனி ஷவாஹிதுல் ஹக்கு பக்கம் 130)<br><br>அவர்கள் (யூதர்கள் முற்காலத்தில் நாயகம் ஸல்லல்லா- |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| 'எந்த பெரிய மனிதருடைய பெயரையும் வழமையாக ஓதி வருவது (ஷிர்கு குப்ருடைய கருத்திலுள்ளதாகும். அஷ்ரபு அலி தானவி பெஹிஸ்திஜேவர் பக்கம் 34. தமிழ் மொழி பெயர்ப்பு சுவர்க்க நகைகள் பக்கம் 7. அஷ்ரபு அலி தானவி 'த.'.லீமுத்தீன் என்னும் நன்மார்க்க நடைகள் (மூன்றாம் பதிப்பு) பக்கம் 36.<br><br>***கேள்வி:***யாரஸூலல்லாஹ் என்று சொல்வது ஆகுமா? ஆகாதா?<br><br>***பதில்:*** பாமர மக்களை அப்படிச் சொல்லவிடாமல் விலக்க வேண்டும்.-ரஷீது அஹ்மது கொங்கோஹீ பதாவா இம்தாதிய்யா பாகம் 4, பக்கம் 120.<br><br>***கேள்வி:*** தூரத்திலிருந்து கொண்டு அல்லது கபுறு ஷரீபுக் கிட்டவே இருந்து கொண்டு 'யாரஸூலல்லாஹ்' என்று கூப்பிடு வது ஆகுமா? ஆகாதா?<br><br>***பதில்:*** எப்பொழுது நபிமார்க ளுக்கு மறைவான சங்கதிகளைப் | ஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறக்க முன்பு அவர்களைக் கொண்டு வஸீலா தேடி காபிர்களின் பேரில் உதவி தேடுகிறவர்களாக இருந்தார்கள். (அதாவது, ஏதாகிலும் ஒரு விஷயம் அவர்களைக் கவலையில் ஆக்குமேயானால் அல்லது அவர்கள் பேரில் பகைவர்கள் அடர்ந்தேறினால், ஆண்டவா! கடைசிக் காலத்தில் அனுப்பக் கூடிய நபியின் லட்சணங்களைப் பற்றி நாங்கள் தவுராத்தில் பார்த்திருக்கிறோமே அந்த நபியின் பொருட்டைக் கொண்டு எங்களுக்கு உதவி செய்வாயாக! என்று சொல்வார்கள். அவர்களுக்கு உதவி கிடைக்கும்.) -தப்ஸீர் காஸின் பாகம் 1 பக்கம் 71. குர்ஆன் 2:89 உடைய விரிவுரையில்.<br><br>நீங்கள் எனக்கு (சரீர) பலத்தைக் கொண்டு உதவுங்கள். நான் உங்களுக்கும் அவர்களுக்கும் (யாஜூஜு மாஜூஜு கூட்டத்தாருக் கும் இடையில் சுவரை ஆக்கி (கட்டி விடுகிறேன் என்று ஹழ்ரத் துல்கர்னைன் அவர்கள் சொன்னார்கள்.) குர்ஆன் 18:95. |

| | |
|---|---|
| பற்றிய அறிவு இல்லையோ, 'யாரஸூலல்லாஹ் என்று கூப்பிடு வதும் ஆகாதுதான். அவர்கள் மறைவான சங்கதிகளை அறிவதா னால் தூரத்திலிருந்து கூப்பிட்டாலும் கேட்பார்கள் என்று நம்பினால், அதுதானே குப்ராகும். அந்த நம்பிக்கை இல்லையானால் குப்ரு | ஹழரத் றபீஅத்து இபுனு கஅபு (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் சொன்னார்கள்: 'நான் நாயகம் ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இரவு தங்கியிருந்தேன். அவர்களுக்கு வுளு செய்ய தண்ணீர் மற்றதுகளை |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| இல்லை என்கிலும் குப்ருக்கு ஒப்பாகும்.- ரஷீது அஹ்மது கொங் கோஹீயின் பதாவா ரஷீதிய்யா, பக்கம் 66.<br><br>***கேள்வி:*** அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடக்கூடிய பாடலைப் படிப்பது எப்படி? உதாரணமாக யாரஸூ லல்லாஹ் உன்ளுர் ஹாலனா யா நபியல்லாஹ் இஸ்ம.˙.காலனா இன்னனீ பீபஹ்ரிகம்மின் முகுரகுன் குத்பியதீ ஸஹ்ஹில்லனா இஷ்கா லனா'.<br><br>அல்லாஹ்வின் ரஸூலே எங்கள் நிலையைப் பாருங்கள். அல்லாஹ்வின் நபியே! நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். நான் கவலை எனும் சமுத்திரத்தில் ஆழ்ந்து கிடக்கிறேன் என் கையைப் பிடியுங்கள். எங்கள் கஷ்டங்களை இலேசாக்குங்கள். இம்மாதிரியாக மௌலானா ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திது | எடுத்துக் கொடுத்தேன். (அவர்கள் என்னைப் பார்த்து) கேளும் என்றார் கள். உங்களோடு இருப்பதை உங்களிடம் கேட்கிறேன். வேறு ஏதும் உண்டோ என்றார்கள். அது தான் (எனது தேட்டம்) என்றேன். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வர்கள் உமது நப்ஸின் பேரில் வருத்தம் மிக எடுத்து ஸ ஜூது செய்வது கொண்டு எனக்கு உதவி செய்யும் என்றார் கள்.'- ஹதீது முஸ்லிம், மிஷ்காத்து பாபுஸ் ஸுஜூது, பக்கம் 64.<br><br>'நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண் தெரியாத ஒருவருக்குப் படித்துக் கொடுத்தார்கள். ஆண்ட வனே, நான் உன்னிடத்தில் கேட்கி றேன், உன்னுடைய நபி கிருபையு டைய நபி முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர் களைக் கொண்டு முகம் நோக்கு கிறேன். யா முஹம்மத்! (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) |

| | |
|---|---|
| திஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்களது பாடல்களும் உள்ளன. இம்மாதிரியாக உள்ள பாடல்கள் ஆகுமா? அவை ஷிர்காகுமா? அந்தப் பாடல்களைச் சொன்னவர்களைப் பற்றி என்ன சொல்வது (கேள்வியின் சுருக்கம்).<br><br>***பதில்:*** அல்லாஹ் அல்லாதவர்களைத் தூரத்திலிருந்து கூப்பிடுவது ஷிர்காக ஆவதெல்லாம் அவர்களைச் சுயமாகவே கேட்கிற- | எனக்கு எனது நாட்டம் நிறைவேறுவதற்காக நான் உங்களைக் கொண்டு என் நாயன் அளவில் முகநோக்குகிறேன். ஆண்டவா என் விஷயத்தில் ஷபாஅத்துச் செய்ய அவர்களுக்கு அனுமதி கொடு என்பதாக'. ஹதீது. இதை உதுமான் இபுனு ஹபீபு அவர்களைக் தொட்டும் நஸயீ, திர்மதி, பைஹகீ, இபுனு மாஜா, |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| வர்கள், அறிகிறவர்கள் என்று நம்பினால்தான் பெரிய மனிதர்களுடைய பாடல்கள் அது தன்னிலே ஷிர்கும் அல்ல பாவமும் அல்ல. சந்தேகத்தை உண்டு பண்ணுவதாக இருப்பதனால் கூட்டங்களில் படிப்பது மக்ரூஹ் ஆகும். ஏனென்றால் பாமர மக்களுக்கு தங்கடமுண்டாகும். அது தன்னிலேயே தங்கடத்தை உண்டாக்கக் கூடியதாகவே இருக்கிறது. இதனால், அப்படியான பாடல்களை படிப்பது விலக்குமல்ல. அதைப் பாடியவர்களைக் குறை கூறுவதற்குமில்லை. சந்தேகத்தை உண்டாக்குவதைப் பொறுத்து மக்ரூஹு என்பதுவும் அவர்கள் ஆசை மேலீட்டினால் சொன்னதனால் நீங்கி விடும். ஆனாலும் பாமர மக்கள் கெட்டுப் போவார்கள் என்ற அச்சமிருப்பதனால் இந்த அடிமை அதை விரும்பவில்லை. | ஹாக்கிம் ஆகியோர் ரிவாயத்து செய்துள்ளார்கள். புகாரி இமாம் அவர்கள் தங்களது தாரீகில் ரிவாயத்து செய்திருக்கிறார்கள். (ஹிஸனுல் ஹஸின்). இந்த துஆவை றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வபாத்திற்குப் பின்பம் ஸஹாபர்கள் தாபியீன்கள் தங்கள் நாட்டங்கள் நிறைவேறுவதற்காக ஓதி வந்திருக்கிறார்கள்.<br><br>'தப்றானி பைஹகியின் ரிவாயத்தில் வருகிறது, உங்களில் யாராவது ஒரு பொருளை களவு கொடுத்து விட்டாரேயானால், அவர் 'அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள். இன்னொரு ரிவாயத்தின்படி, என்னைக் காப்பாற்றுங்கள் என்று |

| | |
|---|---|
| (பதில் சுருக்கம்) பதாவா ரஷீதிய்யா. பக்கம் 68.<br><br>***கேள்வி:*** யா ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி ஷை அன்லில்லாஹ் (குருநாதா ஜீலானி அவர்களே! அல்லாஹ்வுக்காக ஏதும் கொடுத்தருளுங்கள்)என்பதை அதில் குணபாடு இருக்கிறது என்று நம்பி நாட்டங்கள் நிறைவேறுவதற்காக வழக்கமாக ஓதி வருவது அல்லது ஷெய்கு அவர்களைஉலகில் ஆட்சி அதிகாரம் செய்கிறவர்கள் நாட்டத்தைக் கேட்டு ஓதி வருவது ஆகிய இவ்விரண்ட விதத்திலும் | சொல்லவும்'-ஹதீது ஹிஸனுல் ஹஸீன் பக்கம் 203. தப்ஸீர் காஸின், தப்ஸீர் கபீர், தப்ஸீர் ரூஹுல் பயானில் 12:42 வசனத்தின் கீழ் எழுதுகிறார்கள். 'தங்கடங்கள் அக்கிரமங்களைத் தட்டுவதற்காக ஜனங்களிடத்தில் உதவி தேடுவது ஆகும்.<br><br>'அவுலியாக்களின் உபகாரத்தி லுள்ளது அவர்களின் பரக்கத்தைக் கொண்டே தான் அடியார்களுக்கு மழை பெய்விக்கப்படுகிறது. அவர்க ளைவிட்டும் தீங்குகளைத் தட்டப்படு கிறது'.(பதாவா ஹதீதிய்யா இமாம் இபுனு ஹஜருல் மக்கி பக் 221) |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| குப்ரு ஷிர்கு ஆகுமா? அல்லது ஒரு விதத்தில்தான் என்றால் மற்ற விதத்தில் எத்தகைய பாபம்? (கேள்வியின் சுருக்கம்)<br><br>***பதில்:***இதை வழக்கமாக ஓதிவருவது ஷிர்கு அல்ல. ஆனாலும், ஷிர்குக்கு ஒப்பாகும். ஏனென்றால், அல்லாஹ் அல்லாத வர்களிடம் நாட்டத்தைக் கேட்பதாய் இருக்கிறது என்றாலும், இந்த வார்த்தையில் குணபாடு இருக்கிறது என்று நம்பி ஓதினால் காபிராக முஷ்ரிகாக மாட்டான். இருந்தபோ திலும் பாவத்தை விட்டும் ஒழியாது. இன்னும் ஷெய்கு அவர்களை அவர்க் தங்களின் தாத்தைக் | 'ஷைகுனா கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்:<br><br>அல்லாஹ் இடத்தில் ஏதும் ஹாஜத்தைக் கேட்பீர்களேயானால், என்னுடைய பொருட்டைக் கொண்டு கேளுங்கள்.-பஹ்ஜத்துல் அஸ்றார் பக்கம் 23.<br><br>யாராவது கஷ்டமான நேரத்தில் என்னைக் கொண்டு இரட்சிப்புத் டேினால் அவனுக்கு இரட்சிப்பு கிடைக்கும். அவனை விட்டும் தங்கடத்தை நீக்கப்படும். கஷ்ட |

| | |
|---|---|
| கொண்டே சுயமாக ஆட்சி அதிகாரம் செய்கிறார்கள் என்று நம்பி ஓதினவன் முஷ்ரிககாவான். ஷெய்கவர்களுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்திருக்கிறான். அல்லாஹ்வின் உத்திரவைக் கொண்டு நாட்ட டேட்டங்களை நிறைவேற்றுகிறார்கள் என்று நம்பிய வன் முஷ்ரிகாக மாட்டான். மு.ஃ.மின் விஷயத்தில் கெட்ட எண்ணம் வைப்பது பாவமாகும். மேலும் சீக்கிரம் யாரையும் காபிர், முஷ்ரிக் என்று சொல்வதும் சரியில்லை. இன்னும் இம்மாதிரியான சந்தேகத்தை உண்டாக்கக் கூடிய வசனங்களை ஓதுவது வீண் பாவமாகும். (பதில் சுருக்கம்)- பதாவா ரஷீதிய்யா பக்கம் 50.<br><br>நாயகம் ஸல்லல்லாஹு அலை- | நேரத்தில் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டால், அவனை விட்டும் கஷ்டத்தை நிவர்த்தி செய்யப்படும் எந்த ஹாஜத்திற்காகவும் அல்லாஹ் விடத்தில் என்னைக் கொண்டு சிபாரிசு தேடுவானேயானால் அவன் ஹாஜத்து நிறைவேறும்.'-பஹ்ஜத் துல் அஸ்ரார் பக்கம் 102.<br><br>'ஷெய்கு அஹ்மது ஜ்ரூக்கு ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்: அனலி முரீதி ஜாமிஉன் லிஷெதாதிஹி இதா மாஸ்தாஜு லுள்ளலாமி பி நுக்பதீ வ இன்குந்த பீளீகின் வ க்ர்பின் வ வஹ்ஷதீ பனாதீ பியா ஜ்ரூக்கு ஆததி பிஸுர்அதி' எனது முரீதின் பேரில் நால விரோதம் கடூரமாகத் தாக்கும்போத, நான் அவனுடைய சிதறிய மனதை ஒன்று சேர்க்கிறவ- |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| ஹி வஸல்லம் அவர்களை எதிர்மறையாக கூப்பிடுவதில் அந்த நம்பிக்கை (அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தாத்திய்யான சுயமான அறிவைக் கொண்டு கேட்கிறார்கள் என்ற நம்பிக்கை இல்லையானாலும் (அதில்) பாமர மக்களின் கெட்ட கொள்கையை ஊக்குவிக்கும் தன்மை இருக்கிறது. ஏனென்றால், பாமரர்களின் கொள்கையாவது நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் சுயமான | னாக இருக்கும். நீ இடுக்கத்திலும் கஷ்டத்திலும், விரட்சியிலும் இருப் பாய். ஆனால், 'யா ஜ்ரூக்கு' என்று என்னைக் கூப்பிடு. நான் உனக்கு விரைந்து வருகிறேன்.' (புஸ்தானுல் முஹத்திதீன் ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திதுத் திஹ்லவி பக்கம் 121)<br><br>ஸவாது இபுனு காரிப் என்ற ஸஹாபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் |

| | |
|---|---|
| அறிவைக் கொண்டே கேட்கிறார்கள் என்பதேதான் ஜனக் கூட்டத்தில் பல வகையான பாஸிகீன் (கெடுதியானவர்களும், பித்அத் நூதன அனுஷ்டான)க் காரர்களும் இருப்பார்கள்.ஆனதால் ஓதுகிறவனின் கொள்கை சுத்தமானதாகவே இருந்த போதிலும் அது ஆகாது மக்ரூஹ் ஆகும். —பராஹீனே காத்திஆ. எழுதியவர்: கலீல் அஹ்மது அம்பேட்டி ரஷீது அஹ்மது ஒப்பியது பக்கம் 217.<br><br>***குறிப்பு:-*** ரஷீது அஹ்மது கொங்கோஹி பதாவா ரஷீதிய்யா பக்கம் 68ல் பெரிய மனிதர்களுடைய பாடல்கள் அது தன்னிலே ஷிர்க்குமல்ல. பாவமுமல்ல என்றும் 50ம் பக்கத்தில் இம்மாதிரி சந்தேகங்களை உண்டாக்கக் கூடிய வசனங்களை ஓதுவது பாவத்தை விட்டு ஒழியாது வீண்பாவம் என்றும் தக்வியத்துல் ஈமானில் தாத்தைக் | அவர்களது சமூகத்தில் (வகுன்லீஷபீஅன் யவ்மலாதூ ஷபாஅதின் பிமு.ஃ.மினி காரிபி) ஷபாஅத்துச் செய்யக் கூடியவர்கள் எவருமே ஸவாது இபுனு காரிபை ஒரு துரும்பை விட்டுங்கூட தேவையற்றவனாக ஆக்காத அந்த நாளில் தாங்கள் எனக்கு ஷபாஅத்து செய்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதற்கு எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை.<br><br>நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வபாத்தான பின் அவர்களது மாமியார் ஸபிய்யா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்ன மர்திய்யாவென்றும் இரங்கற்பாவில் (அலா யாரஸூலுல்லாஹி குந்தறஜா அனா வக்த பினபர்ரன் வலமதரு ஜாபியா) அல்லாஹ்வுடைய ரஸூலே நீங்கள்தான் (மறுமையில்) எங்களு- |

| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
|---|---|
| கொண்டு சுயமாக அறிவார்கள். ஆட்சி செய்வார்கள் என்று நம்பினாலும் சரி அல்லது அல்லாஹ் கொடுத்த சக்தியைக் கொண்டு ஆட்சி செய்கிறார்கள். அவன் கொடுத்த அறிவைக் கொண்டு அறிகிறார்கள் என்று நம்பினாலும் சரி எந்த விதத்திலும் ஷிர்க்குத்தான் என்று சொல்கிற | டைய ஆதரவாக இருக்கிறீர்கள். நீங்கள் (எங்களை) வெறுக்காதவர்களாகவும் எங்களுக்கு உபகாரியாகவுமே இருந்தீர்கள்' என்று உரைத்தார்கள். எல்லா ஸஹாபாக்களும் இந்த மர்திய்யாவைக் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். யாருமே ஆட்சேபிக்கவில்லை. |

| | |
|---|---|
| அந்த கிதாபை அதிலுள்ளவை அடங்கலுமம் சரி அத்தனையயும் கொண்டு அமல் செய்ய வேண்டும் என்றும் பதாவா ரஷீதிய்யா பக்கம் 44 லும் , பக்கம் 50ல் தாத்தைக் கொண்டே சுயமாக ஆட்சி செய்கிறார்கள், அறிவார்கள் என்று நம்பி ஓதியவன்தான் முஷ்ரிக் என்றும் பின்னால் மு.ஃ.மின் விஷயத்தில் அவன் எண்ணம் அப்படித்தான் (என்று) கெட்ட எண்ணம் வைப்பது பாவம். சீக்கிரம் யாரையும் முஷ்ரிக் என்று சொல்வது சரியல்ல என்றும் பாரா ஹீனே காதிஆவில் பாமர மக்களின் கொள்கை, சுயமான அறிவைக் கொண்டே கேட்கிறார்கள் என்பது வேதான் என்றும், இப்படி முன்னுக் குப் பின் முரணாக நேரத்திற்கொரு தீர்ப்பு சமயத்திற்கு கொரு பேச்சுப் பேசி மக்களைக் குழப்பத்திலாக் குவதுதான் இந்த தேவுபந்தே வஹ்ஹாபிகளின் வேலையாகும். | இமாம் ஜெயினுல் ஆபிதீன் ரலியல்லாஹுஊ அன்ஹுஊ அவர்கள் கர்பலா மைதானத்திலிருந்து நாயகம் ஸல்லல்லாஹுஊ அலைஹி வஸல்லம் அவர்களைக் கூப்பிட்டு உதவி தேடிப் பாடினார்கள். அதிலொரு கவி (பைத்து) உடைய பொருள்: ‘உலகத்தார்களுக்கெல் லாம் கருணை வடிவான நாயகமே! அநியாயக்காரர்கள் கையில் சிறைப் படுத்தப்பட்டிருக்கும் இந்த ஜெய்னுல் ஆபிதீனைக் காப்பாற் றுங்கள்’ என்பதாம்.<br><br>இமாமுல் அ.ஃ.லம் அபூஹனீபா ரஹிமஹுஊல்லாஹ் சொன்ன கவியின் பொருள்:<br><br>யா ஸயிதஸ் ஸாதாத்தி ஜி.ஃ.த்துக காஸிதா அர்ஜூரிளாக வ அஹத்தமீ ஹிமாக்கா.<br><br>‘நாயகங்களுக்கெல்லாம் மேலான நாயகம் அவர்களே! நான் உங்களிடத்தில் உங்கள் பாதுகா வலில் இருக்க உங்கள் விருப் பத்தை ஆதரவு வைக்கிறேன்’ |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| | என்பதாம்.<br><br>முஹம்மது பாஸீ, ஷாதுலி ரஹிமஹுஊல்லாஹ் சொ்லகிறர்கள், (அலா அய்யுஹல் மல்ஹுஊபு இன்குந்த ளாமியாக பனாதி |

| | |
|---|---|
| | யாபாஸீ ஆத்தி உஸாரிஉ (துக்கக சாகரத்தில் ஆழ்ந்து கிடப்பவனே, நீ சங்கடத்திலிருப்பாயேயானால், நம்மை, யா பாஸீ என்று கூப்பிடு. நான் உதவிக்கு விரைந்து வருகிறேன்.<br><br>அப்துல் வஹ்ஹாபுஷ் ஷ.்.றானி ரஹிமஹுல்லாஹ் தங்களது 'லவாகி ஹல் அன்வாரில் குத்ஸிய்யா' எனும் நூலில் கூறுகிறார்கள்: 'நபிமார்களையோ, ரஸூல்மார்களையோ, வலிமார்க ளையோ பற்றிப் பிடித்த ஒவ்வொரு வனிடமும் அவர்கள் வருவார்கள். அவனுக்கு கஷ்டங்கள் வந்துற்ற போது உதவி செய்வார்கள். இன்னும் அவர்களது மீஸானுஷ் ஷரீஅத்து' எனும் நூலில் சொல்கி றார்கள்:<br><br>'இமாம்களுக்கும், ஸூபிய்யாக்க ளுக்கும் அவர்களைப் பின்பற்றிய வர்களுக்கும் ஷபாஅத்துச் செய்ய அனுமதிக்கப்படும். அவர்கள் இவர் களது ஆன்மாபிரியும் போதும், முன்கர் நகீரின் கேள்வியின் போதும் தீர்ப்பு நாளின் கணக்கின் போதும், மீஸானிலும், ஸிராத்து முஸ்தகீமிலும் சகல இடங்களிலும் |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|

கவனிப்பார்கள். ஓரிடத்திலேனும் அவர்கள் இவர்களை மறந்து விட மாட்டார்கள்.

**<u>நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹாளிர், நாளிர் என்று நம்புவது ஷிர்க்காகும்.</u>**

1. ஷிர்க்கின் பொருளாவது எந்த வேலையை அல்லாஹ் தனக்கெனச் சொந்தமாக்கி,தனது அடியார்களுக்கு அடிமைத்தனத்தின் அடையாளச் சின்னமாக ஆக்கி இருக்கிறானோ, அதை வேறு யாருக்காவது செய்வதாம்.எப்படியெனில்,1.ஸஜ்தாச் செய்வது 2. அவன் பேரால் மிருகம் விடுவது. 3. அவன் பேரில் நேர்ச்சை வைப்பது 4. கஷ்ட காலத்தில் அவனைக் கூப்பிடுகிறது 5. அவன் எல்லாவிடத்திலும் ஹாளிராகவும் நாளிராகவும் இருக்கிறான் என்று நம்புவது அல்லது ஆட்சி, அதிகாரம் செய்ய அவனுக்கு தத்துவமிருக்கிறது என்று நம்புவதுமாகும்.-தக்வியத்துல் ஈமான்.பக்கம் 6.

2)பின்னர், இந்த விஷயம் அவருக்கு சுயமாக தாத்தினால் உண்டானது என்று நம்பினாலும் சரி அல்லது அல்லாஹ் அறிவத்துக் கொடுத்து உண்டானது என்று நம்பினாலும் சரி. எந்த விதத்திலும் ஷிர்க்கு உண்டாகிவிடும்.'-தக்வியத்துல் ஈமான் பக்கம்10.

3. 'அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு

**<u>நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹாளிர், நாளிர் என்று நம்புவது ஷிர்க்கு அல்ல.</u>**

(அல்லாஹ் அல்லாதவரை) யாஹாளிர், யாநாளிர் என்று சொல்வது குப்ரல்ல. அதன் பொருள் யாஆலிம், யாறாயீ (அறிந்தவரே, பார்த்தவரே) என்பதாகும்' (ரத்துல் முஹ்த்தார் பாபுல் முர்த்ததீன்)

'நபியே, (மறைவான சங்கதிகளை அறிவிக்கக் கூடியவரே) நிச்சயமாக நாம் உம்மை ஷாஹிது (ஹாளிர், நாளிர்) ஆகவும், நன்மாரயம் சொல்லக் கூடியவராகவும், அச்சமூட்டுபவராகவும், அல்லாஹ்வின் உத்தரவைக் கொண்டு அவனளவில் அழைக்கக் கூடியவராகவும், பிரகாசிக்கும் சூரியனாகவும் ஆக்கினோம்.' (திருக் குர்ஆன் 48:8 வசனக் கருத்து)

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முதலாவது சிருஷ்டியாக இருப்பதனால் அவர்கள் ஹக்குத் தஆலாவின் வஹ்தானிய்யத்தை (அத்துவிதத்தை பார்த்தவர்களாகவும், இன்னும் அதமில் (இன்மையில்) இருந்து வுஜூது (உள்ளமை) க்கு

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அலைக்க (யாரஸூலல்லாஹ்) என்று சொல்வதிலும் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹாளிர் நாளிர் என்று நம்பினால் கூடாது. (சொல்வது கூடாது)’-மௌலவி இல்யாஸ், மக்தூபாத் பக்கம் 90.<br><br>***கேள்வி:*** ‘அடிமை ஹபீபுல்லாஹ் பேக் என்பவன் ஜனாப் ரஷீது அஹ்மது ஸாஹிபு கொங்கோஹியவர்களுக்கு எழுதிக் கேட்பது நீங்கள் இந்தப் பாடலைப் பற்றியும், அதில் அல்லாஹ்) அல்லாதவரிடம் உதவி தேடுகிறதைப் பற்றியும் எழுதிய ஜவாபில் என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெளிவாக விளங்கவில்லை. அதை யாரும் ஓதிவந்தால் என்ன ஹுக்மு (தீர்ப்பு).? அது ஆகுமா? ஆகாதா? சிறு பாவமா? பெரும்பாவமா? அல்லது ஷிர்கா? எப்படியென்றால் *‘யாரஸூலல்லாஹ் உன்ளுர் ஹாலனா யாநபியல்லாஹ் இஸ்மஃ காலனா, இன்னனீ பீபஹ்ரி கம்மின் முக்ரகுன் குத்பியதீ ஸஹ்ஹில் லனா இஷ்காலனா’* (அல்லாஹ்வின் ரஸூலே, எங்கள் நிலைமையைப் பாருங்கள். எங்கள் வார்த்தைகளைக் கேளுங்கள். நான் துக்க சாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறேன். என்கையைப் பிடியுங்கள். எங்கள் கஷ்டஹ்களை இலேசாக்கி வையுங் | வரக் கூடிய அர்வாஹுகள், நப்ஸுகள், கண்டிப்பான சடம், உலோகம், தாவரம், மிருகம், மலக்கு, ஜின்னு, ஷைத்தான், மற்றெல்லா வஸ்துக் களையும் பார்க்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஏனென்றால், எந்தச் சிருஷ்டிகளிலேயும் நடக்கக் கூடிய அல்லாஹ்வின் செயல்கள், இரகசியங்கள், விநோதங்கள் எல்லாம் அவர்களுக்கு மறையாமலிருப்பதற்காக’. தப்ஸீர் ரூஹுல் பயான் பக்கம் 265.<br><br>அதே தப்ஸீரில் கொஞ்சம் கீழே எழுதியிருக்கிறார்கள். ‘நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஷ்டங்கள் வந்துற்ற போது உதவி செய்வார்கள்’. ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் படைத்ததையும் அவர்களுக்கு நடந்த சங்கை மரியதைகளையும், பிழை செய்ததினால் அவர்களை சொர்க் கத்தை விட்டு வெளியேற்றியதையும் அவர்களின் தவுபாவை ஒப்புக் கொண்டதையும் கடைசிவரையும் அவர்கள் பேரில் நடந்தவைகளையும், இபுலீஸைப் படைத்ததையும், அவன் பேரில் நடந்தவைகளையும் பார்த்தார்கள்’.<br><br>நாயகம் ஸல்லல்லாஹு |

| | |
|---|---|
| கள் என்ற பாடலைப் போல.<br><br>***பதில்:*** இம்மாதிரியான வார்த்- | அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் உம்மத்துடைய அமல் களை பார்ப்பதும், அவர்களின் பாவ |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| தைகளைப் பாடலாகவோ, வசனமா கவோ ஓதிவருவது மக்ரூஹு தன்ஸீஹியாகும். குப்ரு ஷிர்கு அல்ல. ஏனெனில் குப்ரு என்பதற் குக் காரணம், அல்லாஹ் அல்லாத வரை ஹாளிர் என்றும் ஆட்சி அதிகாரம் செய்கிறவர் என்றும் நம்புவதாகும். பிஸ்கு என்பதற்குக் காரணம் பாமர மக்களுடைய கொள்கை கெட்டுப் போவதற்கு வழியாகும் என்பதாகும். மக்ரூஹு தன்ஸீஹி என்பதற்குக் காரணம், பொதுவாக இது அல்லாஹ் அல்லாதவரிடம் உதவி தேடுவதற்கு ஒப்பாவதாகும். அப்படி எண்ணமில் லாதிருந்தாலும் சரியே' (பதிலின் சுருக்கம்)-பதாவா ரஷீதிய்யா பக்கம் 69. | செய்கைகளுக்காக பிழை பொறுக் கத் தேடுவதும், பலாய் முஸீபத்துக்கள் அவர்களைவ ிட்டும் நீங்கும்படி துஆக் கேட்பதும், பறக்கத்து உண்டாவதற்காக வேண்டி உலகின் எல்லாகன் கோணங்களிலும் சுற்றி வருவதும், உம்மத்துகளில் ஸாலிஹானவர் களுடைய ஜனாஸாவில் கலந்து கொள்வதும் இவைகள்தான் அவர்க ளின் வேலைகளாகும். இதுபற்றி ஹதீதுகளிலும் ஆதார் (ஸஹாபாக் களின் வார்த்தை) களிலும் வந்திருக்கின்றன. இமாம் ஸுயூத்தி (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் (இன்திபாக்குல் அதுதியா பக்கம் 7)<br><br>'ஸூபியாக்களின் தரீக்கில் ரியாளத்து (தெண்டிப்பு) செய்கி ஆரம்பத்திலேயே அவர்களக்குக் காட்சிகளும், தோற்றங்களும் உண் டாகின்றன. அவர்கள் விழிப்பிலேயே மலக்குகளையும், நபிமார்களுடைய ரூஹுகளையும் பார்க்கிறார்கள். அவர்களுடைய பேச்சுக்களை கேட் கின்றார்கள். அவர்களில் நின்றும் பிரயோசனம் அடைகிறார்கள்.'-இ மாம் கஸ்ஸாலி ரஹிமஹுல் லாஹ் அவர்களின் அல்முன்கிது மினள்ளலால் பக்கம் 36. |

| | |
|---|---|
| | ‘ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| **<u>நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ் அறிவித்துக் கொடுத்துள்ள மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்று நம்புவது ஷிர்கு.</u>**<br><br>அறிவில் ஷிர்கு வைப்பதாவது, அல்லாஹ்வுடையது போல மற்றவர்களுக்கும் அறிவை (உண்டென) ஸ்தாபிப்பதாகும். இந்நம்பிக்கையினால், மனிதன் முஷ்ரிக்காகி விடுவான். இந் நம்பிக்கையை நபிமார்கள், அவுலியாக்கள் விஷயத்தில் வைத்தாலும் சரி. பேய் பிசாசு விஷயத்தில் வைத்தாலும் சரி. பின்னர் இவ்விஷயம் அவர்களுக்குச் சுயமாக உண்டானது என்று நம்மினாலும் சரி. அல்லது | அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தங்களின் ஸஹாபாக்களின் ரூஹுகளோடு உலகம் முழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு அதிகாரமுண்டு. அவர்களை அவ்வாறாக அநேக அவ்லியாக்கள் கண்டிருக்கிறார்கள் என்று இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொன்னார்கள்’. தப்ஸீர் ரூஹுல் பயான், ஸூரத்துல் முல்கின் கடைசிப் பகுதி.<br><br>**<u>நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ் அறிவித்துக் கொடுத்துள்ள மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்று நம்புவது ஷிர்கு அல்ல.</u>**<br><br>‘அல்லாஹ் மனிதரைப் படைத்து அவருக்கு விபரத்தை அறிவித்துக் கொடுத்தான்.’ -குர்ஆன் 55:4<br><br>‘அல்லாஹ் மனிதரை அதாவது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் படைத்து அவர்களுக்கு விபரத்தை அறிவித்துக் கொடுத்தான். அதாவது உண்டானது, உண்டாக்கக் கூடியதுகளின் விபரத்தை அறிவித் |

| | |
|---|---|
| அல்லாஹ் அறிவித்துக் கொடுத்து அதைக் கொண்டு அறிவார்கள் என்று நம்பினாலும் சரி. முடிவாக இந்த நம்பிக்கையினால் எந்த விதத்திலும் ஷிர்கு உண்டாகி விடும்’-தக்வியத்துல் ஈமான் பக்கம் 7. | துக் கொடுத்தான். ஏனென்றால் அவர்கள் முன்னோர்களைப் பற்றியும், பின்னோர்களைப் பற்றியும் கியாமத்து நாளைப் பற்றியும் விபரிக்கிறார்கள்’-தப்ஸீர் ஸாவி, தப்ஸீர் காஸின், தப்ஸீர் ஜமல்.<br><br>‘அப்துற் ரஹ்மான் இபுனு ஆயிஷ் ரலியல்லாஹுஅன்ஹு |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மறைவான சங்கதிகள் தெரியாது. அது தெரியுமென்று தாங்கள் வாதாடவுமில்லை. அவர்களுக்கு மறைவான சங்கதிகள் தெரியாதென்று அல்லாஹ்வின் வேதத்திலும் இன்னும் அநேக ஹதீதுகளிலும் வந்திருக்கிறது.<br><br>நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மறைவான சங்கதிகள் தெரியும் என்று நம்புவது கலப்பற்ற ஷிர்காகும்’. (பதாவா ரஷீதிய்யா பக்கம் 96)<br><br>ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்று நம்புவானேயானால் அவன் நிச்சயம் காபிரும், முஷ்ரிகுமாவான்’. (பதாவா ரஷீதிய்யா பக்கம் 73) | அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்படுகிறது: ரஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள், ‘ சிறப்பு வலுப்பமிக்க எனது நாயனை அழகான உருவத்தில் பார்த்தேன். மலஉல் அஃலாவில் (மேல் உலகத்தில்) உள்ளவர்கள் எது விஷயத்தில் ஒருவருக்கொருவர் பலதரப்பட்ட அபிப்பிராயமாக பேசிக் கொள்கிறார்கள் என்று கேட்டான். நீயே மிக அறிந்தவன்’ என்று சொன்னேன். அவன் தனது கிருபை எனும் கரத்தை எனது இரு தோள் புயங்களின் மேலும் வைத்தான். அதன் அருளை (பைளை) என் திருமார்பின் நடுவே பார்த்தேன். வானம் பூமியிலுள்ளவைகளை எல்லாம் அறிந்து கொண்டேன்’ – மிஷ்காத்து பக்கம் 69.<br><br>வானம், பூமியிலுள்ளவைகளை எல்லாம் அறிந்தேன் என்பதன் |

| | |
|---|---|
| 'நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைவான சங்கதிகளை எல்லாம் தங்கள் தாத்தைக் கொண்டு சுயமாக அறியவில்லை. என்கிலும், அல்லாஹ் அறிவித்துக் கொடுத்து அறிகிறார்கள் என்று சொல்கிறார்களே அது சுத்தப் பொய்யும் பைத்தியமுமாகும்.'-பதாவா ரஷீதிய்யா பக்கம் 73. | கருத்தாவது, எல்லா வகையான குல்லீ ஜுஸ்இ (தொகுப்பானவை, பகுப்பானவை) அனைத்தைப் பற்றி யும் அறிந்தார்கள் என்பதாம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆலத்தையும், அதனுடைய அந்தரங்கங்களையும் அறிவார்கள்.-ஷாஹ் அப்துல்ஹக் முஹத்திதுத் திஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மிஷ்காத்தின் ஷாஹு அஷி.்.அதுல்ல மஆத்து முதல் |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| | பாகம் பக்கம் 262. |
| **நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்வால் கொடுக்கப்பட்ட சக்தியைக் கொண்டு ஆட்சி, அதிகாரம் உண்டு என நம்புவது ஷிர்கு.** 'அல்லாஹு தஅலா உலகத்தில் ஆட்சி செய்ய யாருக்கும் சக்தியைக் கொடுக்கவில்லை.'-தக்வியத்துல் ஈமான் பக்கம் 6. அவுலியாக்கள், அன்பியாக்கள், ஷுஹதாக்களுக்கு உலகில் ஆட்சி செய்ய தத்துவம் இருக்கிறது என்று சில பாமரர்கள் சொல்லிக் கொள்கிறார்களே அது தவறாகும். | **நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்வால் கொடுக்கப்பட்ட சக்தியைக் கொண்டு ஆட்சி, அதிகாரம் உண்டு என நம்புவது ஷிர்கு அல்ல.** '(காபிர்களுடைய உயிரை) கடுமையாக இழுக்கின்றவர்கள் (மலக்குகள்) மீது சத்தியமாக. (முமின்களுடைய உயிரை) இலேசாக சந்தோஷமுற இழுக்கின்றவர்கள் (மலக்குகள்) மீது சத்தியமாக இலேசாக நீந்தி முந்திப் போய் சேர்ந்து, பின் காரியாதிகளில் ஆட்சி செய்யக் கூடியவர்கள் (மலக்குகள்) பேரில் சத்தியமாக'-குர்ஆன் 79:5 |

| | |
|---|---|
| அவர்களுக்கு எந்த வேலையிலும் தற்போது சம்பந்தமில்லை. மேலும் அவர்களுக்கு சக்தியுமில்லை.’-தக்வியத்துல் ஈமான் பக்கம் 22.<br><br>‘எவனாகிலும் எந்த சிருஷ்டிக்காவது உலகத்தில் ஆட்சி அதிகாரம் இருக்கிறதென்று சொல்வானேயானால் தனக்கு வக்கீல் என நம்புவானேயானால் அவன் பேரில் ஷிர்கு உண்டாகி விடும். அவரை அல்லாஹ்வைப் போல சரி சமம் என்று எண்ணாமல் போனாலும் சரியே’.-தக்வியத்துல் ஈமான் பக்கம் 21. | ‘அல்லது வரிசையான சில ஆன்மாக்கள். அவைகள் திரேகத்திலிருந்து வில்லை விட்டும் அம்பு பாய்வது போல அதிவேகமாகப் பிடுங்கிக் கொண்டு, ஆன்மலோகம் (ஆலமுல் மலகூத்) அளவில் ச்தோஷமாகப் போய் அதில் நீந்தி பரிசுத்த சமூகம் (ஹளரதுல் குத்ஸி) அளவில் விரைந்து முந்திக் கொண்டு அதன் சிறப்பினாலும், சக்தியினாலும் முதப்பிறாத்து (காரியாதிகளில் ஆட்சி செய்யும் ஆன்மா) உடன் சேர்ந்து விடும்.’ – தப்ஸீர் பைளாவி. |

| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
|---|---|
| ‘பின்னர் இந்த வேலைகளில் அவருக்குச் சுயமாக சக்தி இருக்கிறது என்று நம்பினாலும் சரி, அல்லது அல்லாஹ் அவருக்கு இப்படி சக்தியை கொடுத்திருக்கிறான் என்று நம்பினாலும் சரி எந்தவிதத்திலும் ஷிர்கு உண்டாகி விடும்.’-தக்வியத்துல் ஈமான் பக்கம் 8.<br><br>‘அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் அதிகாரி என்றும், எந்த வேலையிலும் ஆட்சி அதிகாரம் செய்வார்கள் என்றும் நினைக்காதே. யாரையும் தனக்கு எஜமான் என்று வைத்து அவரிடம் உனது நாட்டங் | ‘வரிசையான ஆன்மாக்கள் திரேகத்தை விட்டுப் பிரிந்து ஸிபாத்துக்களின் சமூகத்தில் நீந்தி வஹ்தத்தில் (அத்துவிதத்தில் அதாவது தாத்தில்) விரைந்து முந்தி முங்கி (பனாவாகி விடும். பின்னர் கதுரத்தின் (துவிதத்தின் அதாவது சிருஷ்டியின்) பக்கம் திரும்பி வந்து ஜனங்களை அல்லாஹ்வின் பக்கம் நேர்வழி காட்டும் வேலையிலும் தப்ஸீலின் (பன்மையின்) மகாம்களில் காரியாதிகளிலும் ஆட்சி செய்யும். பின்னர் அந்தச் சிறப்பான ஆன்மாக்கள் அவை சடத்தை விட்டுப் பிரிந்திருந்தாலும் சரி, பிரியாதிருந்தாலும் சரி. அதிலிருந்து இந்த |

| | |
|---|---|
| களைக் கேட்காதே'.-தக்வியத்துல் ஈமான் பக்கம் 13.<br><br>**<u>நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷபாஅத்து செய்வார்கள் என்று நம்புவது ஷிர்காகும்.</u>**<br><br>'வானம், பூமியிலுள்ள ஒருவரும் யாருக்கும் ஷபாஅத்துச் செய்யமாட்டார்கள்' –தக்வியத்துல் ஈமான் பக்கம் 5.<br><br>'ஒருவரும் யாருக்கும் வக்கீலாகவோ காப்பாற்றக் கூடியவராகவோ ஆகிறதில்லை.'-தக்வியத்துல் ஈமான் பக்கம் 7.<br><br>எவனாவது நபி அல்லது வலியை அல்லது இமாமை | உலகத்தில் பல குணபாடுகளும், அற்புத காரியங்களும் உண்டாவது தூரமாகாது(அசாத்தியமன்று). அவர்கள் முதப்பிறாத்து(ஆட்சி அதிகாரம் செய்யும் ஆன்மா)க்களோடு ஆகிவிடுகிறார்கள்.' (தப்ஸீர் ரூஹுல் பயான், 5 வது பாகம் பக்கம் 72)<br><br>**<u>நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷபாஅத்து செய்வார்கள் என்று நம்புவது ஷிர்கு அல்ல.</u>**<br><br>'நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷபாஅத்துச் செய்வார்கள் என்பது ஸுன்னத் வல் ஜமாஅத்து மக்கள் எல்லோர்களும் ஏகோபித்து அங்கீ |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| அல்லது ஷஹீதை அல்லது எந்த ஒரு மலக்கையோ, ஷெய்கையோ அந்தச் சமூகத்தில் இம்மாதிரி ஷபாஅத்துச் செய்வார்களென்று நம்புவானேயானால் அவன் அசல் முஷ்ரிகாகவும் மடையனுமாகவும் இருக்கும்.'-தக்வியத்துல் ஈமான் பக்கம் 24.<br><br>**<u>மவுலிது ஷரீபு ஓதுவது ஹறாம். ஓதுகிறவன் முஸ்லிமல்ல(காபிர்)</u>** | காரம் செய்திருப் பதாகும்' –முல்லா அலிகாரி றஹிமஹுல்லாஹ் அவர்களின் ஷரஹுஷ்ஷிபா, பக்கம் 460.<br><br>**<u>மவுலிது ஷரீபு ஓதுவது நல்லது. ஓதியவன் உண்மை முஸ்லிம்.</u>** |

| | |
|---|---|
| ரபீயுல் அவ்வலில் மவுலிது ஷரீபு மஜ்லிஸ் நடத்துகிறவன், அதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்த செய்தி வரும்போது எழுந்து நிற்கிற வன் முஸ்லிமல்ல (காபிர்)-தக்வியத் துல் ஈமான் பக்கம் 56.<br><br>***கேள்வி:-*** மவுலிது ஷரீபு கந்தூரி அதில் ஷரீஅத்தில் மாற்றமான எந்த வேலையும் இல்லை. எப்படியென்றால் ஹளரத் ஷாஹ் அப்துல் அஜிஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நடத்தி வந்தது போல் (இவை) உங்களிடம் ஆகுமா? ஆகாதா? எதார்த்தமாகவே ஷாஹ் ஸாஹிபு அவர்கள் மவுலிது ஷரீபு கந்தூரி நடத்தி வந்தார்களா? இல்லையா?<br><br>***பதில்:*** மவுலிது ஷரீபு மஜ்லிஸில் மார்க்கத்திற்கு விரோதமான கருமங் கள் ஒன்றுமேயல்லாது போனாலும் சரி அதற்கு ஏற்பாடுகளும் அழைப் புக்களும் இருப்பதனால், இக்காலத்- | மவுலிது ஷரீபு ஓதுவது ஸ ‟ன்னத்தான நற்கருமம் ஆகும். அல்லாஹ் உங்களுக்குச் செய்துள்ள நி..மத்தை திக்ரு செய்யுங்கள். (அருட்கொடையை நினைத்துப் பாருங்கள்) குர்ஆன் 3:101.<br><br>அல்லாஹ்வின் நி..மத்தை (அவர்கள்) அறிவார்கள். பின்னர் அதை மறுக்கிறார்கள்.-குர்ஆன் 73:16<br><br>அல்லாஹ்வின் நி..மத்துக்கு மாறு செய்தவர்களை நீங்கள் பார்க்கவில்லையா? –குர்ஆன் 14:28<br><br>இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்: அவர்கள் (குறைஷிக் காபிர்கள்) அல்லாஹ்வின் நி..மத்துக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நன்றி செய்யாதவர்கள். |
| **வஹ்ஹாபிக் கொள்கை** | **இஸ்லாமிய கொள்கை** |
| தில் ஆகாது. இதே போல்தான் கந்தூரியைப் பற்றிய விடையும். அநேக கருமங்கள் முன்னொரு காலம் ஆகுமானதாக இருந்தது. பின்னால் விலக்கலாகி விட்டது. கந்தூரியும் மவுலிது சபையும் அப்படியே’.-பதாவா ரஷீதிய்யா பக்கம் 105. | நீங்கள் அல்லாஹ்வை வணங்குகிறவர்களாக இருப்பீர்களே யானால் அல்லாஹ்வின் நி..மத் துக்கு நன்றி செய்யுங்கள்.-குர்ஆன் 16:14<br><br>‘உம்முடைய ஆண்டவனுடைய நி..மத்தைச் சொல்லிக் காட்டும்’-குர்ஆன் 14:5 |

| | |
|---|---|
| ***கேள்வி:*** மவுலிது சபையில் ஆதாரப்பூர்வமான சரியான சரித்திரங்களையே ஓதப்படுகிறது. எவ்வித ஆடம்பரமுமில்லை. பொய்யான சரித்திரங்கள் ஒன்றும் சொல்லப்படுவதில்லை. இம்மாதிரியான மஜ்லிஸுகளில் பங்குபற்றுவது ஆகுமா? ஆகாதா?<br><br>***பதில்:*** வேறு காரணத்திற்காக அது கூடாது.- பதாவா ரஷீதிய்யா பக்கம் 148.<br><br>***கேள்வி:-*** மவுலிது ஷரீபு மஜ்லிஸில் எழுந்து நிற்காமலும் சரியான ரிவாயத்துக்களைக் கொண்டு ஓதியும் நடத்தவது கூடுமா? கூடாதா?<br><br>***பதில்:*** மவுலிது ஓதுவது எந்த நிலைமையிலும் கூடாது. ஸுன்னத்தானதற்கு அழைப்பு இருப்பதனால் விலக்கப்பட்டதாகும். | ‘அல்லாஹ்வின் நாள் என்பதைக் கொண்டு கருத்தாவது, அந்நாட்களில் நடந்த பாரதூரமான அற்புத நிகழ்ச்சிகளாகும்’. –தப்ஸீர் பகுருர்ராஜீ.<br><br>‘நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் போல் வேறு எந்த நிஃமத்துமில்லை. மவுலிது ஷரீபில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குணாதிசியங்களையும் அவர்கள் பிறந்து வளர்ந்ததையும் நல்லொழுக்கங்களையும் அவர்கள் பிறக்கும் போதும் மற்ற நேரங்களிலும் நடந்த அற்புத நிகழ்ச்சிகளையும் சொல்லிக் காட்டி இந்த நிஃமத்தை அல்லாஹ் உம்மத்துக்களுக்குத் தந்ததற்காக அவனை ஷுக்ரு செய்யப்படுகிறது. அந்நாளை ஒரு நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது. அல்லாஹ்வின் நிஃமத்துக் கிடைத்த நாளைப் பெருநாளாகக் கொண்டாடுவது நபிமார்கள், முன்னோர்களுடைய வழக்கமாகும். |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| | ‘நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சொன்னார்கள், ‘ஆண்டவா! எங்களின் முன்னோர் பின்னோர்களுக்கும் ஒரு பெருநாளாய் ஆவதற்காக எங்களுக்கு |

| | |
|---|---|
| | வானத்திலிருந்து உணவுத் தட்டை இறக்கி வைப்பாயாக'-குர்ஆன் 5:114<br><br>மவுலிது ஷரீபு ஓதுவதானது, நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களுக்கு மரியாதை செய்வதில் நின்றுமுள்ளதாகும். ஸ யூத்தி இமாம் அவர்கள் சொல்கிறார்கள், நாயகம் ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்ததற்காக நன்றியை வெளிப்படுத்துவது நமது பேரில் ஸ ன்னத்தாகும்.<br><br>'இபுனுஹஜருல் ஹைத்தமி ரலியல்லாஹு அன்ஹு அவாகள் சொல்கிறார்கள், 'பிதுஅத்துல் ஹஸனத்து (அழகிய நல்ல நூதனச் செயல்) ஆகிறது, அதைச் செய்வது ஸுன்னத்து என்று எல்லோர்களாலும் ஏகோபித்து ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையா கும். மவுலிது ஷரீபு ஓதுவதும், அதற்காக ஜனங்கள் கூடுவது அப்படியான நல்ல பிதுஅத்தாக இருக்கும்.'-தப்ஸீர் ரூஹுல் பயான், மஹம்மதுர் ரஸூலுல்லாஹி என்ற ஆயத்தின் விரிவுரைப் பகுதி பக்கம் 265. |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| **<u>நேர்ச்சை நிய்யத்து வைப்பவன்,</u>** | **<u>நேர்ச்சை நிய்யத்து வைப்பவன்,</u>** |

**<u>கத்தம் பாத்திஹா ஓதுபவன் முஸ்லிமல்ல.(காபிர்)</u>**

'ஷிர்கின் பொருளாவது எந்த வேலையை அல்லாஹ் தனக்கெனச் சொந்தமாக்கி அதை அடியார்களுக்கு அடிமைத்தனத்தின் அடையாளச் சின்னமாக்கி இருக்கிறானோ அந்த வெலைகளை வேறு யாருக்காவது செய்வதாகும். எப்படியெனில் ஸஜ்தாச் செய்வது, அவர்பேரில் மிருகம் விடுவது, அவர் பேரில் நேர்ச்சை வைப்பது, கஷ்ட காலத்தில் அவரைக் கூப்பிடுவது, அவர் எல்லாவற்றையும் பார்த்திருக கிறார் அல்லது அவருக்கு ஆட்சி அதிகாரம் செய்யத் தத்துவம் இருக்கிறது என்று நம்புவதாகும்'.- தக்வியத்துல் ஈமான் பக்கம் 6.

***கேள்வி:*** எந்தப் பெரிய மனிதர் ஒலியை ஸியாரத்து செய்வதற்காகப் போவதும், அவர்களிடம் நாட்டங்களைக் கேட்பதும், நேர்ச்சை வைப்பது அதாவது உதாரணமாக என்னுடைய இன்ன வேலை இன்ன நாட்டம் நிறைவேறினால் பத்து ரூபாய் கொடுப்பேன் என்று நேர்ந்து கொள்வது ஆகுமா? ஆகாதா?

***பதில்:*** பெரியோர்களை ஸியாரத்துச் செய்வது ஆகும். ஆனால், ஸுன்னத்தான முறை போல் போக வேண்டும். அவுலியாக்களிடம் உதவி தேடுவது

**<u>கத்தம் பாத்திஹா ஓதுபவன் முஸ்லிம்.</u>**

நதர் நேர்ந்துக் கொள்வது என்பது அல்லாஹ் அளவில் முடுகுதல் பெறுவதற்காக வாயால், உறுப்பால், பொருளால் செய்யக் கூடிய வணக்கங்களைத் தன்பேரில் கடமையாக்கிக் கொள்வதாகும். அதாவது அல்லாஹ்வுக்காக இன்ன அமலைச் செய்வேன் என்று அல்லது இன்ன வேலை முடிந்தால் இத்தனை ரக்அத்துத் தொழுவேன், இன்னதை ஸதகா கொடுப்பேன், ஹஜ்ஜு செய்வேன், நோன்பு பிடிப்பேன் என்று நேர்ந்து கொள்வதாகும். இதற்குத்தான் ஷரீஅத்தில் நதர் நேர்ச்சைக் கடன் என்று சொல்லப்படும். இந்த விதமான நேர்ச்சை அல்லாஹ்வுக்கேதான் செய்ய வேண்டும். அவனல்லாதவர்களுக்கு அவர்களை வணக்கத்திற்குரியவர்கள் என்று, அவர்களளவில் முடுகுதலாகுவதற்காக வணங்குவதென்று நேர்ச்சை வைப்பது கூடாது. அது ஷிர்க்காகும். ஆனால், ஜனங்களுடைய பழக்கத்திலிருந்து வரும் நதர் நேர்ச்சைக் கடன் அதுவல்ல. ஜனங்கள் என்னுடைய இன்ன பிணி நீங்கினால், இன்ன காரியம் நிறைவேறினால், காணாமற் போன இன்ன பொருள் கிடைத்தால் நான் இன்ன ஒலிக்கு உண்டியலில் இன்னதைப் போடுவேன். அல்லது அவர்களின் தர்காவில் பணிவிடை செய்கிறவருக்கு அல்லது அங்கிருக்

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| ஹராமாகும். அல்லாஹ்விடத்திலேயே உதவி தேட வேண்டும். அல்லாஹ் அல்லாத யாருக்கும் உதவி செய்ய சக்தி இல்லை. ஆகவே, அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடுவது ஒலி, நபியிடத்திலானாலும் சரி ஷிர்க்காகும். அல்லாஹ் என்னுடைய வேலையை முடித்துத் தந்தால் அல்லாஹ்வின் பேரால் பத்து ரூபாய்க் கொடுப்பேன் என்று நேர்ந்து கொள்வது ஆகும். எவனாவது என்னுடைய வேலை முடிந்தால் ஒலி பேரில் பத்து ரூபாய்க் கொடுப்பேன் என்று நேர்ந்து கொண்டால் அது ஆகாது. அது ஹறாமாகும். ஏனென்றால் நேர்ச்சை வணக்கமாகும். வணக்கம் அல்லாஹ்வுக்கேயல்லாது வேறு யாருக்கும் கூடாது. ஆனால், அல்லாஹ் என்னுடைய வேலையை முடித்துத் தந்தால் பத்து ரூபாவுடைய தவாபை இன்ன ஒலிக்குச் சேர்ப்பேன் என்று நேர்ச்சை வைத்தால் அது பாதகமில்லை. இதில் அல்லாஹ் அல்லாதவருக்கு தவாபைத்தான் சேர்க்கிறது. நேர்ச்சையோ அல்லாஹ்வுக்காகவே இருக்கிறது' (பதாவா ரஷீதிய்யா பக்கம் 401) | கும் ஏழைகளுக்கு இன்னதைக் கொடுப்பேன் அல்லது அங்கு விளக்கேற்றுவேன் அல்லது அங்கு இன்னவிதமான கட்டிடம் கட்டுவேன் என்று நேர்ச்சைக் கடன் நேர்ந்துக் கொள்கிறார்கள். அவர்களின் கருத்து அந்தத் தர்காவில் உள்ளவர்களுக்கு ஸதக்காக் கொடுத்து அதன் தவாபையும் அங்கு வரக்கூடியவர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுத்து அதன் தவாபையும் பாத்திஹா கத்தம் ஓதி அதன் தவாபையும் அந்த வொலிக்குச் சேர்த்து வைப்பதுவேயாகுமேயல்லாது, அந்த வொலியை வணக்கத்திற்குரியவர் என்று அவரளவில் முடுகுதலாகுவதற்காக வணங்க வேண்டுமென்பதல்ல. அதை அந்த வொலிக்குக் கொடுப்பது என்பதுவும் அல்ல. அதை அந்த வொலியின் தர்காவிலுள்ளவர்களுக்குக் கொடுத்து அதன் தவாபை ஒலிக்குச் சேர்த்து வைப்பது என்பதுவேயாகும். மெய்யாகவே, அதுவேதான் இவர்களின் கருத்தாகும். இந்தவிதமான நேர்ச்சை ஸுன்னத்தாகும்.<br><br>ஹழரத் உம்மு ஸஅது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நிலைமைப் பற்றி வந்த ஹதீதினாலும் முடிவானதோர் விஷயமாகும். இந்த நேர்ச்சையின் ஹுக்மாவது இதை நிறைவேற்றுவது வாஜபாகும். |

| | |
|---|---|
| | இப்படியான நேர்ச்சையை ஏழைக ளும், பணக்காரர்களும் திண்ண லாம். இந்த விபரம் பூராவையும் |

| வஹ்ஹாபிக் கொள்கை | இஸ்லாமிய கொள்கை |
|---|---|
| | ஷாஹ் அப்துல் அஜீஸ் முஹத்திதுத் திஹ்லவி ரஹிமஹுல் லாஹ் தங்கள் பதாவா அஸீஸிய் யாவிலும் அல்லாமா ஷெய்கு அப்துல் கனி நாபல்ஸி ரஹிம ஹுல்லாஹ் தங்களின் ஹகீகத்துன் னதிய்யாவிலும் சொல்கிறார்கள். மற்றும் பிக்ஹு கிதாபுகளிலும் வருகிறது. முஸ்லிம்கள் உறுப்பி னால் பொருளினால் செய்யக் கூடிய எந்த அமல்களின் தவாபையும் மற்ற முஸ்லிம்களுக்குச் சேர்த்து வைப்பது ஆகும் என்பது ஸு ன்னத்து வல் ஜமாஅத்து உலமாக்களால் ஏகோபித்து ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். |

**சகோதரர்களே, தேவுபந்திகள் முஸ்லிம்களையெல்லாம் குறிவைத்து தஷ்ரீக் (முஷ்ரிக்காக ஆக்கி வைக்கக் கூடியது) தக்பீர் (காபிராக ஆக்கி வைக்கக் கூடியது என்ற மிஷின் பீரங்கிகளைக் கொண்டு தாக்குகிறார்கள். அவர்களது அந்தத் தர்குதலையும் அதனால் தாக்குண்டிருக்கும் முஸ்லிம்களையும் பாருங்கள்!**

| தேவ்பந்தி தஷ்ரீக் பீரங்கி | தாக்குண்டவர்கள் |
|---|---|
| ‘எவனாகிலும் எந்த ஷெய்குக்கோ, நபிக்கோ அல்லது பேய், பிசாசுக்கோ கபுருக்கோ யாரும் தங்கி இருந்த இடத்திற்கோ அல்லது அவருடைய கட்டிடத் | 1. எவன் நபி, ஒலியுடைய கபுருக்கு முன்னால் ஸஜ்தா, ருகூவு செய்கிறானோ அவன் முஷ்ரிகு.<br><br>2. நபி, ஒலியுடைய கபுரை ஸ |

| | |
|---|---|
| திற்கோ அல்லது சில்லாவிலிருந்த இடத்திற்கோ அல்லது அவருடைய விட்டுப்போன (துபர்ருக்) அடையா ளச் சின்னத்திற்கோ அல்லது பெட்டிக்கோ ஸஜ்தா அல்லது ருகூவு செய்வானேயானால் அல்லது | ியாரத்துச் செய்ய தூரத்திலி ருந்து பிரயாணம் போகிறவன் முஷ்ரிகு.<br><br>3. நபி, ஒலியுடைய கபுரில் விளக்கேற்றியவன் முஷ்ரிகு. |
| **தேவ்பந்தி தஷ்ரீக் பீரங்கி** | **தாக்குண்டவர்கள்** |
| அவர் பேரில் நோன்பு வைப்பா னேயானால் அல்லது மிருகத்தை நேர்ந்து விடுவானேயானால் அல்லது அந்தத் தலங்களை நாடிப் பிரயாணம் போவானேயானால் அல்லது அங்கு விளக்கேற்றுவானே யானால், துப்பட்டித் துண்டு போடுவானேயானால் அங்கிருந்து திரும்பும்போது மரியாதைக்காக புறங்காட்டிப் போவானேயானால், மயிலிறகு வைத்தானேயானால் அதன் பேரில் பந்தல் போட்டா னேயானால், கபுரை முத்தினால், வாசற்படியை முத்தினால், கைகட்டி கெஞ்சினால், நாட்டங்களை கேட்டால், பணிவிடையாளராக அமர்ந்து இருந்தால், அங்கு அக்கம் பக்கத்துக் காடுகளுக்கு மரியாதை செய்தானேயோனால் அதாவது அக்கம் பக்கத்திலுள்ள மரம், செ கொடிகளைப் பிடுங்காமல் மரியாதைப் படுத்துவானேயானால் இன்னும் இவை போன்ற வேலைகள் செய்தானேயானால் அவர் பேரில் ஷிர்கு தரிபாடாகி விடும். இதற்கு இபாதத்தில் இணை வைப்பது என்று சொல்வார்கள். அதாவது, அல்லாஹ்வுக்குச் செய்வது போல வேறு எவருக்கும் | 4. நபி, ஒலியுடைய கபுருக்குப் போர்வை, துப்பட்டி போட்டவன் முஷ்ரிகு.<br><br>5. நபி, ஒலியுடைய கபுரை விட்டுப் பிரியும் போது மரியாதைக்காக புறங்காட்டி போனவன் முஷ்ரிகு.<br><br>6.நபி, ஒலியுடைய கபுரில் மயில் இறகு வைத்தவன் முஷ்ரிகு.<br><br>7. நபி, ஒலியுடைய கபுரை முத்தமிட்டவன் முஷ்ரிகு.<br><br>8. அங்கு பந்தல் போட்டவன் முஷ்ரிகு.<br><br>9. நபி, ஒலியுடைய கபுரை, வாசல்படியை முத்தியவன் முஷ்ரிகு<br><br>10. அங்கு கை கட்டி கெஞ்சினவன் முஷ்ரிகு.<br><br>11. அங்கு நாட்டத்தைக் கேட்டவன் முஷ்ரிகு.<br><br>12. பணிவிடை செய்வதற்காக அங்கு அமர்ந்திருப்பவன் முஷ்ரிகு.<br><br>13. நபி, ஒலியுடைய கபுருக்கு |

| | |
|---|---|
| மரியாதை செய்வதாகும்'-தக் வியத்துல் ஈமான் பக்கம் 8.<br><br>'இக்காலத்தில் இந்திய முஸ்லிம்களில் ஆயிரக்கணக்கான புதிய விஷயங்களும், புதிய கொள்கைகளும், பழக்க வழக்கங்க ளும் இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு உலகமே இதில் அகப்பட்டுக் | அக்கம் பக்கத்திலுள்ள காடுக ளுக்கு மரியாதை செய்தவன் முஷ்ரிகு.<br><br>பின்னர், அன்பியா, அவுலியாக் களை அல்லாஹ்வின் அடியார்கள் என்றும், அவர்களுக்கு மரியாதை செய்தால் அல்லாஹ் சந்தோஷமா வான் என்றும் உணர்ந்து இப்படிச் |
| **தேவ்பந்தி தஷ்ரீக் பீரங்கி** | **தாக்குண்டவர்கள்** |
| கொண்டு கிடக்கிறது. எப்படியெ னில்,<br><br>1. குழந்தை பிறந்ததற்காக ஓர் ஆடு அறுக்கிறது.<br><br>2. வெடித்துப்பாக்கி வேட்டுப் போடுகிறது.<br><br>3. குழந்தை பிறந்த ஆறாம்நாள் சடங்கு சடங்கு நடத்துகிறது.<br><br>4. இன்னார் உடைய பக்ஷ்(பிச்சை) என்று பெயர் வைக்கிறது.<br><br>5. இன்னர் உடைய குலாம்(பயல்) என்று பேர் வைக்கிறது.<br><br>6. குழந்தைகளுக்கு பிஸ்மில்லா சொல்லிக் கொடுத்து ஓத வைத்து அதற்காக ஒரு சபை நடத்துவது, விருந்து சிற்றுண்டி கொடுப்பது.<br><br>7. கலியாணத்திற்காகச் சபை கூட்டுவது. | செய்தாலும் முஷ்ரிகுத்தான் என்றும் தெளிவாகச் சொல்லிவிட்டார். இது தான் தேவுபந்திகளின் தஷ்ரீக்குப் பீரங்கியின் விபரீத விளைவு.<br><br>1. குழந்தை பிறந்ததற்காக ஆடு அறுத்தவன் காபிர்.<br><br>2. அந்த நேரத்தில் வெடித்துப் பாக்கி வேட்டுப் போட்டவன் காபிர்.<br><br>3. குழந்தைக்கு ஆறாம் நாள் சடங்கு செய்தவன் காபிர.<br><br>4. இன்னார் உடைய பக்ஷ் (பிச்சை) உதாரணமாக: நாகூர் பிச்சை, முஹியத்தீன் பிச்சை, அலிபக்ஷ், சாலார் பக்ஷ் என்பன போன்ற பெயர் வைக்கிறவன் காபிர்.<br><br>5. இன்னார் உடைய குலாம் (பயல்) (உதாரணமாக குலாம் முஹம்மது, குலாம் முஹிய்யத்தீன், குலாம் ரஸூல்) என்பது போன்ற பெயர் வைத்தவன் காபிர். |

| | |
|---|---|
| 8. ஸுன்னத்து (கத்னா) செய்வ தற்காக கூட்டம் உண்டாக்குவது.<br><br>9. வேறே கூட்டங்கள் பழக்கவழக கங்கள் செய்வது.<br><br>10. பெண் பேசக் கூட்டம் உண்டாக்குவது.<br><br>11. பூமாலை போடுவது.<br><br>12. கலியாணத்திற்கு முன், சகோத ரர்களுக்கு சாப்பாடு கொடுப்பது. | 6. பிள்ளைளை ஓத வைத்து பிஸ்மில்லாச் சொல்லிக் கொடுப்ப தற்காக விருந்து வைத்தவன் காபிர்.<br><br>7. கலியாணத்திற்காக சபை கூட்டியவன் காபிர்.<br><br>8. ஸுன்னத்து (கத்னா)ச் செய்வதற்காக வைபவம் நடத்தியவன் காபிர். |
| **தேவ்பந்தி தஷ்ரீக் பீரங்கி** | **தாக்குண்டவர்கள்** |
| 13. முஹர்ரம் மாதத்தில் (மவுலிது, கத்தம், பாத்திஹா ஓதி) கூட்டம் உண்டாக்குவது.<br><br>14. ரபீயுல் அவ்வலில் மவுலிது மஜ்லிஸ் நடத்துவது.<br><br>15. அங்கு ரஸுலுல்லாஹி ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல் லம் பிறந்த செய்தி வரும்போது எழும்பி நிற்பது.<br><br>16. ரபீவுல் ஆகிர் பதினொன்றில் கௌது நாயகத்தின் மீது மவுலிது, கத்தம், பாத்திஹா ஓதுவது.<br><br>17. ஷஃபான் மாதத்தில் இனிப்புச் சோறு ஆக்குவது.<br><br>18. ரமலான் மாதத்தின் கடைசி ஜும்ஆவில் ரமலான் நோன்பை பயணம் அனுப்புகிற குத்பா ஓதுகிறது. | 9. வேறு கூட்டங்கள் நடத்தினவன் காபிர்.<br><br>10. பெண்பேசக் கூட்டம் உண்டாக் கியவன் காபிர்.<br><br>11. பூமாலை போட்டவன் காபிர்.<br><br>12. கலியாணத்திற்கு முன்பு விருந்தளித்தவன் காபிர்.<br><br>13. முஹர்ரம் மாதத்தில் மௌலிது, பாத்திஹா, கத்தம் மஜ்லிஸ் நடத்தியவன் காபிர்.<br><br>14. ரபீயுல் அவ்வலில் மவுலிது சபை நடத்தியவன் காபிர்.<br><br>15. அங்கு ரஸுலுல்லாஹி ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பிறந்த செய்தி வரும்போது எழுந்து நின்றவன் காபிர். |

| | |
|---|---|
| 19. வாழ்நாளில் விடுபட்ட அமலுக்காகத் தொழுகிறது.<br><br>20. ஷவ்வால் மாதம் பெருநாள் ஈத் அன்று ஸவிய்யான் என்ற பலகாரம் செய்வது.<br><br>21. பெருநாள் தொழுகைக்குப் பின் ஒருவருக்கொருவா் கட்டித் தழுவுகிறது அல்லது முஸாபஹா செய்கிறது.<br><br>22. கபனுடன் தொழுகை விரிப்பு அல்லது போர்வையை வைப்பது. | 16. ரபீவுல் அகரில் ளெது நாயகத்தின் பேரில் மவுலிது பாத்திஹா ஓதினவன் காபிர்.<br><br>17. ஷ.ஃபானில் இனிப்புச் சோறு ஆக்கினவன் காபிர்.<br><br>18. ரமலான் கடைசி ஜும்ஆவில் அல்விதாஊ பயணம் அனுப்புகிற குத்பா ஓதினவன் காபிர்.<br><br>19. வாழ்நாளில் விடுபட்டதற்கு களாத் தொழுதவன் காபிர்.<br><br>20. ஷவ்வால் மாதம் பெருநாள் |

| **தேவ்பந்தி தஷ்ரீக் பீரங்கி** | **தாக்குண்டவர்கள்** |
|---|---|
| 23. கலிமா முதலானவைகளைக் கபனில் எழுதுவது.<br><br>24. கபுரில் குல்ஹுவல்லாஹு ஓதி பிடிமண் வைப்பது.<br><br>25. கபுரில் (ஸில்ஸிலா) ஷஜரா வைப்பது.<br><br>26. மூன்றாம் பாத்திஹா ஓதுவது.<br><br>27. பத்தாம் பாத்திஹா ஓதுவது.<br><br>28. நாற்பதாம் கத்தம் பாத்திஹா ஓதுவது.<br><br>29. ஆறாவது மாதக் கத்தம் பாத்திஹா ஓதுவது. | அன்று பலகாரம் செய்தவன் காபிர்.<br><br>21. இரு பெருநாள் தொழுகைக்குப் பின் கட்டித் தழுவியவன், முஸாபஹா செய்தவன் காபிர்.<br><br>22. மையித்துக் கபனுடன் தொழுகை, விரிப்பு, போர்வையை வைத்தவன் காபிர்.<br><br>23. கபனில் கலிமா எழுதியவன் காபிர்.<br><br>24. கபுரில் குல்ஹுவல்லாஹு ஓதி பிடிமண் வைத்தவன் காபிர்.<br><br>25. கபுரில் (ஸில்ஸிலா) ஷஜரா வைப்பவன் காபிர். |

| | |
|---|---|
| 30. வருஷக் கத்தம், பாத்திஹா, கந்தூரி கொடுப்பது.<br><br>31. கபுரில் போர்வை போடுவது.<br><br>32. கபுரைக் கட்டிடமாக கட்டுவது.<br><br>33. வபாத்தான ஆண்டு தேதியைக் கபுரில் எழுதுவது.<br><br>34. அங்கு விளக்கேற்றுவது.<br><br>35. கபுருகளை நாடி தூரப்பயணம் போவது.<br><br>36. இமாமைப் பின்பற்றி நடக்கும் முகல்லிது உடைய விஷயத்தில் அந்தத் தக்லீதே (இமாமைப் பின்- | 26. மையித்துக்கு மூன்றாம் நாள் பாத்திஹா ஓதினவன் காபிர்.<br><br>27. பத்தாம் நாள் பாத்திஹா ஓதினவன் காபிர்.<br><br>28. நாற்பதாம் நாள் கத்தம் பாத்திஹா ஓதினவன் காபிர்.<br><br>29. ஆறாம் மாத பாத்திஹா, கத்தம் ஓதினவன் காபிர்.<br><br>30. வருட பாத்திஹா, கந்தூரி கத்தம் ஓதினவன் காபிர்.<br><br>31. கபுரில் போர்வை போட்டவன் காபிர். |
| **தேவ்பந்தி தஷ்ரீக் பீரங்கி** | **தாக்குண்டவர்கள்** |
| பற்றி நடப்பதுவே) போதுமென்று உணருவது.<br><br>37. பெண்களுக்கு மஹர் அதிகப் பட வைப்பது.<br><br>38. தனது சரீரம், வீடு, வாசல், வாகனம் முதலானவற்றை அதிக மாக அழகுப்படுத்துவது.<br><br>*(இவை போன்ற இன்னும் சில விஷயங்களையும் எழுதிவிட்டுச் சொல்கிறார்)*<br><br>முடிவாக, இவற்றைத் தவிர ஆயிரக்கணக்கான இன்னும் பல பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கானவர்கள் இவற் | 32. கபுரைக் கட்டினவன் காபிர்.<br><br>33. கபுரில் ஆண்டு, தேதி எழுதியவன் காபிர்.<br><br>34. கபுரில் விளக்கேற்றியவன் காபிர்.<br><br>35. கபுருகளை நாடி தூரப் பிரயாணம் போனவன் காபிர்.<br><br>36. நாலு மதுஹபுகளில் ஒன்றைத் துயர்ந்து நடக்கக் கூடியவன் இமாம் சொன்னது போல் பின்பற்றி நடப்பது போதும் என்று நம்பியவன் காபிர்.<br><br>37. பெண்களுக்கு மஹர் அதிகம் |

றைச் செய்கிறார்கள்.

*(பின்னர் இந்தக் காரியங்களைச் செய்தவருக்குத் தீர்ப்பு வழங்கு கிறார்)*

எந்த மனிதன் இவைகளின் கெடுதிகளைத் தெரிந்து அதிருப்தி யாகவும், வெறுப்பாகவும் ஆகி அதை விடுவது அவனுக்குக் கஷ்ட மாக ஆகிறதோ தெளிவாகத் தெரிய வேண்டும். அந்த மனிதன், நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்க ளேயானால் என்னை (ரஸூலை)த் தொடர்ந்து நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான். (3:31) என்ற இந்த ஆயத்தன் பிரகாரம் முஸ்லிம் அல்ல (காபிரா னவன்)- தக்வியத்துல் ஈமானின் சொச்சம் தத்கீருல் இக்வான்

## தேவ்பந்தி தஷ்ரீக் பீரங்கி

பக்கம் 63, 65.

வைத்தவன் காபிர்.

38. தனது உடம்பை அதிக அழகுபடுத்தியவன் காபிர்.

39. வீடு வாசல்களை அழகுப டுத்தியவன் காபிர்.

40. வாகனங்களை அழகுபடுத்திய வன் காபிர்.

***குறிப்பு:-*** பெண்களுக்கு மஹர் இவ்வளவுதான் கொடுக்க வேண்டும். சரீரம், வீடு, வாசல், வாகனங்களை இன்ன விதத்தில்தான் அழகுபடுத்த வேண்டும் என்ற அளவை குறிப்பிட் டுக் காட்டாமல் பெண்களுக்கு அதிக மஹர் வைப்பது குப்ர், சரீரம், வீடு, வாசல், வாகனங்களை அதிகமாக அழகுபடுத்துவது குப்று

## தாக்குண்டவர்கள்

என்று எழுதி இருப்பதினால் எந்த அளவுக்கு அதிகமாய் செய்வதை குப்று என்று சொல்கிறார் என்று விளங்கவில்லை. அந்த அளவைப் பற்றி தேவுபந்தியா குதுபு ரஷீது அஹ்மதுவும் தேவுபந்தியா ஹகீ முல் உம்மத் தானவி அல்லது தேவுபந்தியா கொள்கையைப் பிரச் சாரம் செய்வதாகச் சொல்லும் தப்லீக் ஜமாஅத்தின் ஸ்தாபகர் தேவுபந்தி இல்யாஸூம் விளக்கிக் காட்டவில்லை. ஆகையால், அந்த தேவுபந்தி முதியோர்களின் சிஷ்யர் களான தற்காலத்து தேவுபந்தி யாக்களாவது அந்த அளவைப் பற்றி விளக்கிக் காட்டுவார்களா?

## சகோதரர்களே…

உங்களிடத்தில் ஒரு சிறிய நமூனாவாக இதை எடுத்துக் காட்டி இருக்கிறது. இதைக் கொண்டு நீங்கள் சிந்தித்துப் பார்த்தீர்களேயானால், உலகில் எவரையுமேஇந்த அநியாயக்காரர்களின் முஷ்ரிகாக்கும், காபிராக்கும் பீரங்கிக் கணைகளால் தாக்கப்படாதவர்களாகப் பார்க்கவே மாட்டீர்கள்…ஏன்? சர்வ உலகத்தையும் படைத்த நாயன் அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹுவதஆலாவையும் கூட அவர்களது இந்தக் கணைத் தாக்குதல்களைக் கொண்டு தாக்கப்படாத தன்மையில் காணமாட்டீர்கள்.

சிந்தித்துப் பாருங்கள், உலகில் எத்தனை பேர்கள் குலாம் ரஸூல், குலாம முஹிய்யதீன் (ரஸூலுடைய தொண்டன், முஹ்யியத்தீன் உடைய தொண்டன்) போன்ற பெயருள்ளவர்கள். முஹிய்யத்தீன் பக்ஷ், பீர்பக்ஷ்,(முஹிய்யதீன் பிச்சை, பீர் பிச்சை) அப்துந் நபி, அப்துர் ரஸூல் (நபியின் அடிமை, ரஸூலின் அடிமை) இம்மாதிரியான பெயர் உடையவர்கள் எத்தனை பேர்கள்…ஏன்? குத்புஸ்ஸமான் தைக்கா சாகிபு ஒலியுல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் மாதிஹுர் ரஸூல் சதக்கத்துல்லாஹ் ஒலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் கூடத்தான். தைக்கா சாகிபு ஒலியுல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் ‘அஹ்மதுல்லாஹ்’ கஸீதாவின் ‘யாரஹீமல் மு.ஃ.மினீன் இக்பல் துஆ அப்தின்னபி’ என்ற பைத்தில் தங்களை அப்துந் நபி (நபியின் அடிமை) என்றும், ‘தகப்பல் வஸ்தஜிப் அப்தல் புகாரி’ என்ற பைத்தில் தங்களை அப்துல் புகாரி (புகாரியின் அடிமை) என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஸதக்கத்துல்லாஹ் ஒலி நாயகம் ரலியல்லாஹு அன்ஹு யாகுத்பா கஸீதாவில் ‘வமின் அபீதிக அப்தன் தாஇ அன் அத்வம்’(உங்களின் அடிமைகளில் சதாவும் முற்றிலும் உங்களுக்கு வழிப்பட்ட அடிமையாக என்னை எடுத்துக் கொள்ளுங்கள் முஹிய்யத்தீன் ஆண்டவர்களே!) என்றும் சொல்லியிருக்கிறார்கள். அல்லாஹ்

அல்லாதவருடைய அப்து (அடிமை) என்று சொல்வது ஷிர்காக இருந்தால் அந்த ஷிர்கான வேலையை விரும்புவதும், தேடுவதும் ஷிர்குதானே.

உலகில் உத்தனை எத்தனை பேர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மவுலிது ஷரீபையும், கௌது நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மவுலிது ஷரீபையும் இமாம் ஹஸன் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் மவுலிது ஷரீபையும் ஓதியிருக்கிறார்கள். எத்தனை ஊர்களில் எத்தனை அவுலியாக்களுக்கு கந்தூரி நடத்துகிறார்கள். எத்தனை ஊர்களில் எத்தனை பேர்கள் கலியாணத்திற்கு விருந்து, கத்னாவிற்கு விருந்து, பிள்ளைக்குப் பேர்விட விருந்து, மக்களை ஓத வைப்பதற்கு விருந்து, அன்பர்களுக்கும், உறவினர்களுக்குமாக விருந்து சிற்றுண்டி கொடுத்து உபசரிப்பதற்காக கூட்டத்தை உண்டாக்குகிறார்கள்.

இன்னும்உலகில் எத்தனை பேர்கள் அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடி இருக்கிறார்கள்.

நபி சுலைமான் (அலைஹிஸ்ஸலாம்) மனிதர்களிடத்திலும், ஜின்களிடத்திலும் பல்கீஸ் உடைய சிம்மாசனத்தைக் கொண்டு வரும்படி உதவி தேடியிருக்கிறார்கள்.

துல்கர்னைன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜனங்களிடத்தில் உதவி தேடியிருக்கிறார்கள்.

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும்,

'உங்களில் யாராவது ஒரு வஸ்து களவு கொடுத்தானேயானால் அவன் அல்லாஹ் உடைய அடியார்களே எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூப்பிடட்டும் என்று உரைத்துள்ளார்கள்.

அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடுவது ஷிர்க் என்றிருந்தால் அந்த ஷிர்கான கருமத்தைச் செய்யும்படி சொல்வதும் ஷிக்குதானே.

ஸவாதிபுனு காரிபு என்ற ஸஹாபி ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் உதவி தேடியிருக்கிறார்கள்.

இமாம் ஜெயினுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் உதவி தேடியிருக்கிறார்கள். இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் உதவி தேடியிருக்கிறார்கள்.

இமாம் ஷாபியீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரஸூலுல்லாஹி ஸ ல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பிச்சளங்களைக் கொண்டு உதவி தேடியிருக்கிறார்கள்.

ஸெய்யிதுனா கௌதுல் அ∴லம் முஹிய்யதீனு அப்துல் காதிரு ஜெய்லானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய முரீதீன்களை முஹிப்பீன்களை எந்தக் கஷ்டங்களையும் விட்டும் காப்பாற்றுவேன். அவர்களுக்கு உதவி செய்வேன். எந்தக் கஷ்டமான சமயத்திலும் என்னிடம் உதவி தேடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதெபோல் ஷெய்கு அஹ்மது ஜர்ருக்கு ரஹிமஹுல்லாஹ், முஹம்மது பாஸி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் எந்தக் கஷ்டங்கள் வந்தாலும் என்னைக் கூப்பிடுங்கள். என்னிடத்தில் உதவி தேடுங்கள். உதவி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் உதவி தேடுவது ஷிர்கு என்றிருந்தால் அப்படி ஷிர்கான வேலையைச் செய்யும்படி உதவி தேடும்படி சொல்வதும் ஷிர்கல்லவா?

அல்லாஹ் அல்லாதவர்களுக்கு ஸுஜூது செய்வது எந்த விதத்தினாலும் சரி ஷிர்காகுமானால் நபி யூசுபு அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவர்களின் சகோதரர்களும் தகப்பனார் ய∴கூபு அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஸுஜூது செய்தவர்களாக விழவில்லையா?

மலாயிக்கத்துகளெல்லாம் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூது செய்யவில்லையா? செய்யும்படி அல்லாஹ் ஏவவில்லையா? அல்லாஹ் அல்லாதவர்களுக்கு பொதுப்படையாக எந்தவிதமான ஸுஜூதாகவும் ஸுஜூது செய்வது ஷிர்காக இருந்தால் அந்த வேலையைச் செய்யும்படி சொல்வதும் ஷிர்கல்லவா? (ஸுஜூது

பற்றிய விபரத்தை 27 ம் பக்கம் பார்க்கவும்) ஆகவே, இந்த அக்கிரமக்காரர்களின் தீர்ப்புப்படி இவர்களின் முஷ்ரிகாக்கும், காபிராக்கும் பீரங்கி தாக்குதலை விட்டம் நபிமார்களும், அவுலியாக்களும், உலகிலுள்ள ஏனைய முஸ்லிம்களும் ஏன் சர்வ உலகத்தையும் படைத்த நாயனும் கூட தப்பவே முடியாது. மேலும் இந்த அக்கிரமக்காரர்களின் மூதாதைகளும், பெற்றோர்களும் கூட தப்ப முடியாது. தப்லீக் (இல்லை, தப்லீஹ் THABLEEH -மக்களை மடையர்களாக்கும்) ஜமாஅத்தின் ஸ்தாபகர் மௌலவி இல்யாஸின் பாட்டன் பெயர் ‘குலாம் ஹுஸைன்’ முப்பாட்டன் பெயர் ‘குலாம் முஹியத்தீன்’ (தீனி தாவது பக்கம் 34). அவரின் ஞான குரு குத்பு ரஷீது அஹ்மதின் பாட்டன் பெயர் ‘பீர் பக்ஷ்’(பீர் பிச்சை) பூட்டன் பெயர் ‘குலாம் ஹஸன்’(ஹஸனின் தொண்டன்) முப்பாட்டன் பெயர் ‘குலாம் அலி’ (mypapd; njhz;ld;) mthpd; jhahhpd; ghl;ld; ngah; ‘ghPJ gf;~;’ (ghPjpd; gpr;ir) Kg;ghl;ldpd; je;ij ngah; ‘Fyhk; K`k;kJ’(K`k;kJtpd; njhz;ld;)-jj;fpwJw; u\PJ 2k; ghfk;> gf;fk;13.

mth;fspd; jPh;g;Gg;gb ,th;fnsy;yhk; K~;hpf;Ffshfp tpl;lhh;fs; NkYk; K~;hpf;fhd ,e;j %jhijfSf;Fk; %jhl;bfshd mth;fspd; K];ypk; ngz;rhjpfSf;Fk; ,ilapy; eilngw;Ws;s epfh`; $Lkh? $lhj epfh`pdhy; Md ngQ;rhjp GU~h;fSf;Fg; gpwe;jth;fs; `yhyhd gps;isfsh? my;yJ `uhkhd gps;isfsh? ,Jhd; ,e;j mepahaf;fhuh;fspd; jPh;g;Gfspdhy; Vw;glf; $baJ. ,d;dhypy;yh`p t ,d;dh ,iy`p uh[pCd;. kMjy;yh`;. ,k;khjphpahd jPh;g;Gfs; kdjpYk; $l Cryhlhky; my;yh`; fhg;ghw;Wthdhf.

rq;iff;Fhpa Neah;fNs> t`;`hgpfs; ]{d;dj;J ty; [khmj;jhh;fs; Mfpa ,U $l;lj;jhh;fspd; nfhs;iffisg; gw;wp jf;f Mjhuq;fNshL vjph; vjpuhf cq;fs; Kd;dpiyapy; njspTgl vLj;Jf; $wg;gl;Ls;sJ. ,dp cq;fs; tpUg;gk; vJNth mjd;gb nra;Jf; nfhs;Sq;fs;.

rh;t rf;jDk;> rpU\;bfspd; gpuhh;j;jidia xg;Gf; nfhs;gtDk;> vjhh;j;jj;jpy; tzf;fj;jpw;FhpatDk;> md;Gk; mUSk; cilNahDkhfpa my;yh`;tplj;jpy; vy;yh kf;fSf;Fk; rj;jpaj;ijAk; cz;ikiaAk; xg;Gf; nfhs;sf; $ba Mw;wiyf; nfhLj;J ey;Yjtp nra;Ak;gb kpfj; jho;ikNahLk;> gzpNthLk; Ntz;bf; nfhs;fpNwd;. mtNd rPhpa ghijapy; Neh;top fhl;Lgtd;.

ek;Kila gpuhh;j;jidapd; ,Wjpthrfk;> rh;tGfOk; cyfj;jhh;fis ,ul;rpj;Jf; fhg;ghw;Wk; my;yh`;Tf;Nf vd;gjhk;. ]ythj;Jk; ]yhKk; J}jh;fspd; jpyfk; vq;fs; ehafk; ]y;yy;yh`{ miy`p t]y;yk; mth;fs; NghpYk;> mth;fsJ fpisQh;fs; NghpYk; mth;fsJ Njhoh;fs; NghpYk; mth;fsJ ck;kj;jpYs;s mTypahf;fs; kPjpYk;> mth;fsJ khh;f;fj;jpYs;s Nkijfs; kPjpYk;> ey;ybahh;fs; midth; kPjpYk; rh;t fhyKk; cz;lhtjhf Mkpd;.

*Kw;Wk;.*